விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 21 செவ்வாய்க்கிழமை (06.08.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 230

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

# காணி, பொலிஸ் அதிகாரங்களை வடக்கிற்கு வழங்க முடியாது

## அமைச்சர் ஹெகலிய மீண்டும் தெரிவிப்பு

**வட மாகாணத்திற்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது. அவ்வாறு அதிகாரங்களை வழங்கி நாட்டை மீண்டும் பிளவுபடுத்த அரசாங்கம் தயாரில்லை என ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்ல மீண்டும் தெரிவித்துள்ளார்.**



கட்டுகஸ்தோட்டையில இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்,

"சுமார் 30 ஆண்டுகள் நாட்டை பீடித்திருந்த யுத்தத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முடிவுக்கு கொண்டு வந்துள்ளார். இன்று நாட்டில் குண்டு வெடிப்பதில்லை. நாட்டின் நாலாபுறத்திற் கும்செல்ல முடியும். ஆனாலும் சர்வதேச மட்டத்தில் இன்னும் பிரிவினையை முன்னெடுக்க சில சக்திகள் தீவிரமாக உழைத்துக்கொண்டுள்ளது. எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்கள் மூலம் நாம் சர்வதேசத்திற்கு எமது நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும்.

அதனால் வட மாகாண சபை தேர்தல் எமது நாட்டுக்கு மிக முக்கியமானதாகும். சர்வதேசத்தில் எமது நாட்டிக்கு எதிராக செயற்படுபவர்கள் பல கனவுக் கோட்டைகளை கட்டியுள்ளனர். முப்பது வருட கால யுத்ததால் பெற முடியாது போன பிரிவினையை அரசியல் பலத்தின் மூலம் செய்ய அவர்கள் திட்டமிடுகின்றனர்.

எமது மக்கள் உயிர் தியாகம் செய்து பாதுகாத்த நாட்டை மீண்டும் துண்டுபோடுவதற்க அரசாங்கம் ஒரு போதும் இடமளிக்காது.

வட மாகாணத்திற்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்கி முப்பது வருடம் யுத்தம் செய்து ஆயுதத்தால் பெற முடியாது போன பிரிவினையை (20 ஆம் பக்கம் பார்க்க)

# வெலிவேரிய சம்பவம் எமக்குத் தொடர்பில்லை

## பொதுபல சேனா அறிவிப்பு



(கொழும்பு)

வெலிவேரிய வன்முறைகளின் பின்னணியில் தமது அமைப்பு இருந்தாக கூறப்படும் குற்றச்சாட்டை இலங்கையின் அடிப்படைவாத பொது பல சேனா மறுத்துள்ளது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைப் பிரஜை இத்தாலியில் கொலை

இத்தாலியின் சென்ட் ஓமேரோ பகுதியில் இரண்டு இலங்கை பிரஜ்ஜகளுக்கு இடையே ஏற்பட்ட மோதல் சம்பவம் ஒன்றில் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக இத்தாலிய பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் 30 வயதான கெலும் நாணயக்கார என்பவர் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டுள்ளதாக இத்தாலிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் 29 வயதான கே.பி. உதார சந்திம என்ற இலங்கை பிரஜை கத்தியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

அயல் வீடுகளில் வசித்து வந்த இவர்கள் மதுபானம் அருந்தியிருக்கலாம் எனவும் இதன் பின்னர் இவர்களுக்கு இடையில் ஏற்பட்ட பிரச்சினையில் இந்த சம்பவம் நடந்திருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் கொல்லப்பட்ட நபர் இத்தாலிய நிறுவனம் ஒன்றில் சிற்றூழியராக பணியாற்றி வந்தவர் எனவும் அவர் ஒரு பிள்ளையின் தந்தை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

# மற்றுமொரு சடலம் புங்குடுதீவில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு 10ஆம் வட்டாரம் கடற்கரைப்பகுதியில் நேற்றைய தினம் ஆண் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியுள்ளது.

36-40 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலமே உருக்குலைந்த நிலையில் கரை ஒதுங்கியுள்ளது எனினும் உயிரிழந்தவரது பெயர்விபரங்கள் நேற்று இரவுவரை அறியப்படவில்லை.

பிற்பகல் 2.30 மணியளவில் ஊர்காவற்துறை பொலிஸார் மேற்படி சடலத்தை மீட்டுள்ளனர்.

யாழ் தீவகக் கடற்கரைப் பகுதில் இதுவரை 7 சடலங்கள் கரை ஒதுங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-6)




கொழும்பு தெற்கு துறைமுகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பாரிய கொள்கலன் களஞ்சியசாலை மற்றும் இறங்குதுறையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்த போது...

# வெலிவேரிய எதிரொலி கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

"உரிமைகளுக்காக போராடும் மக்களுக்கு அரசாங்கம் துப்பாக்கிச் சூடு" அந்த அடக்கு முறைக்கு எதிராக போராடுவோம் என கூளுரைத்து நேற்று மாலை ஜனநாயக மக்கள் இயக்கம் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், தொழிற்சங்க வாதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது "பொய்யான கதைகள் வேண்டாம்", "மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்று", "குடிநீர் கேட்ட மக்களுக்கு துப்பாக்கிச் சூடு", "உரிமைக்காக ஒன்றிணைவோம்" , " மக்களின் பிரச்சினைகளுக்கு அரசிடம் தீர்வு இல்லை" போன்ற கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (எ-11)

# இன்ஸ்பெக்டர் ஜெயரட்ணத்தை கடத்தியது புலிகளே!

## பொலிஸார் வெளியிட்ட புதிய தகவல்!!

(கொழும்பு)

கொழும்பில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்ட பொலிஸின் புலனாய்வுத்துறை நிபுணரான இன்ஸ்பெக்டர் ஜெயரட்ணம் மற்றும் படைத்தரப்பின் கப்டன் ஆகியோரை தமிழீழ விடுதலைப் புலிகளே கொன்றதாக பொலிஸ்ர் தெரிவித்துள்ளனர்.

இத்தகவலை விடுதலைப் புலி களின் புலனாய்வுப் பிரிவில் கபில் அம்மான் தலைமையில் இயங்கிய முன்னாள் உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கல்கிசை பொலிஸ் நிலையத்தில் தீவிரவாத விசாரணைப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த பொலிஸின் புலனாய்வுத்துறை நிபுணரான இன்ஸ்பெக்டர் ஜெயரட்ணம கல்கிசையில் உள்ள விடுதி ஒன்றில் வைத்து 2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி கடத்தப்பட்டு காணாமல் போயிருந்தார். வெள்ளை வாகனம் ஒன்றில் கடத்தப்பட்ட இவர் கிளிநொச்சிக்குக் கொண்டு செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக கபில் அம்மான் தலைமையில் இயங்கிய முன்னாள் உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

இன்ஸ்பெக்டர் ஜெயரட்ணம் மற்றும் படைத்தரப்பின் கப்டன் உள்ளிட்ட தாம் கைது செய்து வைத் (19 ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டணியிலிருந்து வெளியேறலாம்

## முஸ்லிம் காங்கிரஸுக்கு அரசு அறிவுரை

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் கொள்கைளை ஏற்று இணைந்து செயற்பட முடியாத பட்சத்தில் அரசாங்கத்திலிருந்துவெளியேறி விடுவதே சாலச் சிறந்ததென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிக்கு அரசாங்க உயர மட்டத்தில் இருந்து கடும் அறிவுரையொன்று வழங்கப்பட்டுள்ளது [illegible]

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்கும், அரச உயர்மட்டப் பிரமுகர் ஒருவருக்கும் இடையில சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற முக்கிய சந்திப்பொன்றின்போதே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதாக தெரிகின்றது.

வடக்கு, (19 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 வயது சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம்

புத்தளம் தங்கொட்டுவ பிரதேசத்தை சேர்ந்த 15 வயது சிறுமி பலவந்தமாக கடத்திச் செல்லப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தங்கொட்டுவ சந்தலங்காவ எட்டஓம்ப காவத்தை பிரதேசத்தை சேர்ந்த சிறுமியே இவ்வாறு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

10-வது ஆண்டில் கல்வி பயிலும் மேற்படி சிறுமியின் தாய் வெளிநாட்டில் தொழில் புரிந்து வருகிறார்.

சிறுமி, தந்தை மற்றும் பாட்டியுடன் வீட்டில் வசித்து வந்துள்ளார். இந்த நிலையில் கடந்த மாதம் 7-ம் திகதி சிறுமி திடீரென காணாமல் போனதை அடுத்து பாட்டி தங்கொட்டுவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

இதனிடையே காணாமல் போன சிறுமி அண்மையில் திடீரென வீட்டிற்கு வந்துள்ளார். தன்னுடன் காதல் தொடர்புகளை கொண்டிருந்த ஒருவர் தன்னை கொழும்பு பிலியந்தல பிரதேசத்திற்கு அழைத்து சென்று வீடொன்றில் தடுத்து வைத்து பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக சிறுமி கூறியுள்ளார்.

தனது பேர்த்தி வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதை உணர்ந்த பாட்டி சம்பவம் குறித்து தங்கொட்டுவ பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

எனினும் சந்தேக நபர் இதுவரை கைது செய்யப்படவில்லை. பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-11)

# மூழ்கும் கப்பலில் ஏறிய தயாசிறி துரதிர்ஷ்டசாலி

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

தயாசிறி ஜயசேகர என்பவர் அதிர்ஷ்டசாலி என்பதை விட துரதிர்ஷ்டசாலி என்பது தற்போது உறுதிப்படுத்தப்பட்டு விட்டது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

குருநாகலில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தயாசிறி ஜயசேகர ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருக்கும் போது உள்ளூராட்சி சபைத்தேர்தலில் அதிகளவான விருப்பு வாக்குகளை பெற்றார். ஆனால் அவருக்கு பண்டுவஸ்நுவர பிரதேச சபை தலைவராகவோ உப தலைவராகவோ வர முடியாமல் போனது.

தொலைக்காட்சியில் நடைபெற்ற மெகா ஸ்டார் போட்டியில் அவர் முதலிடத்தை பெறுவார் என முழு நாடும் எதிர்பார்த்தது. ஆனால் அதுவும் அவருக்கு கிடைக்கவில்லை.

ஐக்கிய தேசியக்கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவிக்கு போட்டியிட்டார் அதிலும் அவர் தோல்வியடைந்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் அதிக விருப்பு வாக்குகளை அவர் பெற்றார். ஆனால் அது பற்றி நான் எதனையும் கூறப்போவதில்லை. தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் வடமேல் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகிறார்.

தயாசிறி ஜயசேகரவை விட அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவின் மகன் அதிகமான விருப்பு வாக்குகளை பெறுவார் என அரச சோதிடரான சுமணதாச அபேகுணவர்த்தன எதிர்வு கூறியுள்ளார்.

இதன் மூலம் தயாசிறி ஜயசேகர எவ்வளவு துரதிர்ஷ்டசாலி என்பது தெளிவாகியுள்ளது. மூழ்கும் கப்பலில் எவரும் ஏறமாட்டார்கள் என்பதால் தயாசிறி ஜயசேகர தனது ஜாதகத்தை பார்த்து கொள்ளுமாறு அவருக்கு தெரியப்படுத்த விரும்புகிறேன் என்றார். (செ-11)

# கண்மணி மாதா ஆலயத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

கிளாலி தூய கண்மணி மாதா ஆலயத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

நவநாள் வழிபாடுகள் தினமும் பிற்பகல் 5 மணிக்கு இடம் பெறும். எதிர்வரும் 14-ம் திகதி பிற்பகல் 5 மணிக்கு நற்கருணை ஆராதனை வழிபாடுகள் நடைபெற்று மறுநாள் வியாழக்கிழமை காலை 6.45 மணிக்கு திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இதேவேளை மேற்படி திருவிழாவுக்கென 10 நாட்களும் விசேட பேருந்து சேவை ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளதாக பங்குத்தந்தை அறிவித்துள்ளார்.

இதன்படி நவநாட்களில் அடியார்கள் பங்கேற்பதற்கு வசதியாக பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கிளாலி மாதா கோவில் நோக்கி பேருந்து புறப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-5)

# பெரிய கப்பல்களுக்கு வசதியாக கொழும்புத் துறைமுகம் அபிவிருத்தி!

## • ஜனாதிபதியால் நேற்று திறந்துவைப்பு

இலங்கையில் கொழும்புத் துறைமுகம் பாரிய உட்கட்டமைப்பு வசதிகளுடன் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் பிரதான துறைமுகத்துக்குள் பெரிய கப்பல்கள் பிரவேசிப்பதற்கு வசதியாக இந்த விரிபுபடுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்புத் துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்தின் முதற்கட்டமான தெற்கு-கொழும்பு முனையத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று திங்கட்கிழமை காலை திறந்து வைத்தார்.

சுமார் 250 கோடி டாலர் மதிப்பிலான இந்த செயற்திட்டத்தின் 85 வீத செலவீனத்தை சீன அரசு வழங்கியுள்ளது. மிகுதி 15 வீதத்தை இலங்கை அரசு செலவிட்டுள்ளது.

பெரியளவான கொள்கலன்களை ஏற்றிய கப்பல்கள் தரித்து நிற்பதற்கு வசதியாக இந்த தெற்கு துறைமுக முனையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலும் அண்டை நாடுகளிலும் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருவதாக இந்தியாவுக்கு கவலைகள் உள்ள நிலையில் இலங்கையின் மற்றுமொரு துறைமுக செயற்திட்டம் சீனாவின் உதவியில் நடந்துள்ளது.

ஆனால் இந்தக் துறைமுகத்தை இராணுவத் தேவைகளுக்காக வெளிநாட்டுச் சக்திகள் பயன்படுத்த இடமளிக்கப்படமாட்டாது என்று இலங்கை அரசாங்கம் கூறுகின்றது.

கொழும்புத் துறைமுக அபிவிருத்தியின் மூலம் இந்தியத் துணைக் கண்டப் பிராந்தியத்துக்குள் பெருமளவிலான கப்பல் போக்குவரத்துக்களை ஈர்க்க முடியும் என்று இலங்கை அதிகாரிகள் கூறுகின்றனர். (செ-11)

# முன்னாள் அதிபர் காலமானார்

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி ஸ்ரீமதி குமாரசாமி நேற்று லண்டனில் காலமானார். அவருக்கு வயது 83.

இராமநாதன் கல்லூரியில் 28 ஆண்டுகள் ஆசிரியராக இருந்த இவர், 1988களில் கல்லூரின்அதிபராகக் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந)

# கிராமிய கைத்தொழில் கண்காட்சி நாளை

(யாழ்ப்பாணம்)

கிராம அபிவிருத்தி திணைக்களம், தொழிற்துறைத் திணைக்களம் ஆகியன இணைந்து நடத்தும் மாகாணக் கிராமியக் கைத்தொழில் கண்காட்சி நாளை புதன்கிழமையும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை உள்ளூராட்சி மன்ற செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் தலைமையில் கைதடி நவீல்ட் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, சிறப்பு விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் ஆர்.விஜயலக்சுமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)




## கடலென நின்ற கண்ணீர்த் துளிகள் ...

எமது நிறுவனத்தில்
கணனி வடிவமைப்பாளராக பணிபுரிந்த
அமரர்
**கனகசபாபதி சபாநாதன்**
(நாதன்)

தோற்றம்
19.06.1981

மறைவு
04.08.2013

*நாதனே.....! எம்நடுவிலே நின்று நாளும்*
*சேவையால், மனது கொண்ட நேசனே ....*
*ஏது நாம் சொல்வோம் நாதா,*
*ஏங்கிடப் பொழுது தந்த பாசமே ....*

*ஓடலை எம்முள் ஒன்றும், ஒப்பிலான் தன்னை விட்டோம் - நீ*
*கணினியின் முன்னால் நின்றால், கதை பல பேசும் கைகள் ... நீ*
*தணனித் திரையதன் முன்னமர்ந்து தீரனே கையசைந்தால்*
*அழகுறும் திரைமலர்ந்து, ஆக்குவாய் கலைத் திறன்கள் ....,*

**"மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ்"** *ஒளியிழந்து, மாய்ந்து இன்றாய் நீயும்*
*இனியிலை என்று ஆச்சோ ...? இனியனே உன்கைபட்ட*
*கணினியன் கதையும் போச்சோ...? கண்ணனே எம்முள் நிற்கும்*
*ஒருநிலை கெட்டதாச்சோ...? ஓடி நீ சென்றதேனோ....?*

*மனமெலாம் பதைக்குதையா*
*மாண்பனே எம்முள் வாழ்வாய் ....*

எம் இனிய நண்பனின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு, எம் அன்பு நண்பனின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கலங்கிய விழிகளுடன்
மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ் நிறுவனத்தினர்
15/2, முருகேசர் லேன், நல்லூர்.

(C-4231)


# (தொலைபேசி மிரட்டல்)

# மூன்று சந்தேக நபர்களுக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

வடமராட்சி புலோலி துறையான்மூலை பகுதியில் கையடக்கத் தொலைபேசி மூலம் மிரட்டி பணம் பறிக்க முற்பட்ட 3 சந்தேக நபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

மேற்படி பகுதியில் சம்பவ தினம் இளம் பெண்ணொருவரை கையடக்கத் தொலைபேசி மூலம் மிரட்டி 3 இலட்சம் ரூபா பணம் தருமாறு வற்புறுத்தியதாக குற்றச்சாட்டப்பட்ட மூன்று சந்தேக நபர்களையும் பருத்தித் துறைப் பொலிஸார் கைது செய்தனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய புலோலி காந்தியூர்ப் பகுதியைச் சேர்ந்த இரு நபர்களும் அல்வாய் வடக்கைச் சேர்ந்த ஒருவரும் கடந்த 31ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வழக்கு நேற்றைய தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த மூன்று நபர்களின் சார்பாக ஆஜராகிய சட்டத்தரணி பிணை மனுகோரிய போது அதற்கு பொலிஸார் ஆட்சேபனை தெரிவித்தமையால் குறித்த மூன்று சந்தேக நபர்களையும் எதிர் வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (செ-9-24)


**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
☛ கடிதங்கள் ☛ அன்பளிப்பு பொருட்கள் ☛ உடுபுடவைகள்
☛ CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து
Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021 222 5392

WESTERN UNION MONEY TRANSFER

(C-4227)

**பிள்ளையார் இன்**

இன்று முதல் அதிவிசேட 25% விலைக் கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவை யுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

**இன்றைய விசேட உணவு:**

✔ தோசை (உருளைக் கிழங்கு கறியுடன்) ரூபா 80/-
✔ மசாலா தோசை (உருள்ளக் கிழங்கு கறியுடன்)
மசாலாபூரி சப்பாத்தி (உருளைக் கிழங்கு கறியுடன்)

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(C-4228)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### சட்டமும் சட்டையும்

எனக்கு ஒரு நண்பர். அவர் ஒரு வழக்கறிஞர். ஒருநாள் அவரிடம் கதைத்துக் கொண்டிருந்தேன்.

அப்போது கேட்டேன்... "ஏன் சேர்! நீங்கள் நீதிமன்றில் வாதாடும்போது கறுப்புநிற அங்கி அணிந்து கொள்கிறீர்களே... அதற்கு என்ன காரணம்? சட்டத்திற்கும் கறுப்பு நிறத்திற்கும் என்ன தொடர்பு?" என்றேன்.

"அது ஒரு சுவாரஸ்யமான கதை" என்றேன்.

"சொல்லுங்கள் கேட்போம்" என்று சொன்னேன்.

கி.பி 1694 ஆம் ஆண்டிலே இங்கிலாந்து அரசி இரண்டாவது மேரி இறந்து போனார். அந்த ராணியின் கணவன் மூன்றாம் வில்லியம். அவர் ஒரு உத்தரவிட்டார்.

அரசியினுடைய மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கிற வகையிலே வழக்கறிஞர் அனைவரும் கறுப்புநிற அங்கி அணிய வேண்டும் என்றார்.

அன்று ஆரம்பித்த அந்தப் பழக்கம் இன்று வரை மாறவே இல்லை.

வழக்கறிஞர்கள் முதலிலே கறுப்பு அங்கி மட்டும் தான் அணிந்தார்கள். அதிலே ஒரு சிறிய சங்கடம்.

ஏற்கனவே உடம்பு கறுப்பாக இருப்பவர்கள் அதற்கு மேலே கறுப்பு நிற உடை வேறாக அணிந்து கொண்டால், முகம் 'பளிச்' என்று தெரியாது தானே.

அதனால் முகம் பளிச்சென்று தெரிவதற்காக அவர்கள் வெள்ளை நிறபட்டியை அணிய ஆரம்பித்தார்கள்.

இப்படியாக இங்கிலாந்திலே அந்தப் பழக்கம் வழமைக்கு வந்தது.

அந்த சமயத்திலே இந்தியாவை ஆட்சி செய்தனர் பிரிட்டிஷ்காரர்கள்.

அதனாலே அங்கேயும் அந்தப் பழக்கம் நடைமுறைக்கு வந்தது.

இங்கிலாந்து நீதிமன்றம் மிகவும் மதிப்பு வாய்ந்த இடம். அந்த அளவிற்கு சட்டத்திற்கு அங்கே மதிப்பு.

இந்தக் காலத்தில் குற்றவாளிகள் நீதிமன்றில் நிறுத்தப்பட்டாலும் மறுகணம் அதே குற்றத்தை இழைக்கிறார்கள்.

சட்டம் ஒரு இருட்டறை. அதில் வக்கீலின் வாதம் ஒரு வெளிச்சம் என்கிறார்கள்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# கொழும்பு கொள்கலன்மையம் படைத்துறைத் தேவைக்கல்ல

## டில்லிக்கு கொழும்பு வாக்குறுதி

கொழும்பில் சீனா அமைத்துள்ள புதிய கொள்கலன் துறைமுகத்தை எந்தவொரு படைத்துறை சார்ந்த தேவைகளுக்காகவும் பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது என்று இந்தியாவுக்கு இலங்கை அரசாங்கம் உறுதியளித் துள்ளதாக ரைம்ஸ் ஒவ் இந்தியா தெரிவித்துள்ளது.

சீனாவால் 500 மில்லியன் டொலர் செலவில் இந்த சர்வதேச கொள் கலன் மையம் கொழும்புத் துறை முகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கொழும்புத் துறை முகத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த சர்வதேச கொள்கலன் மையம் சீனா இந்தியப் பெருங்கடலில் நுழைவதற்கான மாற்று கடற்பாதையை அமைக்கும் வகையில் அமைந்துள்ளதாக ரைம்ஸ் ஒவ் இந்தியா குறிப்பிட்டுள்ளது. அதேபோன்று அம்பாந்தோட்டையில் 450 மில்லியன் டொலர் செலவில், சீனா அமைத்த துறை முகத்தை திறந்த போதும், இத்தகையதொரு உறுதிமொழியை இலங்கை அரசாங்கம் இந்தியாவுக்கு வழங்கியதாகவும் இவ்வூடகம் தெரிவித்துள்ளது.

கிழக்குக்கும் மேற்குக்குமிடையிலான சர்வதேசகடற்பாதைக்குநடுவில் அமைந்துள்ள இந்த கொள்கலன் மையத்தின் 85 சத வீதம் மேர்ச்சன்ட் ஹோல் டிங்ஸ் இன்ரநஷனல் எனும் நிறுவனத்துக்கு சொந்தமானது.

இந்த சர்வதேச கொள் கலன் மையம் இன்று இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவால் திறந்து வைக்கப்படவுள்ளது.

அதேவேளை இந்து சமுத்திர பிராந்தியத்தின் மூலோபாய கேந்திர முக்கியத்துவம் கொண்ட கொழும்புத் துறை முகத்தில் அமைந்துள்ள இந்தக் கொள்கலன் மையத்தில் சீனா முதலீடு செய்துள்ளமை தொடர்பில் புதுடில்லி அச்சம் கொண்டுள்ளது. இதன் மூலம் தனது விநியோகப் பாதையை சீனா தக்கவைத்துக் கொண்டுள்ளதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பனை தறித்தவர்களில் ஒருவர் கைதானார்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டிப் பகுதியில் சட்டவிரோதமாக பனை மரங்களைத் தரித்து வந்தவர்களில் ஒருவர் தெல்லிப்பழை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இவர்களால் தறித்து வீழ்த்தப்பட்ட சுமார் 27 பனைமரங்கள் பனை அபிவிருத்திச் சபையினால் மீட்கப்பட்டு தெல்லிப்பழை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுமுள்ளன.

பனை அபிவிருத்திச் சபையின் வெளிக்கள உத்தியோகத்தர்களால் கடந்த வியாழக்கிழமை மாலை நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட இவ் அதிரடி நடவடிக்கையில் மேற்படி குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டதோடு தறிக்கப்பட்ட பனை மரங்கள் மீட்கப்பட்டும் தறிக்கப்படவிருந்த பனைமரங்களும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

எனினும் சட்ட விரோதமான முறையில் இடம்பெற்று வந்த குறித்த பனைமரம் தறிப்பு செயற்பாட்டில் பலர் சம்பந்தப்பட்டிருந்த போதும் சம்பவ இடத்திற்கு பொலிஸார் சென்றபோது அனைவரும் தப்பி ஓடியுள்ளனர். இந்நிலையில் பொலிஸாரால் மேற் குறித்த நபர் மட்டும் கைது செய்யப்பட்டார்.

பனை மரங்கள் தறித்தலானது சட்டவிரோதமானது என்பதுடன் அத்தியாவசிய தேவைகளுக்கு பனை அபிவிருத்திச் சபையின் சிபார்சுகளுடன் பிரதேச செயலகங்களால் அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது. இருப்பினும் பனை தறித்தலை வியாபார நோக்காகக் கொண்ட சிலகும்பல்கள் சட்டவிரோதமான முறையில் பெருமளவிலான பனைகளை இவ்வாறு தறித்து வருவதுடன் அவர்கள் இலகுவில் தப்பித்தும் விடுகின்றனர்.

இவ்வாறு தமக்கு அருகாமையில் பெருமளவு பனைகள் தறிக்கப்படும் சந்தர்ப் பங்களில் பொதுமக்கள், பொது அமைப்புக்கள் விழிப்புடன் செயற்பட்டு உடனடியாக பனை அபிவிருத்திச் சபைக்கோ அல்லது பொலிஸாருக்கோ தகவல் வழங்கும் பட்சத்தில் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்வதை கட்டுப்படுத்துவதுடன் பனை வளத்தை பாதுகாக்கக்கூடியதாகவும் இருக்கும் என அபிவிருத்திச் சபை குறிப்பிட்டுள்ளது. (அ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 100 | 100 |
| தக்காளி | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 |
| கோவா | 100 | 120 |
| கரட் | 140 | 160 |
| பூசணி | 60 | 40 |
| புடோல் | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 160 |
| பெரிய வெங்காயம் | 90 | 120 |
| பாகற்காய் | 140 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 |
| பயற்றங்காய் | 120 | 60 |
| லீக்ஸ் | 140 | 140 |
| பீற்றூட் | 40 | 60 |
| கறிமிளகாய் | 100 | 120 |
| முருங்கைக்காய் | 40 | 60 |
| போஞ்சி | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | — | — |
| கீரை - 1 பிடி | 10 | 25 |
| தேசிக்காய் | 250 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 35-40 |
| இராசவள்ளி | 100 | 120 |

## இராசி பலன்

*06.08.2013*
*(ஆடி 21, செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு*
*அமாவாசை பின்னிரவு 3.58 மணிவரை*
*பூசம் முன்னிரவு 9.03 மணிவரை*
*இராகுகாலம் 3.04-4.34 மணிவரை*
*சுபநேரம் 10.34-12.04 மணிவரை*
*மூன்றாம் ஆடிச் செவ்வாய்,*
*ஆடி அமாவாசை விரதம்*

**மேடம்** வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் நாள், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க பிரியப்படுவீர்கள், பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள், அந்நியர் சந்திப்புண்டு.

**மிதுனம்** இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், மாமன் மைத்துனர் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும் தனவரவுகள் திருப்திகரமாக அமையும்.

**கடகம்** பெரியோர் சந்திப்புண்டு, ஆழ்ந்த சிந்தனையுண்டு, நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிங்கம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சஞ்சலங்கள் அதிகரிக்கும் நாள்.

**கன்னி** தடைப்பட்ட காரியங்கள் எளிதில் கைகூடும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், திடீர் பணவரவு மனதிற்கு சந்தோசத்தைக் கொடுக்கும், போசன நன்மையுண்டு.

**துலாம்** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வருமானம் திருப்தி தரும், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், சந்தோசம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** எதிர்பாராத காரியமொன்று இன்று நடைபெறலாம், பயணங்களால் பலனுண்டு, தொழில் வளர்ச்சிக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**தனுசு** திட்டமிட்ட காரியங்களில் சிறுதடை தாமதங்கள் ஏற்படலாம், பயணங்களால் மன உளைச்சல்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், உறவினர்கள் உதவி செய்ய முன்வருவர், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், முயற்சிகள் கைகூடும்.

**கும்பம்** உடல்நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மீனம்** வியாபார விருத்தியுண்டு, பணத் தேவைகள் பூர்த்தியாகும், அரைகுறையாக இருந்த பணிகளை ஒவ்வொன்றாகச் செய்து முடிப்பீர்கள், எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரர்கள் இருவருக்கு பகிரங்க பிடியாணை

(கரவெட்டி)


அவுஸ்திரேலியாவுக்குசட்டவிரோதமாக படகில் தப்பிச் சென்ற சகோதரர்கள் இருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை பகிரங்க பிடியாணை பிறப்பித்துள்ளது.


பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் சண்டை வழக்கொன்றில் மேற்படி இரு நபர்களும் முக்கிய சந்தேக நபர்களாக உள்ளனர். இவ் வழக்கு விசாரணை நேற்றையதினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது மன்றில் எதிரிகளாக இரு சகோதரர்கள் மட்டுமல்லாது அவர்களது தந்தையும் இருந்ததன் காரணமாக தந்தை மட்டுமே மன்றில் ஆஜராகியிருந்தார்.

தந்தையிடம் நீதவான் விசாரணை செய்த போது குறித்த மகன்மார் இருவரும் அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக சென்றுவிட்டமை தெரியவந்தது.

இதன்படி குறித்த இரு சந்தேக நபர்களுக்கும் நீதவான் பகிரங்க பிடியாணை பிறப்பித்ததுடன் வழக்கை ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (அ-9-24)



நன்றி: மிரர்

# சண்டையில் ஈடுபட்ட பெண்களுக்கு சமூகப்பணியில் ஈடுபட உத்தரவு

(கரவெட்டி)

பருத்தித்துறை நகரப்பகுதியில் கடந்த 31 ஆம் திகதி புதன்கிழமை பொதுமக்கள் மத்தியில் சண்டையில் ஈடுபட்ட இருபெண்களை ஒரு மாதகாலம் பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தில் சமூக சேவையில் ஈடுபடவேண்டுமென பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

சம்பவதினம் பருத்தித்துறை நகரப் பகுதியில் அதிகளவான பொதுமக்கள் கூடியிருக்கும் பொது இடத்தில் தமது குடும்பப் பிரச்சினைகளை முன்வைத்து இரு பெண்கள் கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்படி பொது இடத்தில் சண்டையிட்டமை, பொது மக்களின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்தமை என இரு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து நேற்றையதினம் இருவரையும் பருத்தித்துறை பொலிஸார் மன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேரகம் இருபெண்களும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டமையின் பேரில் அவர்களைக் குற்றவாளிகளாகக் கருதி எதிர்வரும் நாட்களில் நீதிமன்று நடைபெறும் தினங்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒருமணி வரை நீதிமன்ற வளாகத்தில் சமூக சேவையில் ஈடுபட வேண்டுமெனவும், சேவை முடிவுற்றதும் நீதிமன்ற பொலிஸாரிடம் கையொப்பமிட வேண்டுமெனவும் உத்தரவிட்டார். (அ-9-24)

# கடல்வளத்தை மாசுபடுத்திய இருவருக்கு ஐம்பது ஆயிரம் ரூபா அபராதம்

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு தாளையடி கடற்பரப்பில் கடல் வளங்களையும் கணவாய் வகைகளையும் மாசுபடுத்தி அழிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்ட இரு நபர்களுக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தாளையடி கடற்பரப்பில் சம்பவதினம் குறித்த இரு நபர்களும் மரங்கள், இலை, தழைகள் மற்றும் குப்பை கூழங்களைக் கடலுக்குள் வீசி கணவாய்களை பிடித்தனர்.

இதன் மூலம் கடலை மாசுபடுத்தியமை, கணவாய் இனத்தை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டமை ஆகிய குற்றங்களின் அடிப்படையில் இவர்கள் மேல் பருத்தித்துறை பொலிஸார் வழங்கு பதிவு செய்தனர்.

இவ் வழக்கு விசாரணை நேற்றைய தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது நீதவான் வடகாற்று முறையை பின்பற்றியும் காவுலாய் புல்லைப் பயன்படுத்தியுமே கணவாய் பிடிக்க வேண்டும்

ஆனால், கடலை மாசுபடுத்தும் வகையிலும், கணவாய் இனத்தை அழிக்கும் வகையிலும் ஏனைய மீனவர்களுக்கு இடையூறை ஏற்படுத்தும் வகையிலும் அவர்கள் செயற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

பின்னர், இரு நபர்களையும் தலா 25 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டு தீர்ப்பளித்தார். (அ-9-24)

# வடக்கு-கிழக்கில் நிர்வாக மொழியில் முறைப்பாடுகள் பதியப்பட வேண்டும்

## கொழும்பு பல்கலை. சிரேஷ்ட விரிவுரையாளர் சர்வேஸ்வரன்







(யாழ்ப்பாணம்)

**வடக்கு-கிழக்கில் நிர்வாக மொழி தமிழ் என்பதால் பொலிஸார் முறைப்பாடுகளைத் தமிழ் மொழியிலேயே பதிவு செய்ய வேண்டும். தாம் விரும்பிய அல்லது தமக்கு தெரிந்த மொழியில்தான் முறைப்பாடுகளைப் பதிவு செய்வோம் எனக் கூறமுடியாது என கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் அ.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்தியக் காரியாலயத்தின் ஏற்பாட்டில் சிவில் சமூக அங்கத்தவர்களுக்கான மனித உரிமைகள் தொடர்பான செயலமர்வு ஒன்று நேற்றுமுன்தினம் யாழ். கிறீன்கிறாஸ் ஹோட்டலில் நடத்தப்பட்டது.

இதில் வளவாளர்ாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு பிரதேசத்தில் பணியாற்றும் அரசாங்க உத்தியோகத்தர் அந்த பிரதேச நிர்வாக மொழியை அறிந்து வைத்திருக்க வேண்டியது அவசியம்.

வடக்கு-கிழக்கில் தமிழ் மொழி நிர்வாக மொழி என்றால் அந்த மொழியின் பயன்பாடு அல்லது அதனைப் பயன்படுத்துவதை யாரும் தடுக்க முடியாது. அவ்வாறு தடுப்பது அடிப்படை உரிமையான மொழி உரிமையை மீறும் செயலாகும்.

மேலும் வடக்கு-கிழக்கில் தமிழ் மொழியில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை பதிவு செய்யமுடியாது என எந்தவொரு பொலிஸ் உத்தியோகத்தரும் கூறமுடியாது.

ஏனெனில் இங்கு நிர்வாக மொழியாக தமிழ்மொழியுள்ளது.

தமக்கு தெரிந்த மொழியையோ அல்லது தான் விரும்பிய மொழியையோ பயன்படுத்தும் அதிகாரம் பொலிஸாருக்கில்லை.

மேலும் தமிழ் மொழியை பொலிஸார் கற்றிருக்க வேண்டும் எனவும், ஆங்கிலத்தையும் அரச கரும மொழியாக கொண்டுவரலாம் எனவும் தெரிவித்தார்.

உடனடியாக அனைத்திலும் மாற்றங்களைக் கொண்டு வரமுடியாது என்றாலும் சில முரண்பாடுகளைத் தவிர்க்க சில நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

அத்தோடு தேசிய அடையாள அட்டையை ஒருவர் வைத்திருக்கவில்லை என்பதற்காக நியாயமான காரணங்கள் இல்லாது அவரை கைது செய்ய முடியாது எனவும் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் போன்ற சகலவற்றுக்கும் மேலானது அரசியல் அமைப்புத்தான். அதன் பிரகாரமே எந்தவொரு நடவடிக்கையையும் முன்னெடுக்க முடியுமெனவும் தெரிவித்தார்.

இதேவேளை, யுத்தத்திற்குப் பின்னரான காலப் பகுதியில் உள்ள நிலவரங்கள் தொடர்பிலும் விரிவாகக் கருத்துரை வழங்கியிருந்தார்.

குறிப்பாக மீள்குடியேற்றம், காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள், முன்னாள் போராளிகளின் மீளிணைப்பு, மீள்கட்டுமானப் பணிகள் என பலவிடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடியிருந்தார்.

அத்தோடு இந்தச் செயலமர்வில் சிறுவர் துஷ்பிரயோகம், அவர்கள் எதிர்கொள்ளும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகவும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. இவைதவிர, மீள்குடியேற்றம், சமூகச் சீர்கேடுகளைத் தடுத்தல் போன்றவை ஆராயப்பட்டன.

இந்தச் செயலமர்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் உள்ளிட்டவர்களும் உரையாற்றியிருந்தனர். (அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்டார் சைக்கிளும் வடி வாகனமும் மோதி விபத்து!



(பிறவுண்வீதி)

யாழ்.பிறவுண் வீதியில் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் அரசடி வீதியால் வந்து கொண்டிருந்த வடி ரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளா னதில் இரண்டு வாகனங்களும் பலத்த சேதங்களுக்குள்ளாகின.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று முற்பகல் 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அத்தோடு வடி ரக வாகனத்தின் முன்பக்க கண்ணாடி பலத்த சேதங்களுக்குள்ளானதோடு மோட்டார் சைக்கிளும் அதிகளவில் சேதமடைந்துள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவைச் சேர்ந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-6)

# திறந்த பல்கலையில் சான்றிதழ் வழங்கல்

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தின் விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 10 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது தொழில்நுட்பம், முகாமைத்துவம், சுற்றுலாத்துறை, ஈ.எஸ்.பி.எம், சமூக விஞ்ஞானம், பாலர் பாடசாலை கல்வி, தொழில்சார் ஆங்கிலம், அடிப்படை ஆங்கிலம், அடிப்படை சிங்களம், அடிப்படைத் தமிழ், ஆங்கிலக் கல்வி முகாமைத்துவ கற்கை போன்றவற்றின் விருதுச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (அ-5)


## சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

(வரைவுள்ளது)

### வாகனத் திருத்தம் செய்வதற்கான கூறுவிலை கோரல்

மேற்படி சங்கத்தின் 28 சிறி 3564 எனும் இலக்கம் கொண்ட ELF 250 ரக வாகனம் திருத்தம் செய்வதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது.

**திருத்த விபரம்**

- ✔ Body Cap மாற்றுதல்
- ✔ இயந்திரப் பகுதி முழுமையாகத் திருத்தம் செய்தல்
- ✔ கியர் Box திருத்தம் செய்தல்
- ✔ வில்லுத் தகட்டு வேலை ✔ வயறிங் வேலை

மேற்படி திருத்த வேலைகள் தொடர்பாக காரியாலய கடமை நாட்களில் வாகனத்தை நேரில் பார்வையிட்டுத் தங்களது கூறு விலைகள் 2013.08.15 திகதிக்குள் வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(3549) இங்ஙனம் : கூட்டுறவுச் சேவையிலுள்ள தலைவர்.


# ஆன்மீக செயற்பாடுகளுக்கான முன்னாயத்த கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட மக்களிடையே ஆன்மீக கலாசார, பண்பாட்டு விழுமியங்களை வளர்க்கும் நோக்கில் நல்லூர் பிரதேச இந்து ஆலயங்களின் சமூக நலனோம்பு அபிவிருத்தி ஒன்றிய மும், யாழ்.சின்மயா மிஷனும் இணைந்து நல்லைக்கந்தன் உற்வசகாலத்தில் தினமும் மாலை உற்சவத்தின் போது, நல்லூர் பிரதேச பக்தர்களை ஒன்றிணைத்து திருமுறை, நாம சங் கீர்த்தனம், திருப்புகழ் ஆகியவற்றைபாடுவ தற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் முதற் கட்டமாக கீழ்குறிப்பிடப்படும் ஆலயங்களில் பஜனை நிகழ்வும், கலந்துரை யாடல்களும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. இதற்கமைய இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 4.30 மணி முதல் 5.30 மணிவரை அரியாலை நீர்நொச்சித்தாழ்வு சித்தி விநாயகர் ஆலயத்திலும் நாளை புதன்கி ழமை பிற் பகல் 5 மணிமுதல் 6 மணி வரை கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமியம்மன் ஆலயத்திலும் நாளை மறுநாள் வியாழக்கி ழமை பிற்பகல் 5 மணிமுதல் 6மணிவரை வண்ணை காமாட்சியம்மன் தேவஸ்தானத்தி லும் (நாச்சிமார் கோவில்), எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணி முதல் 5.30 மணிவரை திருநெல்வேலி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயத்திலும் பஜனை நிகழ் வுகள் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வுக்கு ஆலய நிர்வாகத்தினர், பக்தர்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைக் குறிப்பிட்ட தினங்களில் தவறாது கலந்து கொள்ளுமாறும் அங்கு இலவச மாக வழங்கப்படவுள்ள பாடல்களுக்கான இறுவெட்டு மற்றும் புத்தகப் பிரதிகளையும் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது, இவ்விடயம் தொடர்பான கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

மேலும் நல்லூர் ஆலய உற்சவம் நிறை வடைந்த பின், வெள்ளிக்கிழமைகளில் சகல ஆலயங்களிலும் திருமுறை, நாம சங்கீர்த்தன நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை நல்லூர் பிரதேச செயலக ஆலய ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது. (அ)


ஓம் சக்தி



அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் பீடம் மேல்மருவத்தூர்

மேல் மருவத்தூர் சுயம்பு
அருள்மிகு ஆதிபராசக்தி
வார வழிபாட்டு மன்றம்
4 ஆம் வட்டாரம்,
கோம்பாவில், புதுக்குடியிருப்பு

## ஆடிப்பூர பெருவிழா

4 ஆம் வட்டாரம் கோம்பாவில் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தின் ஆடிப்பூர பெருவிழா அன்னையின் அருளாசியுடன் ஓகஸ்ட் 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் (வியாழன், வெள்ளி) சிறப்பான முறையில் அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெறவுள்ளது.

08.08.2013 காலை 7.30 மணிக்கு அம்மன் கோயிலில் இருந்து கஞ்சி கலசம் எடுத்து பவனி வரல்

09.08.2013 காலை 7.30 மணிக்கு துர்க்கையம்மன் ஆலயத்திலிருந்து பாற்செம்பு எடுத்து பவனிவரல்

ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளதால் அனைத்து சக்தி அடியார்களும் வருகை தந்து அன்னையின் அருளாசியை பெறுவதோடு அன்னதான நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உலகமெல்லாம் சக்தி நெறி ஓங்கவேண்டும். ஒவ்வோர் மனக் குறையும் நீங்கவேண்டும்.

**ஆலய பரிபாலன சபையினர்**

**புதுக்குடியிருப்பு வார வழிபாட்டு மன்றம்**

(3545)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1981இந்து(V)<br>நட்சத்திரம்: சித்திரை4<br>உயரம்: 5’6”<br>கி.பா: 20 சூ,செ 10<br>தகைமை/தொழில்: O/L Field Officer NGO<br>தொ.இ:B2156 | பிறப்பு: 1981இந்து(V)<br>நட்சத்திரம்: பூரட்டாதி3<br>உயரம்: 4’10”<br>கி.பா : 31.25<br>தகைமை/தொழில்: BA<br>தொ.இ:G2188 |
| பிறப்பு:1981இந்து(V)<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>உயரம்: 154 செ.மீ<br>கி.பா : 25.25<br>தகைமை/தொழில் : BSc அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ:B2161 | பிறப்பு:1975இந்து(V)<br>நட்சத்திரம்:மகம்<br>கி.பா :22.25<br>உயரம்: 5’1”தகைமை/தொழில்: ஆசிரியை<br>தொ.இ:G2191 |
| பிறப்பு: 1983இந்து(வேளாளர்)<br>நட்சத்திரம்: சித்திரை1<br>கி.பா : 19.25<br>உயரம்: 5’4”<br>தகைமைதொழில் : BSc பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ:B2165 | பிறப்பு: 1988 இந்து(V)<br>நட்சத்திரம்:. அனுசம்<br>கி.பா :50 செவ் 1<br>உயரம்: 5’5”தகைமை/தொழில்: A/Lவரவேற்பாளர்<br>தொ.இ:G2192 |
| பிறப்பு: 1978 இந்து (V)<br>நட்சத்திரம்:புனர்பூசம்2<br>உயரம்: 5’9”<br>கி.பா : 35 சூ,செவ்4<br>தகைமை/தொழில்:A/Lபிரான்ஸ் not PR<br>தொ.இ:B2166 | பிறப்பு:1977இந்து(Pa)<br>நட்சத்திரம்:மகம் 2<br>கி.பா : 54.25 செவ் 2உயரம்: 5’தகைமை/தொழில்: O/L<br>தொ.இ:G2195 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காது–மூக்கு–தொண்டை: முக்கியப் பிரச்சினைகளும் நவீன சிகிச்சைகளும்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இந்த அறுவைச் சிகிச்சையை மேற்கொள்ள மண்டையைத் திறக்க வேண்டும். மூளைக்கு அருகில் அறுவைச் சிகிச்சை செய்ய


குரல் வளையில் வளர்ந்துள்ள கட்டி

வேண்டும். இதனால் ஏற்படும் பக்க விளைவுகளை தவிர்க்க கே.டி.பி லேசர் மூலம் காதின் உட்புறமாக 0.8 மில்லி மீற்றர் துவாரமிட்டு ஜென்டாமைசின் மருந்தை நடுச் செவியில் செலுத்தலாம்.

இதன் மூலம் அரைவட்டக் குழாய்களில் உள்ள தலைச்சுற்றலுக்கு காரணமான குபுலா என்னும் நரம்பு மண்டலங்களை உணர் விழக்கச்செய்து நிரந்தரத்தீர்வு காண முடியும்.

**காக்ளியர் இம்ப்ளாண்ட்**

முற்றிலும் காது கேட்கும் சக்தியை இழந்த குழந்தைகளுக்கு காக்ளியர் இம்ப்ளாண்ட் மூலம் அறுவைச் சிகிச்சை செய்து உரிய பேச்சுப் பயிற்சியை வழங்கினால் குழந்தைகளின் காது கேட்கும் சக்தியும் பேச்சும் திறனும் மேம்படும். தழும்பு, வீக்கம், வலி, முடி அகற்றுதல் எதுவுமின்றி குழந்தைகளுக்கு கேட்கும் திறன் எளிதில் கிடைக்கும்.

பெரியவர்களுக்கு பேச்சுப் பயிற்சி இல்லாமலேயே இப்பிரச்சினையைத் தீர்க்கலாம்.

இந்த காக்ளியர் இம்ப்ளாண்ட் சிகிச்சையை மேற்கொள்ள முன்பெல்லாம் காதின் பின்புறத்தில் 15 சென்றி மீற்றர் அளவுக்கு அறுக்கப்பட்டது.

தற்போது வெறும் 3 சென்றிமீற்றர் நீளத்திலேயே தழும்பில்லாமல் மயக்க நிலையிலேயே நியூரல் டெலி மெட்ரி என்னும் கணிப்பொறிச் சாதன உதவியுடன் காக்ளியர் இம்ப்ளாண்ட் எலக்ட்ரோட்ஸ் ஆகியவை சிறப்பாக இயங்குகின்றனவா என்பதைக் கண்டறிய முடியும். இரண்டு வாரங்களில் காது கேட்கும் சக்தியை பெற முடியும். சிறந்த பயிற்சியாளர்கள் மூலம் பேசும் திறனையும் விரைவில் வளர்த்துக் கொள்ள முடியும்.

**சைனஸ்**

மூக்கின் அருகில் உள்ள காற்று அறைகளில் சளி ஏற்பட்டு மூக்கு அடைப்பு உண்டாவதே சைனஸ்.

மூக்கை இரண்டாகப் பிரிக்கும் விட்டம் நடுவில் இல்லாமல் வளைந்து இருந்தால் சைனஸ் அறைகளில் சளி தேங்கும். சளியில் வளரும் பக்ரீறியா காரணமாக சீழ் உண்டாகி தலைவலி, காய்ச்சல், முகவீக்கம், தொண்டை வீக்கம், காதுவலி, காது அடைப்பு ஆகியவை உண்டாகும். இதனால் மூக்கில் இருந்து இரத்தத்துடன் சீழ் வடியும் நிலையும் ஏற்படும்.

**நிவாரணம்:** கே.டி.பி. 532 லேசர் கருவி மூலம் எண்டொஸ்கோப்பி அறுவைச்சிகிச்சை அல்லது செட்டோ பிளாஸ்ரிக் சிகிச்சை பெறலாம். இச்சிகிச்சை முறைகளால் தழும்போ காயமோ ஏற்படாது.

**பாலிப்ஸ்:** தூசி, மகரந்தம், பெற்றோல்–டீசல் புகை ஆகியவை ஏற்படுத்தும் ஒவ்வாமை காரணமாக மூக்கில் பாலிப்ஸ் எனப்படும் சதை வளர்கிறது. இதனால் நுகர்வுத் தன்மை பாதிக்கப்படுகின்றது. மூச்சுத்திணறலும் ஏற்படலாம்.

**நிவாரணம்:** எண்டாஸ்கோபி லேசர் அல்லது டெப்ரைடர் அறுவைச் சிகிச்சை மூலம் பாலிப்ஸ்களை அகற்றலாம். பின்னர் மாத்திரைகள் மூலம் ஒவ்வாமையை கட்டுப்படுத்தலாம்.

**உருவசீரமைப்பு:** ரைனோபிளாஸ்டி எனப்படும் சிகிச்சை மூலம் மூக்கின் உட்புறத்தில் சிகிச்சைகள் வழங்கி உருவத்தை மாற்றலாம். 18 வயதைக் கடந்தோருக்கு மட்டுமே இச்சிகிச்சையை வழங்க முடியும்.

**டான்சில்ஸ்:** பெரும்பாலும் குழந்தைகளையும் சில சமயங்களில் பெரியவர்களையும் டான்சிலைட்டிஸ் பாதிக்கிறது. ஸ்ட்ரெப்டோகாக்கஸ் நுண்கிருமிகளின் தாக்குதலால் டான்சில் சதைகளில் சீழ்கோர்த்து காய்ச்சல், தொண்டைவலி ஆகியன உண்டாகின்றன.

டான்சில்ட்லைட்டிஸ் காரணமாக மூட்டு வலி , இருதயநோய், சிறுநீரகக் கோளாறு ஆகியவை ஏற்படலாம். எனவே, உரிய சமயத்தில் இதற்கு சிகிச்சைபெற வேண்டும்.

**நிவாரணம்:** மருந்துகளால் சரியாக வில்லை எனில் கே.டி.பி. லேசர் மூலம் இரத்தக் கசிவு இல்லாமல் அறுவைச்சிகிச்சை செய்து கொள்ளலாம்.

**அடினாய்டு சதை வளர்ச்சி:** மூக்கில் உள்ள திசுக்களின் அபரிமித வளர்ச்சி காரணமாக அடிக்கடி சளி பிடித்தல், மூக்கடைப்பு ஏற்பட்டு வாயில் மூச்சு விடுதல், காதில் சீழ் கோர்த்தல், காது கேளாமை, குறட்டை மற்றும் சுவாசப் பிரச்சினை உண்டாகலாம்.


இதன் காரணமாக மூளை மற்றும் உடலுக்கு தேவையான ஒட்சிசன் விநியோகம் பாதிக்கப்பட்டு குழந்தைகளின் உடல் வளர்ச்சி பாதிக்கப்படும்.

**நிவாரணம்:** எண்டாஸ்கோப்பிக் லேசர் அல்லது மைக்ரோ டெப்ரைடர் மூலமாக அடினாய்டு சதை வளர்ச்சியை நீக்க முடியும்.

**குறட்டை:** குறட்டை விடுதல் நகைப்புக்குரிய விடயமன்று. மூச்சுப் போக்குக்கு தடை ஏற்படும் போது குறட்டை வருகிறது. மூக்கிலோ மூக்கின் பின்பகுதியிலோ தொண்டையிலோ பேச்சு அல்லது மூச்சுக்குழாயிலோ தடைகள் இருந்தால் குறட்டை வரும்.

இத்தடைகள் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களிலும் இருக்கலாம். குறட்டைக் காரணமாக இருக்கும் சுவாசத் தடையை அகற்றாவிட்டால் இருதயம், நுரையீரல் பாதிப்புக்குள்ளாகும்.

**நிவாரணம்:** அறுவைச் சிகிச்சை மூலம் குணப்படுத்தலாம். எல்.ஏ.யு.பி. எனும் லேசர் சிகிச்சைமூலம் குறட்டையை குறைக்க முடியும். உடல் எடை அதிகமாக உள்ளவர்களுக்கு எடைக் குறைப்பும் குறட்டையைக் குறைக்க உதவும்.


சளியில் வளரும் பக்ரீரியா

**குரல்வளை:** குரல் கரகரப்பு, இருமல், மூச்சுத் திணறல் ஆகியவை குரல்வளை நோயின் அறிகுறிகள். ஆசிரியர்கள், அரசியல் வாதிகள், பாடகர்களுக்கு குரல் நாண்களில் சிறிய கட்டிகள் உருவாகி குரல் கரகரப்பா கும்.

ஆரம்ப நிலையிலேயே இக்கட்டிகளை சோதனை செய்து தக்க சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும்.


**நிவாரணம்:** குரல்வளையில் உருவாகும் புற்றுக்கட்டிகளையும் கே.டி.பி. லேசர் மூலம் குணப்படுத்த முடியும்.

**குரல் மாற்று சிகிச்சை:** குரல் நாண் நரம்பு பாதிக்கப்பட்டால் தைரோபிளாஸ்டி என்னும் குரல் மாற்று சிகிச்சை மூலம் நிவர்த்தி செய்ய முடியும். இச்சிகிச்சையில் மருத்துவரிடம் பேசிக்கொண்டே வேண்டிய குரலை பெற முடியும். இனிமையான குரலையும் தேர்வு செய்யலாம்.

குரல் நாண்களில் திசுக்களை புகுத்தி கணீர் என்ற குரல் வளத்தை பெற போனோ சிகிச்சைகள் கையாளப்படுகின்றன.

# வெலிவேரியாவின் குடிநீருக்கான போராட்டத்தில் உணர்வு ரீதியாக நாமும் கலந்துகொள்கிறோம்

## சூழலியலாளர் ஐங்கரநேசன் தெரிவிப்பு



சுற்றுச் சூழலுக்கு எல்லைகள் கிடையாது. அந்த வகையில் இனம், மதம், மொழி என்பவற்றைக் கடந்து வெலிவேரியா மக்களின் தூய குடிநீருக்கான போராட்டத்தில் உணர்வு ரீதியாக நாமும் கலந்துகொள்வதோடு, போராட்டத்தில் பலியெடுக்கப்பட்ட மக்களின் துயரத்திலும் பங்குகொள்கிறோம் என்று சூழலியலாளர் பொ.ஐங்கரநேசன் வெலிவேரியா மக்களின் போராட்டம் தொடர்பாக வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கம்பஹா மாவட்டத்தில் வெலிவேரியா பகுதியில் சுத்தமான குடிநீர் கேட்டு ஆர்ப்பாட்டம் நிகழ்த்திய மக்கள்மீது, இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் மூன்றுபேர் பலியாகியிருப்பதோடு ஏராளமானோர் காயமுற்று மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுமுள்ளனர்.

வெலிவேரியாவில் ஹேலீஸ் குழுமத்துக்குச் சொந்தமான இறப்பர் கையுறைகளைத் தயாரிக்கும் தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் கழிவுகளால் அந்தப் பிரதேசத்தில் உள்ள தண்ணீர் குடிக்கவோ, குளிக்கவோ முடியாதபடி மாசடைந்து நஞ்சாகியமையாலேயே சுத்தமான குடிநீர் விநியோகம் கேட்டு மக்கள் வீதிகளில் இறங்கியுள்ளனர்.

சுத்தமான தண்ணீரைப் பெறுவது அடிப்படை மனித உரிமைகளில் ஒன்று என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை தெரிவித்துள்ளது. ஒவ்வொரு குடிமகனுக்கும் அவனது அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்ய, குறிப்பாக போதுமான அளவு தண்ணீர் குறைவின்றி கிடைப்பதற்கு ஆவன செய்யப்படல் வேண்டும் எனவும் அத்தண் ணீர் கிருமிகளும் இரசாயனங்களும் கலக்காத தூய நீராகவும் இலகுவாகவும் மலிவாகவும் கிடைக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டு மெனவும் உலக சுகாதார நிறுவனம் வலி யுறுத்தியுள்ளது.

இதன்படி தங்கள் அடிப்படை மனித உரிமையும் ஜீவாதாரமுமான தூயதண்ணீர் கேட்டும் தொழிற்சாலையை இடம்மாற்றக் கோரியும் ஆர்ப்பாட்டம் செய்த வெலிவேரியா மக்கள் மீது அவற்றை நிறைவேற்றி தரவேண்டிய கடப்பாட்டைக் கொண்ட இலங்கை அரசாங்கம் துப்பாக்கிக் குண்டுகளைப் பதிலாக பொழிந்திருக்கிறது.

சிங்கள மக்களை தமிழ்ப் பயங்கரவாதிகளிடமிருந்து மீட்க வந்த மீட்பர்கள் இராணுவத்தினரே என நம்ப வைத்த இலங்கை அரசு, அதே இராணுவத்தினரைப் பயன்படுத்தி பெண்கள், குழந்தைகள் என்றும் பாராமல் சகலரையும் அடித்துத் துவைப்பார்கள் என்றும் துப்பாக்கிகளை தங்கள் பக்கம் திரும்பச் செய்வார்கள் என்றும் அந்தச் சிங்கள மக்கள் ஒருபோதுமே நினைத்திருக்கமாட்டார்கள் என அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (அ-6)

# பொய் சாட்சி கூறிய நபர் தலைமறைவு

நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பொய் முறைப்பாட்டையும் பருத்தித்துறை நீதிமன்றில் பொய்சாட்சியையும் கூறிய நபரை நெல்லியடிப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்நபர் பொய் முறைப்பாடு, பொய் சாட்சி என்பவற்றை வழங்கி விட்டு தலைமறைவாகியுள்ளார். இதனைத் தொடர்ந்து நெல்லியடிப் பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றில் குறித்த நபருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்தனர். இந்நிலையில் நீதிமன்றம் இந்நபரை கைது செய்ய பிடியாணை பிறப்பித்துள்ளது.(அ-9-60)

# மாகாண மட்ட நடன போட்டியில் முதலிடம்

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வருகின்ற தமிழ்த்தின மாகாண மட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நடன அணி இரண்டு பிரிவுகளில் முதலா மிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற மாகாணமட்ட தேசிய நடனப் போட்டியில் ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நடன அணியின் இ.சாஸ்திரிய குழு நடனப் பிரிவின் அலாரிப்பு நடனம் முதலாமிடத்தையும் கிராமிய குழு நடனப் பிரிவில் கோலாட்டம் முதலாமிடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளது. (அ-2-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறைப்பாட்டு நகலை உடன் வழங்க புதிய நடைமுறை

## பொலிஸ்மா அதிபர் உத்தரவு

(கொழும்பு)

பொதுமக்களின் கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்கு புதிய நடைமுறைகளைக் கடைப் பிடிக்குமாறு சகல பொலிஸ் நிலையங்களுக் கும் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக் கோன் உத்தரவு பிறப்பித்துள்ளர்.

ஒருவர் தனது தேசிய அடையாள அட் டையை அல்லது கடவுச்சீட்டை தவறவிட்டால் அது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்து அந்த முறைப்பாட்டின் உத்தி யோகபூர்வ நகலை சமர்ப்பித்தபின்னரே புதிய அடையாள அட்டையை அல்லது புதிய கடவுச்சீட்டைக்கோரி விண்ணப்பிக்க வேண் டும்.

எனினும் பொலிஸ் நிலையங்களில் ஒரு வர் இத்தகைய முறைப்பாடுகளைச் செய்து அதன் நகலை பெறுவது மிகவும் கடினமான விடயமாக இருந்தது. பலர் ஓரிரு வாரங்கள் வரை கூட இந்த நகல் பிரதியைப் பெறு வதற்கு காத்திருக்க வேண்டியிருந்தது.

எனினும் பொதுமக்களின் இந்தச் சிர மத்தை உணர்ந்துகொண்ட பொலிஸ்மா அதிபர் தேசிய அடையாள அட்டை மற்றும் கட வுச்சீட்டு ஆகியவை தவறி விட்டன என்று செய்யப்படும் முறைப்பாடுகளை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் ஒருவர் ஒரு காபன் தாளை அசல் முறைப்பாட்டின் கீழ் வைத்து எழுதி, பின்னர் அதனைத் தனது உயர் அதிகாரியிடம் காண்பித்து அவரது அனு மதியுடன் குறித்த முறைப்பாடு எழுதப்பட்ட காகிதத்தை அப்புத்தகத்தில் இருந்து கிழித்து எடுத்து சம்பந்தப்பட்ட முறைப்பாட்டுக்கார ரிடம் அரை மணித்தியாலத்திற்குள் கொடுக்கும் படி உத்தரவிட்டுள்ளார்.

அதன் நகல் பிரதி அப்புத்தகத்தில் பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பாக வைக்கப்படும். இதற்கு பொலிஸ் நிலையங்கள் 25 ரூபாவை கட்டணமாக அறவிடுகின்றன.

கடந்த சனிக்கிழமை நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தில் பொலிஸ்மா அதிப ரின் உத்தரவுக்கமைய இத்தகைய முறைப் பாட்டுப்பிரதி ஒன்று 20 நிமிடங்களில் கொடுக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

வீதி விதிகளை மீறி வாகனங்களைச் செலுத்துபவர்களைக் கண்டுபிடிப்பதற்கு போக்குவரத்துப் பொலிஸார் மரங்களுக்குப் பின்பும் கட்டடங்களுக்குப் பின்பும் மறைந்தி ருந்து செயற்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் பொலிஸ்மா அதிபர் என். கே.இலங்கக்கோன் சமீபத்தில் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் வெளியிட்டுள்ள சுற்று நிருபத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வாகனப் போக்குவரத்து பொலிஸார் வீதி யில் எல்லோரும் காணக்கூடிய வகையில் நின்றுகொண்டே தவறிழைக்கும் வாகன சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மறைந்திருந்து இந்தச் செயலைச் செய் வது பொலிஸ்சம்பிரதாயத்துக்குபுறம்பானசெயல் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

## புத்தளத்தில் இந்திய பெண் கைதானார்

(கொழும்பு)

புத்தளத்தில் இந்தியப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.புத்தளம் பிரதேச குற்றத் தடுப்பு பிரிவினரால் இப் பெண் தங்கச் சங்கிலி ஒன்றைக் களவாடிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டார்.

தமக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப் படையில் மேற்கொண்ட தேடுதலின் போது சந்தேகநபர் கற்பிட்டி-தலவில பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து களவாடப் பட்டதாக தெரிவிக்கப்படும் இரண்டரைப் பவுண் பெறுமதியான தங்கச் சங்கிலி மற்றும் மூன்று சங்கிலிகள் பொலிஸாரால் கைப்பற் றப்பட்டுள்ளன. (அ-2)

## கிளிநொச்சியில் கூட்டமைப்பின் அலுவலகம் திறப்பு

(கிளிநொச்சி)

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மாவட்ட தலைமைச் செயலகம் கிளிநொச்சியில் நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு திறந்து வைக்கப் பட்டுள்ளது. கூட்டமைப்பின் வடமாகாண சபை கிளி நொச்சி மாவட்ட வேட்பாளர் திரு லோகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மங்கல விளக்கை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப் பின் பேச்சாளருமாகிய சுரேஸ் க. பிறேமச் சந்திரன், கூட்டமைப்பின் இணைத் தலைவர் களில் ஒருவராகிய வீ. ஆனந்த சங்கரி உள்ளிட்ட பல பிரமுகர்கள் ஏற்றி வைத்தனர். (அ)

## வைத்தியரை தாக்கியது மனிதக் குரங்கு

தெஹிவளை விலங்கியல் பூங்காவில் உள்ள மனித குரங்குக்கு (Orangutan) சிகிச்சை அளிப்பதற்காக சென்ற மருத்துவர் அந்த குரங்கின் கடுமையான தாக்குதலுக்கு இலக்காகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மனிதக் குரங்கின் தாக்குதலுக்கு இலக்காகி கொழும்பு தெற்கு களுபோவில போதனா வைத்தியசாலையில் முதலில் அனுமதிக்கப் பட்ட அவர், ஆபத்தான நிலையில் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற் றப்பட்டுள்ளார். (அ-2)

## பொதுநலவாயத்திடம் கூறுவதற்கு முன்னர் ஜனாதிபதியிடம் கூறுங்கள்

### கூட்டமைப்பிடம் பசில் கோரிக்கை



(கொழும்பு)

அரசாங்கத்தைப் பொறுத்தவரை வடக்குத் தேர்தலில் எவ்வாறான முடிவு வந்த போதிலும் அது எம்மைப் பாதிக்காது. எந்தவொரு முடிவும் அரசாங்கத்தில் தாக்கம் செலுத்தப் போவதில்லை. வடக்கு என்பது அரசாங்கத்துக்கு ஒரு மாகாண சபை மட்டுமேயாகும் என பொருளாதார அபிவிருத்தி அமைச் சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

வடக்குத் தேர்தல் விடயத்தில் ஏதாவது அநீதிகள், அநியா யங்கள் நடைபெற்றால் அது தொடர்பில் கூட்டமைப்பினர் முதலில் ஜனாதிபதியிடம் கூறலாம்.பொதுநலவாய அமைப்பிடம் கூறுவதற்கு முன்னர் இந்த விடயங்கள் தொடர்பாக முதலில் ஜனாதிபதியிடம் தெரிவித்து அதற்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

வடக்குத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களைப் பாது காப்புத் தரப்பினர் விசாரணை என்ற பெயரில் அச்சுறுத்துவதாக கூட்டமைப்பினர் பொதுநல வாய அமைப்பின் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளமை குறித்து வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (அ-2)

## விசாரணை அறிக்கையின்படி நடவடிக்கை எடுக்கப்படும்

### இராணுவத் தளபதி தெரிவிப்பு



வெலிவேரிய சம்பவம் தொடர்பாக நடத்தப்பட்டு வரும் விசாரணைகளின் பின்னர் கையளிக்கப்படும் அறிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும் என புதிய இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் தயா ரத்நாயக்க தெரிவித் துள்ளார்.

தலதாமாளிகையில் கடந்த 3 ஆம் திகதி வழிபாடுகளில் ஈடுபட்ட அவர் மல்வத்து மற்றும் அஸ்கிரிய மாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசி பெற்ற பின்னர் ஊடகங்களு க்கு கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு கூறியுள் ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில்,

சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த இராணுவ விசாரணைக்குழு நியமிக்கப்பட்டுள் ளதாகவும் அந்த அறிக்கை கிடைத்த பின்னர் தேவையான நடவடிக்கைகள் எடுக்கவிருப் பதாகவும் தயா ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (அ-2)

## ஜனாதிபதி தலைமையில் தேர்தல் பிரசார கூட்டம்

வடக்கு, வடமேல், மத்திய மாகாண சபைகளுக்கான ஐ.ம.சு. முன்னணியின் தேர்தல் பிரசார கூட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித் தார்.

இக்கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்குகொள்ளும் பிரதான கூட்டம் செப் டெம்பர் முதலாம் திகதிக்குப் பின்னர் நடைபெறும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்களும் பிரதிநிதிகளும் இருமுறைகள் சகல வீடுகளுக்கும் செல்வர். ஓகஸ்ட் 24, 25 மற்றும் செப்டெம்பர் 14, 15 ஆகிய திகதிகள் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)

## குடிநீர் பிரச்சினையை இராணுவ பலம்கொண்டு அடக்கிவிட முடியாது

### ஐ.ம.முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

வெலிவேரிய மக்களின் குடிநீர்ப் பிரச்சி னைக்கு இராணுவ ரீதியான தீர்வுத் திட்டம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என ஜனநா யக மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

வெலிவேரிய பிரதேச மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் மீது இராணுவத்தினர் மேற் கொண்ட தாக்குதல் வன்மையாக கண்டிக் கப் பட வேண்டுமென கட்சியின் பொதுச்செயலா ளர் பாக்டர் குமாரகுருபரன் தெரிவித்துள்ளார்.


இராணுவத் தாக்குதல்களின் வேதனையை வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் நன்கு அறிவர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சிவில் விவ காரங்களில் இராணுவத்தின் தலையீடு ஏற் றுக் கொள்ளக் கூடியதல்ல எனவும் இதனை நல்லாட்சிக்கான பண்பாக கருத முடியாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டு ள்ள நிலையில் அப்பாவி மக்களின் நியாய மான கோரிக்கைகளைப் பூர்த்தி செய்ய அர சாங்கம் இராணுவ அடக்குமுறைகளைப் பயன்படுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

வெலிவேரிய குடிநீர்ப் பிரச்சினை மனிதா பிமான பிரச்சினை எனவும் இதனை இரா ணுவ பலத்தைக் கொண்டு அடக்கிவிட முடி யாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இராணுவத்தினரைவிட கலகத் தடுப்பு பொலிஸாரைப் பயன்படுத்தி இப்போராட்டத் தைக் கட்டுப்படுத்தியிருக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் மீது இராணுவத்தினரால் அடக்குமுறைகள் மேற்கொள்ளப்படுவதை ஜன நாயக மக்கள் முன்னணி வன்மையாக கண்டிக் கின் றது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



புங்குடுதீவு இறுப்பிட்டி காளீகா பரமேஸ்வரி ஆலய அமுதம் மண்டபத்திற்கு வெளிநாட்டு வாழ் அன்பர் ஒருவரால் பாத்திரங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்ட போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு கொல்லியம்பாவை



## ஆன்மீகம் 78

இவர்கள் என்னைப்போலி என்று கேலி பேசினாலும் அவர்களுக்கு உண்மையை உணர்த்த என் அனுபவங்களை அவர்களிடம், எப்படி எடுத்து விளக்குவது. நம்பிக்கை இல்லாதவரிடம் நம்பிக்கையை ஏற்படுத்துவது கடினம் தான்! எல்லோரும் உறங்கும்போது என் உறக்கத்தில் சித்தர்கள் ரிஷிகள் தோன்றுவது என்ன தவறு? அற்புதக்காட்சிகளையும், தேவகானங்களையும்நான் காண்பதுவும்,கேட்டதும் என்னுடைய சொந்த அனுபவமாயிற்றே? கற்றாரைக், கற்றாரே காமுறுவர் என்பது எவ்வளவு பெரிய உண்மை! பாம்பறியும் பாம்பின் கால்...? இருந்தாலும் என் மனம் அவர்கள் நல்ல எண்ணத்திற்காக வேண்டிக்கொள்ளும்.ஒருநாள் இப்படித்தான் பூசை முடிந்து உண வருந்திய பின்னர் சித்தர் தனிமையில் அமர்ந்திருந்த இடத்திற்குச் சென்று அவருக்கு எதிரில் அமர்ந்தேன். என்னைக் கண்டவுடன் சித்தர் பெருமான் மகிழ்ச்சி பொங்க, வா ர்ராஜா, இன்றைய பூஜையினால் இந்த இடத்திலுள்ள சித்தரை மகிழ்ச்சியில் ஆழ்த்தி விட்டீர்கள்! என்றார். இதைக்கேட்டு என் உள்ளம் மகிழ்ந்தாலும் என் பூஜை மற்றவர்களுக்கு இடைஞ்சலாய் போய் விடுகிறதே. அவர்கள் என் மீது கோபப்படுகிறார்கள். நடிக்கிறேன் சினிமாக்காரர் என்று இழிவாகப் பேசுகிறார்களே! என்று கூறிவருந்தினேன். இதைக்கேட்ட சித்தர் பெருமான் ராஜா! இது எனக்கும் தெரியும்! என்ன செய்வது மனித இயல்பு அப்படித்தானே இருக்கிறது. எல்லா மதங்களும் எல்லோரிடமும் அன்பு காட்டச் சொல்லி தான் வற்புறுத்துகின்றன. ஆனால், எந்த மதத்தைச் சார்ந்தவர்களும் அப்படி நடந்தது இல்லையே! ஒரே வயிற்றில் பிறந்தவர்களை உடன் பிறந்தானை வெறுக்கிறார்களே! சொந்த சகோதரனையே மோசம் செய்வதும், கொலை செய்வதும் உலகெங்கும் நடந்து கொண்டு தான் இருக்கிறது.



சென்னை தியாகிகளுடன் மகாலிங்க சித்தர் சமாதியில், அன்னை சித்தர் (பெரம்பலூர்)

மனிதனாய்ப் பிறப்பவர் அனைவரும் முற்பிறப்பில் செய்த பாவ, புண்ணியங்களோடு தானே வளர்கிறார்கள். இதைத்தான் பிறவிக்குணம் என்பார்கள். இதை மாற்றமுடியாது. இதனால்தான் கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதேன்னு கீதை சொல்கிறது! என்றவர் சற்று நிதானித்து பின் பேசத்துவங்கினார்.

இவர்கள் உன்னுடன் பகைத்தது பக்தி போட்டியினால் தானே ஒழிய வேறில்லை! தனக்கு கிடைக்காத பக்தி செல்வம் அருட்செல்வம் தம்முடன் இருக்கும் ஒருவனுக்கு கிடைப்பதை உடன் இருப்பார்கள் எவரும் விரும்புவதில்லை. பொறாமைக்குணம் அவர்களை ஆட்கொள்ளுதலின் வெளிப்பாடே அவர்களின் பேச்சுக்கள் என்றவர் சற்று நேரம் அமைதியாகி மேலும் பேசத்துவங்கினார், என்னுடன் இப்படி மலைகளுக்கு பயணம் வருபவர்களுக்கு பெரியவர்களின் குகைகளுக்கு வருவதாலும், புண்ணியமான இங்குள்ள தீர்த்தங்களில் குளிப்பதாலும், பாவங்கள் நாசமாகி தெய்வகடாட்சம் விரைந்து கிட்டுகிறது! ஆண்டவன் அருளால் நல்வரங்களைப் பெற்றவர்களாகின்றனர் உங்களை எல்லாம் நான் அழைத்துச் செல்லும் இடங்களில் எல்லாம் என்னுடைய பொருள்கள் என்னால் மறைத்து வைக்கப்பட்டி ருக்கின்றன என முன்பே கூறியிருக்கிறேன். இவைகளை எடுப்பதற்கான காலம் இன்னும் கனிய வில்லை. ஆனாலும் நாம் சித்தர்கள் வாழுமிடங்களுக்குத் தான் சென்று வருகிறோம். உண்மையான பக்தியோடு வழிபட்டால் அவர்கள் அருள் உங்களுக்கு கிடைக்கத்தானே செய்யும். ஆனால் குறிப்பாக நீ மிகவும் நன்றாகவே பற்றிக் கொண்டாய்! விடாதே இன்னும் கெட்டியாகப பிடித்துக்கொள் என்று அருளினார்.

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

தொடரும்

# தெலுங்கானா போராட்டம்- புதைந்துள்ள உண்மைகள்

## ஆந்திர மாநிலத்தை நிலைகுலையச் செய்திருக்கும் தெலுங்கானா தனிமாநில போராட்டம் தேசிய இன போராட்டமா...? இல்லை பிரிவினைவாதமா...?



தனித்தெலுங்கானாவை எதிர்த்து நடக்கும் போராட்டங்களைக் காரணம் காட்டி, தீர்மானம் நிறைவேறாதவகையில் ஆந்திர சட்டமன்ற நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

தெலுங்கானா தனி மாநிலம் உருவாக்க, மத்திய அரசு கொள்கை அளவில் இசைவு தெரிவித்துள்ளதன் எதிரொலியாக, பல்வேறு பெரிய மாநிலங்களிலும் இத்தகைய கோரிக்கை எழுந்துள்ளது. வன்னியர் நாடு என்ற கோரிக்கையுடன் தமிழகத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்று முன்பு கோரி வந்த பா.ம.கவின் ராமதாசு, இப்போது மீண்டும் சென்னையைத் தலைநகராகக் கொண்ட வட தமிழ்நாடு என்றும், மதுரையைத் தலைநகராகக் கொண்ட தென் தமிழ்நாடு என்றும், பிரிக்க விரும்புவதாக சாதிய அடிப்படையில் அறிவித்துள்ளார். இந்திய அரசியலில் சட்டத்தின் 3-வது பிரிவின் கீழ் கடந்த 50 ஆண்டுகளில் 12 புதிய மாநிலங்கள் உருவாகியுள்ளதைக் காட்டி, உ.பி மாநிலத்தை மூன்றாகப் பிரிக்கக் கோருகிறார் மாயாவதி. உ.பி.- பீகாரிலிருந்து போஜ்பூர், அசாமிலிருந்து போடோலாந்து, உ.பி.- ம.பி.யிலிருந்து பண்டேல் கண்ட், மகாராஷ்டிராவிலிருந்து மரத்வாடா மற்றும் விதர்பா, ஒரிசாவிலிருந்து மகாகவுசல், பீகாரிலிருந்து மிதிலாஞ்சல், ராஜஸ்தானிலிருந்து முரு பிரதேஷ், உ.பி.யிலிருந்து பூர்வாஞ்சல், குஜராத்திலிருந்து சௌராஷ் டிரா - எனத் தேசிய இன அடிப்படையில் அல்லாமல், ஒரே இனம்- ஒரே மொழி பேசும் மாநிலத்திலேயே, பிராந்திய அடிப்படையில்- சாதிய அடிப்படையில், மொழிச் சிறுபான்மையினர் அடிப்படையில் தனி மாநிலக்கோரிக்கைகள் முன் வைக்கப்படுகின்றன.

முதலாளித்துவ அரசியல் பொருளாதாரக் கட்டுமானத்தில், நிர்வாகத்தை துறைவாரியாகப் பிரிப்பதும், அதுபோல மாநிலங்களையும், மாவட்டங்களைப் பிரிப்பதும் நடக்கக்கூடியது தான். அவ்வாறு மாவட்டங்களைப் பிரிக்கக்கோரி மக்கள் போராடுவதை ஜனநாயகக் கோரிக்கையாகக் கருத முடியாது. பெரம்பலூர் மாவட்டத்துடன் அரியலூரைச் சேர்க்கக் கூடாது என்று அப்பகுதி மக்கள் நடத்திய போராட்டமும், செங்கல்பட்டில் இருந்து மாவட்ட நீதிமன்றங்களை காஞ்சிபுரத்துக்கு மாற்றவேண்டும். மாற்றக் கூடாது என்று அந்தந்த பகுதிவாழ் மக்கள் நடத்திய போராட்டமும், அரசுத் திட்டங்கள்- சலுகைகளை பெறுவதற்கான பொருளாதாரப் போராட்டம் தானே தவிர, அது முற்போக்கான - ஜனநாயக கோரிக்கையுடன் நடத்தப்படும் போராட்டமல்ல.

இப்படித்தான் தெலுங்கானா தனி மாநிலப் போராட்டத்தையும் பார்க்க முடியும். பிராந்திய உணர்விலிருந்து எழும் பொருளாதாரவாதக் கோரிக்கைதான் இது. ராயலசீமா மற்றும் கடற்கரையோர மாவட்டங்களைச் சேர்ந்த புதுப்பணக்கார மாஃபியா கும்பல்களின் ஆதிக்கம்- சூறையாடலைக் கண்டு குமுறி, அவர்கள் இடத்தை தாங்கள் பிடிக்க வேண்டும் என்ற ஏக்கத்திலிருந்துதான் தெலுங்கானாதனி மாநிலக்கோரிக்கைக்கான போராட்டம் நடக்கிறது. தெலுங்கானா பிராந்தியத்தில் வீட்டுமனை, கல்குவாரிகள், கனிமச்சுரங்கங்கள்,




காட்டுவளம் முதலானவற்றைச் சூறையாடி ஆதிக்கம் செலுத்திவரும் புதுப்பணக்கார மாஃபியா கும்பல்களுக்கு எதிராக தெலுங்கானா பிராந்திய மக்கள் இதுவரை எந்தவொரு போராட்டத்தையும் கட்டியமைக்க வில்லை. மாறாக, தாங்கள் வளர்ச்சித் திட்டங்களில் புறக்கணிக்கப்படுவதாக, பின்தங்கிய நிலையில் இருத்தி வைக்கப்பட்டுள்ளதாகவே நடுத்தர வர்க்கம் குமுறுகிறது. உயர்கல்வி- வேலைவாய்ப்பு, அரசாங்கப் பதவிகள் முதலானவற்றில் தாங்களும் அமரவேண்டும் என்ற வேட்கையே தனி மாநிலக் கோரிக்கையாக எழுந்துள்ளது. ஆனால், மாவோயிஸ்டுகளோ, அரசுக்கு எதிரான எந்தப் போராட்டத்தையும் நாம் ஆதரிக்க வேண்டும், அது முற்போக்கான போராட்டம் என்று கருதுகின்றனர். போராட்டத்தின் கோரிக்கை யைப் பற்றி பரிசீலிக்காமல், அப் போராட்டத்தை போர்க்குண மிக்கதாக மாற்றுவதன் மூலம் அதை புரசிகரப் போராட்டமாக வளர்த்தெடுக்க முடியும் என்று குருட்டுத்தனமாக நம்புகிறார்கள். ஏற்கனவே, காலிஸ்தான் போராட்டத்தை இந்த நோக்கத்தில் தான் ஆதரித்தனர். பின்னர், 1980களில் தனித் தெலுங்கான போராட்டத்தை முன் னெடுப்பது என்ற பெயரில் தெலுங்கானா பகுதியில் சில சாகசவாத நடவடிக்கை களிலும் இறங்கினர். இப்போது நடந்த தனித் தெலுங்கானா போராட்டத்தையும் இந்த அடிப்படையிலேயே ஆதரித்துப்பத்திரிகைகளுக்குப் பேட்டியளிக்கின்றனர்.

தொடரும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




537

# யோகம்



வித்தியாசகர் தனது குருகுலத்தில் ஒவ்வொர் ஆண்டும் விஜயதசமியன்று புதிய மாணவர்களைச் சேர்த்துக்கொள்வார். அன்று, பழைய மாணவர்களும் குருகுலத்திற்கு விஜயம் செய்து, குருவை வணங்கிவிட்டு, தம் பழைய நண்பர்களைச் சந்தித்து உரையாடிச்செல்வர்.

ஒரு சமயம், தம் பழைய மாணவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தபோது, சிலர் உற்சாகமாகவும், சிலர் வருத்தமாகவும் இருப்பதைக் கண்ட வித்தியாசகர், வருத்தமாயிருந்தவர்களை விசாரித்தபோது தங்களுக்கு நல்ல வேலை கிடைக்கும் யோகம் இல்லை என்று கூறினர். அதற்கு வித்தியாசகர், "வாழ்க்கை என்பது பல சமயங்களில் வெற்றி வாய்ப்புக்களைத் தருகிறது.

அதை சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொள்பவர்கள் வெற்றிப்படிகளில்

**அம்புலிமாமா கதைகள்**

கால் வைத்து நடந்து செல்கின்றனர். வாய்ப்புக்களை நழுவவிடுபவர்கள் தங்களுக்கு யோகம் இல்லை என்று கூறிக் கொள்கின்றனர். சூழ்நிலைக்குத் தகுந்தவாறு நமது அறிவைப் பயன்படுத்தினால் நமக்குக் கிடைக்கும் வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஒருவனுடைய மகிழ்ச்சி அவனுடைய அறிவையும், மனத்தையும் பொறுத்தது. இதை விளக்க ஒரு கதை கூறுகிறேன்!" என்று சொல்லிவிட்டுக் கதையைத் தொடங்கினர்.


கிருஷ்ணபுரி என்பது ஒரு கடலோரகிராமம்! அங்கிருந்து சற்றுத் தொலைவில் நடுக்கடலில் அன்னத் தீவு என்று ஒரு தீவு இருந்தது. அந்தத் தீவில் ஒரு புகழ்பெற்ற பரமேஸ்வரி அம்பிகையின் கோயில் இருந்தது. ஒரு முறை, கிருஷ்ணபுரியில் இருந்து சிலர் அம்பிகையை தரிசிக்க ஒரு படகில் கிளம்பினர்.

திடீரென வீசிய சூறைக் காற்றினால் படகு விழ்ந்தது. படகில் இருந்த பலரும் கடலில் மூழ்கி இறந்துவிட, சிலர் மட்டும் எப்படியோ உடைந்த படகின் பாகங்களைப் பிடித்துக் கொண்டு கரையேறினர். அவ்வாறு கரையேறியது மூவர் மட்டுமே! அதுவும், அவர்கள் கரையேறியது அன்னத் தீவல்ல! வேறு ஒரு தீவு!

மறுநாள் பொழுது புலர்ந்ததும், கரையில் ஒதுங்கிய அவர்கள் அந்தத் தீவைக் கண்டு மிரண்டு போயினர். ஏனெனில் அங்கே மனிதநாடமாட்டமேயில்லை. அங்கு தென்னைமரங்க



ளும், பேரீச்சை மரங்களுமே இருந்தன. உயிர்பிழைத்ததை எண்ணி மகிழ்ச்சி அடைந்தாலும், அந்தத் தீவில் எப்படி காலங்கழிப்பது என்ற பிரச்சினை மூவரையும் வாட்டியது.




மூவரில் ஒருவர் கோயில் பூசாரி! ஒருவர் வியாபாரி! மூன்றாமவன் ஒரு பிச்சைக்காரன். "தேங்காயையும், பேரீச்சம்பழத்தையும் எத்தனை நாள் உண்ணமுடியும்? என்று பூசாரி புலம்பினான். ஆகா! இங்கு எத்தனை தேங்காய்கள், பேரீச்சம்பழம் இருக்கின்றன? இவற்றை விற்றால் நன்றாக சம்பாதிக்கலாமே!" என்று வியாபாரி கூறினான். ஆனால், அநாதையான பிச்சைக்காரன் அவர்களைப்போல் கவலைப் படவில்லை.

நாட்கள் சென்றன. பிச்சைக்காரன் நன்றாக உண்டு, உறங்கி சொகுசாக இருக்க, மற்ற இருவரும் அரற்றிக் கொண்டே இருந்தனர். ஒருநாள், பூசாரி கடற்கரை மணலில் அம்பிகையின் சிலை ஒன்று புதைந்திருக்கக் கண்டான். உடனே அதை வெளியே கொண்டு வந்து, தென்னந்தோப்பிற்கு அருகில் அதைப் பிரதிஷ்டை செய்தான். பிறகு, அங்கிருந்த காட்டுப் பூக்களைப்பறித்து, அம்பிகையின் மேல் தூவி, அர்ச்சனைசெய்தான். எப்போதும் கவலையுடனிருந்த வியாபாரியும் அம்பிகையைப் பூசை செய்வதில் ஈடுபட்டான்.

தனக்கு வயிறாற உணவு தினமும் கிடைத்ததற்காக நன்றி கூறிப் பிச்சைக்காரனும் அம்பிகையை வழிபட்டான். அந்த மூவர் மீதும் அம்பிகைக்கு இரக்கம் உண்டாகியது. அன்று பூசாரியின் கனவில் தோன்றி, "கடற்கரை மணலில் புதைந்து கிடந்த என்னைப் பிரதிஷ்டை செய்து தினமும் பூஜை செய்யும் உன்னைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

எனக்காக இங்கே ஒருகோயில் எழுப்பி, பல பக்தர்கள் இங்கே என்னை நாடி வரும்படிச் செய்வாயா?" என்று கேட்டாள். "கட்டளையிடு தாயே! அதன்படியே செய்கிறேன். என்னை என் குடும்பத்துடன் சேர்த்து விடு! அது போதும்! பிறகு நான் நீ கூறியபடி செய்கிறேன்!" என்றான். பூசாரி, "சரி! நாளைக்கே இந்தத் தீவிற்கு இரு மீனவர்கள் வருவார்கள்! அவர்கள் மூலம் நீ இங்கிருக்கும் தகவலை உன் குடும்பத்தினருக்குத் தெரியப்படுத்து! என்று கூறிக் கனவிலிருந்து மறைந்தாள்.

மறுநாள், தான் கண்ட கனவை பூசாரி மற்ற இருவரிடமும் கூற,முதலில் அவர்கள் நம்பவில்லை. ஆனால், நிஜமாகவே ஒரு கட்டுமரத்தில் பயணம் செய்தவாறே இரண்டு மீனவர்கள் அந்தத் தீவிற்கு வந்ததும், அது அம்பிகையின் அருள்தான் என்று மூவரும் உணர்ந்தனர். அவர்களிடம் பூசாரி தானிருக்கும்



தீவைப்பற்றிக் குறிப்பிட்டுத் தன் குடும்பத்தை உடனே தன்னுடைய தீவிற்கு வரச் சொன்னார்.

அவ்வாறே வியாபாரியும், கூற, பிச்சைக்காரன் தனது மற்ற பிச்சைக்கார நண்பர்களை அங்கு வருமாறு கூறினான். விரைவிலேயே, இருவரின் குடும்பத்தினரும், மற்றும் ஆர்வமுற்ற பலரும் அந்தத் தீவிற்கு வந்தனர். பிச்சைக்காரர்களும் அங்கே படை எடுத்தனர். எல்லோருமாகச் சேர்ந்து அம்பிகைக்கு ஒரு கோயில் எழுப்பினர்.

அதனால் மகிழ்ச்சியுற்ற அம்பிகை அவர்கள் முன் தோன்றி, "உங்களுடைய செய்கையால் மிக்க மகிழ்ச்சியுற்றேன்! இப்போது, நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு வரம் கேளுங்கள்!" என்றாள் அம்பிகை. "நான் இங்கேயே வசிக்க விரும்புகிறேன். உனக்கு தினமும் முறைப்படி பூஜை, புனஸ்காரம் செய்ய விரும்புகிறேன்" என்றான் பூசாரி.

"தாயே! இங்குள்ள தேங்காய், பேரீச்சம் பழங்களை விற்று வியாபாரம் செய்ய விரும்புகிறேன். அந்த வியாபாரம் நன்கு செழித்து நான் ஏராளமான செல்வத்திற்கு அதிபதியாக வேண்டும்!" என்றான் வியாபாரி. "அம்மா! எனக்கு

வெள்ளியிலான ஓடு அளிப்பாய்! அதைக் கொண்டு பிச்சையெடுக்க விரும்புகிறேன்! என்றான் பிச்சைக்காரன். அவர்கள் கேட்ட வரங்களை அளித்துவிட்டு அம்பிகை மறைந்தாள்.

சக்தி வாய்ந்த அம்பிகையின் கோயில் அந்தத் தீவில் இருப்பதைக் கேள்விப்பட்டு ஆயிரக்கணகான பக்தர்கள் தினமும் அங்கே வர ஆரம்பித்தனர். அவர்கள் கோயில் பூசாரிக்குத் தந்த காணிக்கைகளினால், பூசாரிக்கு நிறைய வருமானம் கிடைத்தது. கோயிலுக்கு வரும் பக்தர்களுக்குத் தேங்காய், பேரீச்சம்பழம் விற்பனை செய்தே, வியாபாரி பெரிய செல்வனாகி விட்டான்.

ஆனால், வெள்ளித் திருவோட்டுடன் கோயிலில் அமர்நத பிச்சைக்காரனை வெள்ளித் திருவோடு வைத்திருக்கும் பணக்காரன் பிச்சைக்காரன் போல் வேடம் போடுகிறான் என்று நினைத்து, பக்தர்கள் மற்ற பிச்சைக்காரர்களுக்கே தர்மம் செய்தனர்.

கதையைக் கூறி முடித்த வித்தியாசகர், "பார்த்தீர்களா? அம்பிகை மூவருக்கும் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான வாய்ப்பினை அளித்தும், இருவர் மட்டுமே அதை சரியாகப் பயன்படுத்திக் கொண்டனர். பிச்சைக்காரன் அதைப் பயன்படுத்தத் தவறி விட்டான். அதனால், யோகம் என்பது நம் அறிவின் திறத்தைக் கொண்டு கிடைத்த வாய்ப்பினை ஒழுங்காகப் பயன்படுத்துவதுதான்!" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை

## கொழும்பு, றோயல் கல்லூரி முன்னோடிப் பரீட்சை - 2013

## இரசாயனவியல்

அகிலவாயுமாறிலி $R = 8.314 JK^{-1} mol^{-1}$
அவகாதரோ மாறிலி $N_A = 6.022 X 10^{23} mol^{-1}$

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. அணு எண் 26 இனையுடைய மூலகம் $M$ ஆனது $M^{2+}$ நிலையிலும் $M^{3+}$ நிலையிலும் உருவாக்கக் கூடிய சோடியற்ற இலத்திரன்களின் எண்ணிக்கை முறையே
   1. 4 உம் 5 உம்
   2. 4 உம் 3 உம்
   3. 4 உம் 6 உம்
   4. 2 உம் 3 உம்
   5. 3 உம் 4 உம்
2. அணு எண் 3 – 18 வரையிலான மூலகங்களுள் பின்வரும் எச்சோடியானது அதியுயர் முதலாம் அயனாக்கல் சக்தியையும் அதிகுறைந்த இரண்டாம் அயனாக்கல் சக்தியையும் உடையது
   1. Ar , Na
   2. Na, Mg
   3. Li, Ne
   4. F, O
   5. Ne, Mg
3. உப அணுத்துணிக்கைகள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் எது உண்மையற்றது.
   1. இலத்திரன்கள் துணிக்கைத் தன்மையையும் அலை இயல்பையும் உடையன.
   2. மூலகங்களின் சமதானிகளிலுள்ள நியூத்திரன்களின் எண்ணிக்கை வேறுபடும்
   3. நியூத்திரனின் திணிவானது புரோத்தனின் திணிவிலும் அதிகம்
   4. சமதானிகள் சம எண்ணிக்கையான நியூக்கிளியோன்களைக் கொண்டிருக்கும்.
   5. அணுவொன்றின் கருவானது தனியே புரோத்தனையும் நியூத்திரனையும் கொண்டிருக்கும்.
4. பின்வரும் எக்கூட்டச் சோடிகள் $NH_4^+$ அயனிற்கு அண்ணளவாகச் சமனான கேத்திர கணித வடிவையுடையது
   1. $BF_4^-, SF_4$
   2. $XeO_4$ , $PCl_4^+$
   3. $XeO_4$ , $S_2O_3^{2-}$
   4. $S_2O_3^{2-}$ , $POCl_3$
   5. $BCl_4^-$ , $SCl_4$
5. பின்வரும் ஒழுங்குகளில் அமில வலிமையின் இறங்குவரிசையைச் சரியாகக் குறிப்பிடாத ஒழுங்கு எது
   1. $CH_3COOH > H_2O > CH_3OH > C_2H_2$
   2. $FCH_3COO^- > HC\equiv C^- > NH_2^- > CH_3^-$
   3. $FCH_2COOH > Br CH_2COOH > ICH_2COOH$
6. பின்வருவனவற்றுள் $H_2CO_3$ இன் திரவக்கரைசலுள் காணப்படக் கூடிய கூட்டங்கள் எவை
   1. $H_2CO_3$ , $H^+$ , $HCO_3^-$ , $H_2O$
   2. $CO_3^{2-}$ , $H^+$ , $H_2O$
   3. $CO_3^{2-}$ , $H^+$ , $HCO_3^-$ , $CO_2$ , $H_2CO_3$ , $OH^-$ , $H_2O$
   4. $CO_3^{2-}$, $HCO_3^-$ , $H^+$ , $H_2CO_3$, $H_2O$
   5. $H_2CO_3$, $H_2O$
7. பின்வரும் கூற்றுக்களுள் கூட்டம் 13 (IIIA) இணைப் பற்றிய கூற்றுக்களுள் தவறான கூற்று எது
   1. இக்கூட்டத்திலுள்ள எல்லா மூலகங்களும் உலோகங்கள்
   2. $Al_2O_3$ ஆனது ஈரியல்பைக் காட்டும் அதேவேளை $Al(OH)_3$ அனது ஈரியல்பைக் காட்டாது.
   3. Al ஆனது ஐதான $HNO_3$ உடன் ஈரியல்புத்தாக்கத்தினைக் காட்டும். ஆனால் செறி $HNO_3$ உடன் தாக்கமடையாது.
   4. Al இன் அனேக உப்புக்கள் அவற்றின் உயர் முனைவுத் தன்மை காரணமாக நீர்மயமாகும் இயல்பினைக் காண்பிக்கும்.
   5. $Al^{3+}$ இன் நீர்கரைசல் ஒன்றிற்கு ஐதான NaOH சேர்க்கும் போது செறி $NH_3$ இல் கரையக்கூடிய வெண்ணிற ஜெலட்டின் போன்ற வீழ்படிவைத் தோற்றுவிக்கும்.
8. பின்வருவனவற்றுள் சரியான கூற்று
   1. $NH_{3(g)}$ இற்கும் $K_{(s)}$ இற்குமிடையேயான தாக்கத்தில் $NH_3$ ஆனது ஒரு மூலமாகத் தொழிற்படும்.
   2. $FeSO_4$ இன் திரவக் கசைலுக்குள் ஐதான $NH_3$ இனைச் சேர்க்கும் போது முதலில் இளம்பச்சைநிற வீழ்படிவு தோன்றுவதுடன் மேலும் ஐதான $NH_3$ சேர்க்கும் போது அவ்வீழ்படிவு கரையும்.
   3. $Cu(NO_3)_2$ இன் திரவக் கரைசலினுள் செறி $NH_3$ இனைச்சேர்க்கும் போது இள நீல நிற $Cu(OH)_{2(S)}$ வீழ்படிவாகும்.
   4. $SO_{2(g)}$ இனை $CuSO_4$ கரைசலினுள் குமிழிடச் செய்வதன் மூலம் $CuSO_4$ கரைசலின் இள நீலநிறத்தைக் குறைக்க முடியும்.
   5. $NH_3$ ஆனது மிகை $Cl_{2(g)}$ உடன் தாக்கமடையும் போது $N_{2(g)}$ ஆனது விளைவாக உற்பத்தி செய்யப்படும்.
9. N இன் இரசாயனம் பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் எது உண்மையானது?
   1. $N_2O$ ஆனது நடுநிலையானது ஆனால் NO ஆனது சிறிதளவு அமிலமானது
   2. NO ஆனது நீரில் கரையும் அதேவேளை $N_2O$ நீரில் கரையாது
   3. NO வாயுவானது குளிரவிடும் போது இருபகுதியமாக்கப்படும்.
   4. $N_2O_3$ ஆனது கரைக்கப்படும் போது இருபகுதியத்தை உருவாகும்.
   5. $NH_4Cl$ இனதும் $NaNO_2$ இனதும் கலவையானது வெப்பப்பிரிகைக்குட்படும் போது $N_2O$ வாயுவானது உற்பத்தியாக்கப்படும்.
10. ஒரு அடிப்படைத்தாக்கமானது கீழே தரப்பட்டுள்ளது

    $$AB_{(g)} + BC_{(g)} \leftrightharpoons AB_2C_{(g)}$$

    $AB_{(g)}$ உருவாவதற்கான நியம வெப்பவுள்ளுறை $= -200 kJmol^{-1}$
    $BC_{(g)}$ உருவாவதற்கான நியம வெப்பவுள்ளுறை $= -600 kJmol^{-1}$
    $AB_2C_{(g)}$ உருவாவதற்கான நியம வெப்பவுள்ளுறை $= -1200 kJmol^{-1}$
    முன்முகத்தாக்தக்திற்கான ஏவற்சக்தி $= 700 kJmol^{-1}$
    பின்முகத்தாக்கத்திற்கான ஏவற் சக்தி யாது
    1. $900 kJmol^{-1}$
    2. $700 kJmol^{-1}$
    3. $600 kJmol^{-1}$
    4. $1100 kJmol^{-1}$
    5. $1200 kJmol^{-1}$
11. $NH_{3(g)}$ இனதும் $N_2H_{4(g)}$ இனதும் கலவை ஒன்று விறைப்பான பாத்திரமொன்றினுள் காணப்பட்டது. பாத்திரத்தின் அமுக்கம் $6.0 x 10^4 Nm^{-2}$ ஆகும். பாத்திரத்தின் வெப்ப நிலையை 1000K இற்கு உயர்த்தியதும் $NH_{3(g)}$ உம் $N_2H_{4(g)}$ உம் $N_{2(g)}$ ஆகவும், $H_{2(g)}$ ஆகவும் பூரணமாகப் பிரிகையடையந்தன. அதன் போதான அமுக்கம் $4.8 x 10^5 Nm^{-2}$ ஆகும்.
    $NH_{3(g)}$ , $N_2H_{4(g)}$ , $H_{2(g)}$ , $N_{2(g)}$ என்பன இலட்சிய நடத்தையைக் கொண்டிருப்பின் ஆரம்ப நிலையில் பாத்திரத்தில் காணப்பட்ட $NH_{3(g)}$ இன் சதவீதம் யாது?
    இலட்சிய வாயு நடத்தையுடையவையெனின் தரப்பட்ட நிபந்தனைகளில் ஆரம்பத்தல் $NH_3(g)$ இன் சதவீதம் யாது?
    1. 50
    2. 60
    3. 70
    4. 40
    5. 30
12. பின்வருவனவற்றுள் எது அயன் ஆரையின் இறங்குவரிசையைச் சரியாகக் காட்டுகிறது.
    1. $N^{3-} > O^{2-} > F^- > Mg^{2+} > Na^+$
    2. $N^{3-} > O^{2-} > F^- > Na^+ > Mg^{2+}$
    3. $N^{3-} > F^- > O^{2-} > Na^+ > Mg^{2+}$
    4. $O^{2-} > N^{3-} > F^- > Na^+ > Mg^{2+}$
    5. $F^- > O_2^{2-} > N^{3-} > Mg^{2+} > Na^+$
13. டைபோரேன் ($B_2H_6$) ஆனது ரொக்கெட்டின் எரிபொருளாகப் பயன்படுகிறது. டைபோரேனின் தகனித்திற்கான சமன்பாடு வருமாறு

    $$B_2H_{6(g)} , + 3O_2(g) \quad B_2O_{3(s)} + 3H_2O_{(g)}$$

    பின்வரும் தகவல்களைக் கருத்திற் கொள்க.

    $$2B_{(s)} + 3/2\, O_{2(g)} \longrightarrow B_2O_{3(s)} \quad \Delta H = -1273 kJmol^{-1}$$
    $$H_{2(g)} + 1/2\, O_{2(g)} \longrightarrow H_2O_{(l)} \quad \Delta H = -286 kJmol^{-1}$$
    $$H_2O_{(l)} \longrightarrow H_2O_{(g)} \quad \Delta H = 44 kJmol^{-1}$$
    $$2B_{(s)} + 3H_{2(g)} \longrightarrow B_2H_{6(g)} , \quad \Delta H = 36 kJmol^{-1}$$

    டைபோரேனின் தகனத்திற்கான வெப்பவுள்ளுறை
    1. $-1480 kJmol^{-1}$
    2. $-2035 kJmol^{-1}$
    3. $-480 kJmol^{-1}$
    4. $-790 kJmol^{-1}$
    5. $4830 kJmol^{-1}$
14. மூடியதொகுதி ஒன்றினுள் 11.04g $N_2O_{4(g)}$ ஆனது $27^{\circ} c$ இலும் $1.0 x 10^5 pa$ இலும் பேணப்பட்ட சமநிலை கீழ்வருமாறு

    $$N_2O_{4(g)} \leftrightharpoons 2NO_{2(g)}$$

    60% $N_2O_{4(g)}$ வாயுவானது பிரிகையுற்றதெனில் பாத்திரத்தின் அண்ணளவான கனவளவு யாது?
    (N = 14 , O = 16)
    1. $3.2dm^3$
    2. $1.9dm^3$
    3. $4.8dm^3$
    4. $3.7dm^3$
    5. $0.9dm^3$
15. நீருடனான கரைதிறனைக் தாழ்வாகக் கொண்டிருப்பது பின்வருவனவற்றுள்
16. பின்வருவனவற்றுள் எவ்சேர்வையானது இலகுவாகக் கருநாடட கூட்டல் தாக்கத்திற்குட்படும்
17. பின்வரும் சேர்வையின் மிகச் சரியான IUPAC பெயரீடு யாது

    $$CH_3 - O - \overset{O}{\overset{\|}{C}} - CH_2 - \overset{CH_3}{\overset{|}{C}} = CH - CH_2 Br$$

    1. methyl 5 – bromo – 3 – methyl – 3 – pen – 3 enoate
    2. 3 – methyl – 5– methoxy – 1 – bromopent – 2 – enone
    3. 2 – methyl – 1 – ethoxy – 4 – bromobut – 2 – ene
    4. methyl 3 – methyl – 5 – bromopent – 3 – enoate
    5. methyl 3 – methyl – 1 – nitropent – 2 – enoate
18. சேர்வை A இன் நீரககரைசலானது $NaCl_{(aq)}$ உடன் வெண் வீழ்படிவு B இனைக் கொடுத்தது. வடிதிரவத்தினுள் $H_2S$ வாயுவினை குமிழியாக்கப்படும் போது கறுப்பு நிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்படிவு தோன்றியது. B ஆனது வெந்நீரினுள் கரைந்தது. அதனுள் KI ஆனது சேர்க்கப்பட்டு குளிரவிட மஞ்சள் நிறவீழ்படிவு ஒன்று உருவானது. A ஆனது ஐதான HCl உடன் பரிகரிக்க வாயுவை வெளிவிடவில்லை ஆனால் வெப்பபடுத்தும் போது செங்கபில நிற வாயு ஒன்று வெளிவிடப்பட்டது.

A ஆக இருக்கக் கூடியது

1. AgBr 2. $Ca(BrO_3)_2$ 3. $Fe(NO_3)_2$ 4. $Pb(NO_3)_2$ 5. $KNO_{3(s)}$

19. 0.2mol $dm^{-3}$ $CH_3COOH$ இன் 50$cm^3$ ஆனது 0.2mol $dm^{-3}$ NaOH இன் 20$cm^3$ உடன் சேர்க்கப்பட்டது. இறுதிக்கலவையின் pH பெறுமானமாக இருக்கக் கூடியது.

($Ka = 1.8 \times 10^{-5}$ mol $dm^{-3}$)

1. 3.28 2. 4.57 3. 4.25 4. 4.28 5. 2.35

20. குறித்த வன்நீர மாதிரி ஒன்று 96ppm $SO_4^{2-}$ இனையும் 183 ppm $HCO_3^-{}_{(aq)}$ இனையும் கொண்டது. அதில் காணப்பட்ட கற்றயன் $Ca^{2+}$ மாத்திரமே. 1000kg மேற்படி வன்நீரில் இருந்து $HCO_3^-{}_{(aq)}$ இனை அகற்றுவதற்குத் தேவைப்படும் CaO இனைவு யாது ($Ca = 40$, $C = 12$, $S = 32$, $O = 16$)

1. 1.0mol 2. 1.5mol 3. 3.5mol 4. 2.0mol 5. 0.5mol

21. $KIO_3$ இன் 0.10g இனைக் கரைப்பதன் மூலம் $KIO_3$ இன் திரவக் கரைசலொன்று தயாரிக்கப்பட்டது. இதற்கு மிகை $KI_{(aq)}$ கரைசல் சேரகப்பட்டது. மேற்படி கரைசலானது அமிலப்படுத்தப்படும் போது உருவான முழு $I_2$ உடனும் பூரணமாகத் தாக்கமடையப் பயன்படுத்திய சோடியம் தயோசல்பேற் கரைசலினளவு 45$cm^3$ ஆகும்.

$Na_2S_2O_3$ இன் செறிவாக இருக்கக் கூடியது .

($KIO_3 = 210$)

1. 0.042 mol $dm^{-3}$ 2. 0.03mol $dm^{-3}$
3. 0.062mol $dm^{-3}$ 4. 0.24mol $dm^{-3}$
5. 0.12mol $dm^{-3}$

22. அமில ஊடகத்தில் $2.68 \times 10^{-3}$ mol $A^{n+}$ இனை $AO_3^-$ ஆக ஒட்சியேற்ற $MnO_4^-$ இன் $1.61 \times 10^{-3}$ mol தேவைப்பட்டது. n இன் பெறுமானமாக இருக்கக் கூடியது.

1. 1 2. 2 3. 3 4. 4 5. 5

23. தரப்பட்ட பின்வரும் தொடர்புகளுள் தவறானது

1. தாழ்ந்துமியல்பு : $PbCl_2 < SnCl_2 < GeCl_2$
2. பங்கீட்டு இயல்பு – $LiCl < LiBr < LiI$
3. வெப்ப உறுதி - $BeCO_3 < MgCO_3 < CaCO_3$
4. அமில இயல்பு - $MgO < Al_2O_3 < SiO_2$
5. அயன தன்மை - $VCl_2 < VCl_3 < VCl_5$

24. பின்வரும் கூற்றுக்களுள் தவறானது

1. இல்மனைற்றும் ரூட்டைல் (Rutile) உம் Ti பிரித்தெடுப்பில் பயன்படும்
2. சீமெந்து உற்பத்தியில் சீமெந்தினை கடினப்படுத்துவதை பிற்போடுவதற்கு ஜிப்சம் பயன்படுத்தப்படும்.
3. டவுனின் கல செயற்பாடுகளில் NaCl இன் கொதிநிலையைக் குறைப்பதற்காக $CaCl_2$ ஆனது பயன்படுத்தப்படும்.
4. சோல்வே செயற்பாடுகளில் சோடியம் காபனேற் உற்பத்தியின் போது முதலில் பிறைன் கலவையானது $CO_2$ இனால் நிரம்பலாக்கப்படும்.
5. இரும்பு பிரித்தெடுப்பில் கேமற்றைற், மக்னறைற் என்பன பயன்படும்.

25. பின்வருவனற்றுள் எக்கூற்று உண்மையானது

1. புவியில் அதிகமாகக் காணப்படும் கூறு ஒட்சிசன் ஆகும்.
2. பிரையோன்கள் (Freons) அனது பச்சைவீட்டு விளைவை உண்டு பண்ணும் ஆனால் ஒசோன் படையில் அழிவை உண்டு பண்ணுவதில்லை.
3. வுளிமண்டல $CO_2$ நீரில் கரைதலால் மழைநீரின் pH இல் மாற்றமேற்படாது
4. மாசாக்கப்படாத நீரின் BOD (உயிரி இரசாயனத் தேவை)ஆனது COD (இரசாயன ஒட்சிசன் தேவை) க்குச் சமனாகும்.
5. இயற்கை சூழற்தொகுதியில் C இனை பதிப்பதற்கான ஒரேஒரு வழி முறை ஒளித்தொகுப்பேயாகும்.

26. கந்தத்தின் ஒட்சி அன்னயங்கள் பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் சரியானது

1. $S_2O_3^{2-}$ இன் மத்திய அணு $sp^2$ கலப்பாகும்.
2. $Pb(NO_3)_2$ இற்கும் $SO_3^{2-}{}_{(aq)}$ இற்குமிடையிலான தாக்கத்தின் விளைவாக உருவாகும் வீழ்படிவானது வெப்பமேற்றும் போது கறுப்பு நிறமாகும்.
3. $SO_4^{2-}$ இன் கரைசலுக்கு ஐதான $HNO_3$ இனைச் சேர்க்கும் போது S வீழ்படிவானதுடன் $NO_{2(g)}$ உம் வெளிவிடப்படும்.
4. $S_2O_3^{2-}{}_{(aq)}$ இற்கு $pb^{2+}{}_{(aq)}$ இனைச் சேர்க்கும் போது உருவாகும் வெண் வீழ்படிவு வெப்பமேற்றும் போது கறுப்பு நிறமாகும்.
5. $SO_4^{2-}{}_{(aq)}$ இற்கும் $BaCl_{2(aq)}$ இற்குமிடையேயான தாக்கத்தின் விளைவாக உருவாகும் வீழ்படிவானது ஐதான $HNO_3$ இல் கரையும்.

27. பின்வரும் அயன்களுன் மிக ஏற்றுக் கொள்ளத்தக்க உறுதியான இடைநிலை அயன் யாது?

28. பின்வரும் எச்சோடிச் சேர்வைகளை நடுநிலை $FeCl_{3(ag)}$ இன் மூலம் வேறுபடுத்தறிய முடியும்

29. பின்வருவனவற்றுள் எவ்சேர்வையானது இலகுவாக கரு நாட்டக்கூட்டல் தாக்கத்தில் ஈடுபடும்

30. சேதனச் சேர்வை x ஆனது ஒளியியல் ரீதியாக தொழிற்பாடுடையதும் Na உடனும் NaOH உடனும் தாக்கும் தன்மையுள்ளது. X ஆனது $NaNO_2$ உடனும் ஐதான HCl உடனும் அறை வெப்பநிலையில் தாக்கமடைந்து $N_2$ இனை உறபத்தி செய்யும். x ஆனது நடுநிலை $FeCl_3$ உடன் ஊதா நிறத்தைக் கொடுக்கும். $NaNO_2$/HCl உடன் $5\,°C - 10\,°C$ இல் x ஆனது தாக்கமடைந்து பெறப்படும் விளைவு பீனோலுடன் தாக்கமடைந்து செம்மஞ்சள் சாயத்தினைக் கொடுக்கும். பின்வருவனவற்றுள் x ஆக இருக்கக் கூடியது.

வினா 31 இலிருந்து 40 இற்கான அறிவுறுத்தல்கள்

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| (a) யும் (b) யும் மாத்திரம் திருத்தமானவை | (b) யும் (c) யும் மாத்திரம் திருத்தமானவை | (c) யும் (d) யும் மாத்திரம் திருத்தமானவை | (d) யும் (a) யும் மாத்திரம் திருத்தமானவை | வேறு தெரிவுகளில் எண்ணோ சேர்மானங்களோ திருத்தமானவை. |

31. தரப்பட்டுள்ள பின்வரும் கூற்றுக்களுள் உண்மையானது / உண்மையானவை?



a. கறுவாயிலுள்ள பிரதான இரசாயனச் சேர்வை இயூஜினோல் (Eugenol) ஆகும்.
b. கறுவாத் தண்டிலில் இருந்து பெறப்படும் கறுவா எண்ணெயிலுள்ள (cinnamon oil) பிரதான இரசாயனப் பதார்த்தம் சினமல்டிகைட் ஆகும்.
c. முக்கிய எண்ணெய் வகைகள் கொதிநீராவி காய்ச்சி வடித்தலின் மூலம் பிரித்தெடுக்கப்படுகின்றன.
d. உயர் வெப்பநிலைகளிலேயே முக்கிய எண்ணெய் வகைகள் பிரிகையடைய விடப்படுகின்றன.



32. Zn இன் நியம மின்வாய் அழுத்தம் - 0.76v ஆகும். ஒரு குறிப்பிட்ட உலோகம் L ஆனது உறுதியானது தனிவலுவளவுள்ள கற்றயனை உருவாக்கும். நியம Zn மின்வாயினாலும் நியம L மின்வாயினாலும் உருவாகும் கலத்தின் மின் இயக்க விசையானது 1.56v ஆகும். இவ்மின்னிரசாயனக்கலம் தொடர்பான பின்வரும் கூற்று/ கூற்றுக்களுள் எது உண்மையானது / உண்மையானவை?


a. மின்வாய் L இல் தாழ்த்தல் நடைபெறும்
b. மின்வாய் Zn ஆனது அனோட் ஆகும்.
c. L இன் நியமமின்வாய் அழுத்தம் - 0.80v ஆகும்.
d. மின்வாய் L ஆனது கரையும்.

33. பின்வரும் கூற்றுக்களுள் உண்மையானது/ உண்மையானவை?

a. குளோரோ பென்சின் ஆனது இலகுவாக கருநாட்டப் பிரதியீட்டுத் தாக்கத்திற்குட்படும்.

b.  ஆனது உலர் ஈதர் ஊடகத்தில் Mg உடன்  இனை உருவாக்கும்

c.  இனையும்  இனையும் வேறுபடுத்த $AgNO_{3(aq)}$ பயன்படுத்தப்படும்.

d.  ஆனது $CH_3^- N_2^+ Cl$ இனை விட உறுதியானது

34. பின்வரும் எச்சோவை/ சேர்வைகளில் NaOH(aq) கரைசலுடன் வெப்பமேற்றும் போது – cl கூட்டமானது – OH கூட்டத்தினால் பிரதியீடு செய்யப்படும் எவை உண்மையானவை?

35. ஊக்கிகளின் செயற்பாடுகள் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் எது / எவை உண்மையானவை?

a. ஊக்கிகள் முன்முகத்தாக்க வீதத்தையும் அதே போன்று பின்முகத்தாக்க வீதத்தையும் அதிகரிக்கும்
b. ஊக்கிகள் எந்தவொரு தாக்கிகளுடனும் தாக்கமடைவதில்லை
c. ஊக்கிகள் மீளும் தாக்கமொன்றின் சமநிலை மாறிலியை அதிகரிக்கும்.
d. ஊக்கிகளால் தாக்கமொன்றின் ஏவற் சக்தியை குறைக்க முடியும்.

36. $NaF_2$ ஆனது ஓர் உறுதியற்ற சேர்வை. இதனை விபரிக்கக்கூடிய பின்வரும் கூற்றுக்கள் உண்மையானது / உண்மையானவை

a. $NaF_2$ இன் சாலகச்சக்தி ஆனது மிக உயர்வு
b. K இன் முதலாம் இரண்டாம் அயனாக்கற் சக்திகளின் மொத்தப் பெறுமானம் மிக அதிகமாகும்.
c. F இன் இலத்திரன் பெறுகை வெப்பவுள்ளுறையானது புற வெப்பத்திற்குரியது.
d. மிக சிறிய அயன் ஆரையுடைய $K^{2+}$ இனால் உறுதியான பளிங்குச் சாலகத்தை உருவாக்க முடியாது.

37. பின்வரும் கூற்றுக்களுள் உண்மையானது / உண்மையானவை

a. $NH_4Cl_{(aq)}$ கரைசலினுள் $NaOH_{(aq)}$ கரைசீலைச் சேர்ப்பதன் மூலம் ஒரு தாங்கற் கரைசல் உருவாக்கப்படும்.
b. சில குறிப்பிட்ட தனிச் சேர்வைகளின் நீரக்கரைசலானது தாங்கற் கரைசலாகத் தொழிற்படும்
c. $CH_3NH_3^+Cl$ ஊட இன் நீரக்கரைசலானது தாங்கற் தன்மையைக் காட்டும்
d. தாங்கற் கரைசல்கள் எல்லா pH வீச்சிலும் தாங்கற் தன்மையைக் காட்டும்

38. இலட்சிய வாயுக்கள் பற்றிய பின்வரும் கூற்று / கூற்றுக்களுள் உணமையானது / உண்மையானவை

a. $P = \frac{2V}{3N}\overline{E}$ b. $P = \frac{3V}{2N}\overline{E}$ c. $P = \frac{2N}{3V}\overline{E}$ d. $P = \frac{3}{2}\frac{N}{V}\overline{E}$

39. $[Cr(NH_3)_6]Cl_3$ பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் உண்மையானது / உண்மையானவை

a. மைய அணு $d^2SP^3$ கலப்புடையதுடன் எண்முகி வடிவத்தைக் கொண்டிருக்கும்.
b. மேற்படி சேர்வையானது $AgNO_{3(aq)}$ உடன் வெண்வீழ்படிவைத் தரும்.
c. மத்திய உலோக அணுவானது +6 ஒட்சியேற்ற எண்ணை உடையது.
d. மத்திய அணுவின் ஒட்சியேற்ற எண்ணானது 0 ஆகும்.

40. கல்சியம் காபைட் ($CaC_2$) பற்றிய பின்வரும் கூற்றுக்கள் உண்மையானது / உண்மையானவை

a. இது தாழ்த்தும் வெளிற்றும் இயல்புடையது
b. நிலகரியை Ca உடன் தாக்கமடைய விடுவதன் மூலம் கைத்தொழில் ரீதியில் தயாரிக்கப்பட முடியும்.
c. நிலகரியை $CaCO_{3(s)}$ உடன் தாக்கடைய விடுவதன் மூலம் கைத்தொழில் ரீதியில் தயாரிக்கலாம்.
d. எதைன் வாயு தயாரிப்பிற்குப் பயன்படும்.

(மிகுதி நாளை...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆளும் கட்சியை எதிர்ப்பதற்கு ஆயிரம் காரணங்கள்....!

வடமாகாண சபைத் தேர்தலுக்கான தினத்தை தேர்தல் ஆணையாளர் நீண்ட காத்திருப்பின் பின்னர், அறிவித்திருக்கிறார். தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் நாள் நடைபெறவுள்ளது. தேர்தல் நடைபெறுவது உறுதி செய்யப்பட்டாலும் தேர்தல் அறிவித்தபடி நடக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. காவல் துறை, காணி அதிகாரங்களை நீக்கும்வரை அரசு வட மாகாணசபைத் தேர்தலை நடத்தக் கூடாது என வலியுறுத்தியும் 13- வது சட்ட திருத்தத்தையிட்டு இந்தியாவின் தலையீட்டுக்கு எதிராகவும் சிங்கள மக்களை அணி திரட்டி கொழும்பில் பெரும் போராட்டங்களை சிங்கள தேசியவாத அமைப்புகள் நடத்திவருகின்றன.

வடமாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதை எதிர்த்து சிங்கள தேசியக் கூட்டமைப்பு, நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது. அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ள நீதிமன்றம், தேர்தல் நடைபெறுவதற்கான நாளை ஒத்திப்போடலாம்.

கேள்வியும் அவரே பதிலும் அவரே என்பது போல், சட்டமா அதிபர் திணைக்களம் இப்போது ஜனாதிபதியின் நேரடி கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. எனவே, சட்டமா அதிபர் சுதந்திரமாக எந்த முடிவையும் எடுக்க முடியாது. வழக்கு விசாரணைக்கு வரும் போது சட்டமா அதிபர் வடமாகாண சபைத் தேர்தல் நடைபெறக்கூடாது என்ற மனுதாரர்களின் மனுவை எதிர்த்து வாதாடாது விட்டால் நீதிமன்றம் மனுதாரர்களுக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்க வாய்ப்பிருக்கிறது.

இந்தத் தேர்தலை மகிந்த இராஜபக்ஷ விரும்பி வைக்கவில்லை. நான்கு ஆண்டுகள் சாக்குப் போக்குச் சொல்லிப் பின்போட்டு வந்த வடமாகாணசபைத் தேர்தலை நடத்தியே ஆகவேண்டும் என்ற பன்னாட்டு சமூகத்தின் நிர்ப்பந்தத்தின் பெயரிலேயே தேர்தல் நடைபெறுகிறது.

வடமாகாணசபைத் தேர்தல் வடக்கு மக்களின் ஜனநாயகத்தை நிலைநிறுத்த இடம் பெறவில்லை, மாறாக இந்தியாவின் அழுத்தம் காரணமாகவே, வடமாகாணத் தேர்தல் இடம்பெறுகின்றது என, ஜே.வி.பி இன் பரப்புரைச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்திருக்கிறார்.

மாகாணசபை முறைமை கடந்த 25 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வருகிறது. 1988 ஆம் ஆண்டில் இருந்து ஐந்து ஆண்டுக்கு ஒருமுறை என்ற கணக்கில் பல முறை தேர்தல் நடந்துள்ளது. விதிவிலக்கு வடக்கும் கிழக்கும்தான். 1988 இல் ஒன்றிணைக்கப்பட்ட வட-கிழக்கு மாகாணத்துக்கு தேர்தல் நடைபெற்றது. அதன் பின்னர், கிழக்கு மாகாணத்தில் 2008, 2012 இல் தேர்தல் நடைபெற்றது.

ஆனால், வட மாகாண சபைத் தேர்தல் தான் சிங்கள- பவுத்த பேரினவாதிகள் மத்தியில் பெரிய கொந்தளிப்பைத் தோற்றுவித்துள்ளது. வடமாகாண சபையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றினால் அது, பிரிவினையில் முடியும், பிரபாகரனால் போராடிப் பெறமுடியாத தமிழீழத்தை த.தே.கூ இலேசாகப் பெற்றுவிடும் என்ற பரப்புரை தெற்கில் செய்யப்படுகிறது. "நாட்டைப் பிரிக்கும் 13-வது திருத்தத்தை முற்றாக ஒழிப்போம், ஒற்றையாட்சியைப் பாதுகாப்போம், மாகாணசபை முறையை, ஒழிப்போம் என்பதே சிங்கள பௌத்த பேரினவாதிகளின் போர்க்குரலாக இருக்கிறது. குறைந்த பட்சம் வடமாகாண சபைத் தேர்தலை வைக்கு முன்னர், காணி மற்றும் காவல்துறை அதிகாரங்கள் மாகாண சபைகளிடம் இருந்து பறிக்கப்பட வேண்டும் என்கிறார்கள்.

தமிழர் எந்த மாகாணத்தையும் தங்கள் சொந்த மாகாணமாகக் கொண்டாடக் கூடாது என்ற பேரினவாத சிந்தனையே காணி, காவல் துறை அதிகாரங்கள் பறிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைக்கு காரணமாகும்.

இந்த தீவிர சிங்கள- பேரின சக்திகளுக்குப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், கோத்தபாய, இராஜபக்ஷவே தலைமை தாங்குகிறார்.

"நாட்டில் சிங்களவர்கள் 78 விழுக்காடு இருக்கும்போது, வடக்கில் பெரிய நிலப்பரப்பில் தமிழர்கள் எப்படி 98 விழுக்காடு இருக்க முடியும்? இது இயற்கையானதா? இது திணிக்கப்பட்டதாகும். 13-வது சட்டத் திருத்தம் தேசியச் சிக்கலுக்கு தீர்வாக இருக்க முடியாது. அது முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்பது கருத்தாகும். என கொழும்பில் இருந்து வெளியாகும் டெய்லி நியூஸ் செய்தித் தாளுக்கு அவர் செவ்வி கொடுத்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் தனது பங்கிற்கும் இலங்கையில் மாகாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலிருந்தே காணி மற்றும் காவல்துறை அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு வழங்கப்படவில்லை என்றும் எனவே, தற்போது மட்டும் "காணி மற்றும் காவல்துறை அதிகாரங்கள் குறித்து அதிக அக்கறை கொள்ளத் தேவையில்லை. எனக் குறிப்பிட்டுள்ளார்.

வடமாகாணசபை தேர்தல் மாவட்டத்தில் 11 அரசியல் கட்சிகளும் 9 சுயேட்சைக் குழுக்களும் போட்டிபோடுகின்றன. த.தே.கூ இன் வாக்குகளைப் பிரிப்பதற்கே சுயேட்சைக் குழுக்கள் களமிறங்கியுள்ளன. புதிய பெண்கள் அமைப்பு என்னும் பெயரில் ஈ.பி.டி.பி, பெண் சுயேட்சைக் குழுவொன்றை வடமாகாண சபைத் தேர்தலில் இறக்கியுள்ளது.

வட மாகாண சபைக்கு 36+2 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் -16, கிளிநொச்சி-4, முல்லைத்தீவு-5, வவுனியா-6, மன்னார்-5, ஆக மொத்தம் 36+2 உறுப்பினர்கள். தேர்தல் மாவட்டம் ஒவ்வொன்றிலும் 3 வேட்பாளர்கள் மேலதிகமாகப் பட்டியலில் சேர்க்கப் படுவார்கள். எனவே, வேட்பாளர்களின் எண்ணிக்கை 51 ஆகும்.

வடமாகாணத்தின் 2012 மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில், தமிழர் 9 இலட்சத்து 93 ஆயிரத்து 741, முஸ்லிம்கள் 32 ஆயிரத்து 364, சிங்களவர்கள் 32 ஆயிரத்து 331 ஏனையோர் 326 ஆக மொத்தம் 10 இலட்சத்து 58 ஆயிரம் பேர் வாழ்கிறார்கள்.

ஐந்து கட்சிகள் அடங்கிய த.தே.கூ பொது வேட்பாளர் முன்னாள் நீதியரசர் சி.வி விக்னேஸ்வரன் நீங்கலாக, மீதி 50 இடங்களையும் தமக்குள் பிரித்துக் கொண்டுள்ளன. தமிழரசுக் கட்சி 19 , ஈ.பி.ஆர்.எல்.எவ் 9, ரெலோ 9, தமிழர் விடுதலைக் கூட்டணி 7, புளட் 6 என ஒதுக்கப்பட்டுள்ளன.

பெரும்பாலான வேட்பாளர்கள் பிரதேச அடிப்படையிலேயே நியமிக்கப்பட்டுள்ளார்கள் இப்படி நியமிக்கப்படும் பொழுது சில பிர்தேசங்கள் விடுபட வாய்ப்புண்டு.

வலிகாமம் வடக்கில் 1990 இல் சிங்கள இராணுவத்தினால் துரத்தப்பட்ட 29 ஆயிரம் தமிழ்மக்கள் இன்னமும் மீள குடியமர்த்தப்படவில்லை. அவர்கள் நலன்புரி மையங்களிலும் உறவினர் வீடுகளிலும் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்குச் சொந்தமான 6 ஆயிரத்து 382 ஏக்கர் காணியை சிங்கள இராணுவம் பறித்துவிட்டது. இந்தக் காணி சுவீகரிப்பு மிகவும் அநீதியானது. அடாத்தானது. தமிழ்மக்களது தன்மானத்துக்கு விடுக்கப்படும் அறைகூவல் எனலாம். சுமார் 5 ஆயிரம் மக்கள் காணி சுவீகரிப்பை எதிர்த்து நீதிமன்றம் போயுள்ளார்கள். ஆனால், நீதிமன்றத் தீர்ப்பை மகிந்த இராஜபக்ஷ அரசு மதித்து நடப்பதில்லை என்ற அவல நிலை இருக்கிறது.

நீதியரசர் விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக த.தே.கூ அறிவித்திருப்பது பல வட்டாரங்களில் பெரிய அரசியல் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அண்மையில் அலரிமாளிகையின் ஊடாக ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் நடத்திய கலந்துரையாடலின் போது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அவரைப் பேய் என்று மறைமுகமாக வர்ணித்துள்ளார். நாம் நினைப்பது போல பேய் ஒன்றும் கறுப்பானது அல்ல என்று சொல்வதன் மூலம் பேய் விக்னேஸ்வரனைப் போல சிவப்பு நிறத்திலும் இருக்கலாம் என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும், அவர் பேசுகையில் "நிறைவேற்று அதிகாரமுள்ள என்னிடமே காணி, காவல்துறை அதிகாரங்கள் இருக்கும். அவற்றை என்னிடம் இருந்து எவராலும் பறித்துவிட முடியாது. எந்தச் சூழ்நிலையிலும் காணி, காவல்துறை அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படமாட்டாது." எனச் சூளுரைத்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ அமைச்சரவையில் இருக்கும் சம்பிக்க இரண்வக்க, "வடக்கு மாகாணசபைத் தேர்தலில் த.தே.கூ வெற்றிபெற்று சி.வி.விக்னேஸ்வரன் முதலமைச்சரானால், தமிழ்மக்களுக்கு சுடுகாடே உறுதியாகும், 13வது திருத்தச் சட்டம் நாட்டின் இறைமை, தேசிய பாதுகாப்பு, தேசிய ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு அச்சுறுத்தலானது.

தமிழீழத்தை அமைத்துக் கொடுப்பதற்காக, இந்தியா கபட நோக்கத்துடன் 1987 ஆம் ஆண்டு இந்திய இலங்கை உடன்படிக்கை ஊடாக மாகாணசபை முறைமையை அறிமுகம் செய்ததுடன், அதில் பிரிவனைவாத அதிகாரங்களையும் உட்படுத்தியது. தற்போது வடக்கு மாகாண சபைத் தேர்தலின் ஊடாக தமிழீழக் கனவை நிறைவேற்றிக் கொள்ள இந்தியா முற்படுகிறது. இதற்கு ஒருபோதும் நாம் இடமளிக்கப்போவதில்லை.

த.தே.கூ இன் முதன்மை வேட்பாளரான சி.வி விக்னேஸ்வரன் வெற்றிபெற்றால் வடக்கு மக்களுக்கு பழையபடி கண்ணீர், குருதி மற்றும் சுடுகாடு என்பனவே உறுதிப்படுத்தப்படும். தெரிவு, வடக்கு மக்கள் வசமே உள்ளது. பிரபாகரனை நம்பி அழிவைத் தேடிக்கொண்டது போல, மீண்டும் த.தே.கூ. இன் அரசியல் ஊடாக வடக்கு மக்கள் அழிவைத் தேடிக்கொள்ளக் கூடாது" என தமிழ் வாக்காளர்களை அச்சுறுத்தும் தொனியில் பேசியிருக்கிறார். மீண்டும் இனக்கலவரம் வெடிக்கும் என மறைமுகமாகச் சொல்கிறார்.

விக்கினேஸ்வரனது நியமனத்தை விமர்சித்து தமிழர் தரப்பிலும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன என்பதும் இங்கு குறிப்பிடப்படவேண்டிய விடயமே. ஆயினும் இக்குற்றச்சாட்டுகள் விக்னேஸ்வரனின் தமிழுணர்வு மிக்க, மக்கள் நலனில் அக்கறைகொண்ட நடைமுறையினால் காலப்போக்கில் மாறிவிடக்கூடியவை.

தமிழ் மக்கள் இன்று நேற்றல்ல 1948 ஆம் ஆண்டு தொடக்கம் சிங்களப் பேரினவாத சக்திகளுக்கு எதிராகவே தேர்தல்களில் வாக்களித்து வந்துள்ளார்கள். இந்தத் தேர்தலில் மகிந்த இராஜபக்ஷ தலைமை தாங்கும் ஆளும் கட்சியையும் அதன் அடிவருடிகளையும் தோற்கடிப்பதற்கு தமிழ் மக்களுக்கு ஓராயிரம் காரணங்கள் உண்டு.

போர் ஓய்ந்துவிட்டதாயினும் தமிழர் தாயகத்தில் நில அபகரிப்பு, துரிதகதியில் சிங்களக் குடியேற்றங்கள், இராணுவ அடக்குமுறை, பௌத்த மத ஆக்கிரமிப்பு, இராணுவக் குடியிருப்புகள், மேலும் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் கலாசார சீரழிவு அதிகரித்தல், போரினால் பாதிக்கப்பட்ட 90 ஆயிரம் விதவைப் பெண்களின் குடும்பங்களுக்கு நீதி வழங்கப்படாமை, பூசா, வெலிக்கடை, இன்னும் பெயர் தெரியாத சிறைகளில் ஆயிரக்கணக்கில் தமிழ் இளைஞர்கள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் கொடுமை, காணாமற் போனவர்கள் பற்றி எந்த அக்கறையும் இன்றி இருத்தல், நான்கு ஆண்டுகள் முடிந்த நிலையிலும் மீள் குடியேற்றப்படாது 95 ஆயிரம் தமிழ்க் குடும்பங்கள் வீதியில் விடப்பட்டுள்ள நிலை, தமிழர்களுக்கான நிவாரணம், புனர்வாழ்வு, அபிவிருத்திக்காக சர்வதேசத்தால் வழங்கப்படும் நிதியுதவிகள் சரியான முறையில் கையாளப்படாமை, ஊடக மற்றும் சுதந்தரமின்மை, விலைவாசி உயர்வு என முக்கியமான பல காரணங்கள் உண்டு.

தமிழ் மக்கள் அதனைப் புரிந்து கொண்டு தான் உள்ளனர் என்பதனை நிச்சயம் அவர்களின் வாக்களிப்பு முடிவுகள் தெளிவுபடுத்தும்.

-நக்கீரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிவேரியாவில் துப்பாக்கிச்சூடு நடத்தியது யாரென கூறமுடியாது

## இராணுவப் பேச்சாளர் கூறுகிறார்

(கொழும்பு)

**குடிப்பதற்கு குடிநீர் கேட்டு வெலிவேரியாவில் நடைபெற்ற மக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் மீது துப்பாக்கி பிரயோகம் செய்ய உத்தர விட்டது யார் என்பதைத் தன்னால் கூறமுடியாது என தெரிவித்துள்ள இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய விசாரணை களின் பின்னர் அதனைக் கூறமுடியும் என கூறியுள்ளார்.**

வெலிவேரிய சம்பவத்தில் இரா ணுவத்தினர் மக்கள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்ததாக பல தரப் புகளிடமிருந்தும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் அதில் இராணு வம் தலையிட்டமை தொடர்பில் கொழு ம்பில் நேற்று முன்தினம் நடைபெ ற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இராணுவம் போன்ற சட்டத்தை மதிக்க வேண்டிய நிறுவனத்தை சேர்ந்தவர்கள் இப்படியான சம்ப வங்களின் போது எப்படி துப்பாக்கி. பிரயோகம் செய்தனர்? அதற்கு யார் உத்தரவிட்டது? என்று ஊடக வியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பிய போது பதிலளித்த இராணுவப் பேச் சாளர், விசாரணைகள் நடைபெ றுவதால் இந்த கேள்விக்கு தெளி வான பதிலை நான் வழங்க முடி யாது. ஆனால் இந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணை அறி க்கை இரண்டு வாரங்களில் இரா ணுவத் தளபதியிடம் கையளிக்கப் படும் என்றார்.

எதிர்காலத்தில் இவ்வாறான சம் பவங்களின் போது இராணுவம் பயன்படுத்தப்படுமா? என ஊடக வியலாளர் எழுப்பிய கேள்விக்கு தன்னால் ஜோதிடம் கூற முடியாது என்றும் அவர் குறிப் பிட்டார்.


வெலிவேரிய சம்பவத்தைக் கொண்டு சிலர் குழம்பிய குட்டை யில் மீன்பிடிக்க பார்க்கின்றனர். இராணுவம் குழப்பத்தை ஏற்படுத்து வதற்காக அங்கு செல்லவில்லை.

பிரச்சினைக்கு தீர்வு கண்டு மூடப் பட்டிருந்த வீதியை திறக்கவே இரா ணுவம் சென்றது.

இச் சம்பவத்தின் போது ஊடக வியலாளர்களுக்கு ஏற்பட்ட தாக்கு தல் மற்றும் இடையூறுகள் தொடர் பில் கருத்து தெரிவித்த அவர் அங்கி ருந்த நிலைமை தொடர்பாக ஊடக வியலாளர்களுக்கு யாவும் தெரியும் எனக் கூறினார்.

வெலிவேரிய சம்பவம் தொடர் பில் இறுதியான ஒரு முடிபுகளுக்கு வருவது பொருத்தமற்றது.

தவறுகள் நடந்திருக்குமாயின் இராணுவ சட்டத்திற்கு அமைவாக குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படும் என அவர் குறிப் பிட்டார். (அ-2)



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 197 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு மத்திய கல்லூரியின் பழைய மாணவர் அணிக்கும் கல்லூரி ஆசிரியர் அணிக்கும் இடையில் நடத்தப்பட்ட மாபெரும் 20:20 துடுப்பாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஆசிரியர் அணி வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது. இப்போட்டியில் ஆசிரியர் அணித்தலைவர் துரைரட்ணம் வெற்றிக்கேடயத்தப் பெற்றுக் கொள் வதை படத்தில் காணலாம். (படம்:-மல்லாகம் செய்தியாளர்)

# வெலிவேரியாவிற்கு செல்லுமாறு படையினரிடம் கோரியது நானே

## ஞானசார தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமது கோரிக்கைக்கு அமையவே பாதுகாப்பு படையினர் வெலி வேரிய போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு சென்றதாக பொதுபலசேனா அமைப் பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவி த்துள்ளார்.

சுத்தமான குடிநீரைக் கோரி வெலி வேரிய மக்கள் ஆர்ப்பாட்டம் நடத் தியிருந்தனர். இந்தப் போராட்டத் தில் சில குறைபாடுகள் காணப்படு வதை அவதானித்த நான் அது தொட ர்பில் பாதுகாப்புத் தரப்பினருக்கு அறிவித்தேன்.

போராட்டம் கலகமாக வெடிக்கக் கூடும் என்ற அச்சத்தில் தான் அவ் வாறு படையினருக்கு அறிவித்த தோடு பிரதேசத்தின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் அவர்களிடம் கோரியிருந்தேன்.

குடிநீர்ப் பிரச்சினை அடிப்படை யானது எனவும் அதற்குத் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்குமாறுமே தான் படையினரிடம் கோரியிருந் ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இடம்பெற்ற துர்ப்பாக்கிய நிலைமை வருத்தமளிப்பதாகவுள் ளது என அவர் மேலும் தெரிவித் தார். (அ-2)

# பாதுகாப்பு செயலாளரின் கட்டுப்பாட்டில் உயர் நீதிமன்று

## ஆங்கில ஊடகம் தகவல்

இலங்கையின் உயர் நீதிமன் றத்தை பாதுகாப்பு செயலாளர் கோத் தபாய ராஜபக்ஷ தமது கட்டுப்பாட் டுக்குள் வைத்திருப்பதாக ஆங்கில செய்தி இணையம் ஒன்று தெரிவித் துள்ளது.

தற்போது பிரதம நீதியரசராக உள்ள மொஹான் பீரிஸ் முன்னர் பாதுகாப்பு அமைச்சின் ஆலோச கராக செயற்பட்டு வந்துள்ளார்.

இந்நிலையில் அவரைப் பயன் படுத்தி கோத்தபாய ராஜபக்ஷ நீதித் துறையை குறிப்பாக உயர் நீதிமன் றத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

புகைபிடித்தல் நிறுவன வழக்கு ஒன்று அண்மையில் இடம்பெற்ற போது கோத்தபாயவின் ஆலோ சனையின் பேரில் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸே குறித்த நிறுவ னத்தின் சார்பில் சட்டத்தரணிகளை நியமித்துள்ளார்.

அத்துடன் அரசியல் சம்பந்தப் பட்ட வழக்குகளின் போது மொஹான் பீரிஸும் கோத்தபாய ராஜபக்ஷ வுமே சந்திப்புக்களை ஏற்படுத்துவ தாக தகவல்கள் வெளியாகியுள் ளன.

இதேவேளை முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க வுக்கு எதிராக குற்றவியல் பிரேர ணையைக் கொண்டு வந்தமை மற் றும் அதற்காக புதிய பிரதம நீதிய ரசராக மொஹான் பீரிஸை நிய மித்தமை என்பன கோத்தபாய ராஜ பக்ஷவின் ஆலோசனைக்கு அமை யவே என அந்த ஆங்கில இணை யச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள் ளது. (அ-2)

# வடக்கில் ஆயுர்வேத துறையை மேம்படுத்த நடவடிக்கை

வடபகுதியில் உள்ள ஆயுர்வேத சுதேச மருந்து விற்பனை நிலையங் கள் மற்றும் மருந்து தயாரிப்போர் மீது விசேட கண்காணிப்புப் பரிசோத னைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை வடக்கு மாகாண சுதேச வைத்திய திணைக் களம் செய்துள்ளது. ஒழுங்கு விதி களை மீறுகின்ற நிறுவனங்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்ப டவுள்ளது.

ஆயுர்வேத மற்றும் சுதேச வைத் தியத்துறையின் தனித்துவத்தை யும் தரத்தையும் மேம்படுத்துவ தோடு பக்கவிளைவுகள் அற்ற தூய மருந்துப்பாவனையை பொதுமக் கள் மத்தியில் மேல் நிலைப்படுத் துவ தற்கும் ஏதுவாக வடக்கு மாகாண சுதேச வைத்திய திணைக்களமும் சுதேச வைத்தியத்துறை அமைச்சும் இணைந்து அதற்கான ஏற்பாடு களை மேற்கொண்டுள்ளன.

விற்பனை செய்யப்படும் மருந் துப் பொருட்களும் மூலப் பொருட் களும் சுத்தமாகவும் சுகாதார முறை யிலும் காட்சிப்படுத்தப்பட வேண் டும். மருந்துகள் மூலப் பொருட்கள் அனைத்தும் அடையாளப்படுத்தும் சுட்டிகளைக் கொண்டிருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

மருந்து விற்பனை நிலையம் உரிய முறையில் பதிவு செய்திருப்பதை உறுதிப்படுத்தலும் பதிவுச் சான்றி தழை பார்வையில் படும்படி காட்சிப் படுத்தல், மருந்து உற்பத்திகள் நடை பெறுமாயின் அதற்கான அனும தியை ஆயுர்வேத திணைக்களத் தில் பெற்றிருத்தல், அதனைப் பார்வையில் படும்படி வைத்தல் என்பன உரிய முறையில் அனுசரிக்கப்பட வேண் டும்.

இவைகளை வலியுறுத்தி வட மாகாண சுதேச வைத்திய திணைக் கள ஆணையாளர் டாக்டர் திருமதி சியாமளா துரைசிங்கம் விரிவான சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி வைத் துள்ளமையும் குறிப்பிடத்தக் கது. (அ-2)

# 08.2013 06 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1661 - போர்த்துக்கல்லுக்கும் டச்சுக் குடியரசுக்கும் இடையில் டச்சு பிரேசில் தொடர்பாக உடன்பாடு எட்டப்பட்டது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானின் ஹிரோஷிமா நகர் மீது **அமெரிக்கா சின்னப் பையன்** என்ற பெயரைக் கொண்ட அணுகுண்டை வீசியது. இதில் ஏறக்குறைய 70ஆயிரம் பொது மக்கள் ஒரே நாளில் உயிரிழந்தனர். இதன் தாக்கத்தினால் மேலும் பல்லாயிரக்கணக்கானோர் அடுத்தடுத்த சில ஆண்டுகளில் இறந்தனர்.
- 1952-இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனைக்கு இடம் மாறியது.
- 1960 - கியூபா புரட்சி: அமெரிக்கா கியூபா மீது பொருளாதாரத் தடை விதித்ததை அடுத்து கியூபா தனது நாட்டில் இருந்த அமெரிக்க மற்றும் வெளிநாட்டு மூலதனங்களை நாட்டுடமை ஆக்கியது.
- 1961 - வஸ்தோக் 2: முதன்முதலாக ஒரு முழு நாள் மனிதன் விண்வெளியில் இருந்த பெருமையை சோவியத் விண்வெளி வீரர் [illegible]டோவ் பெற்றார்.
- 1962 - [illegible] இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1964 - அமெரிக்காவில் நெவாடா மாநிலத்தில் உலகின் மிகப் பழைமையானதாகக கருதப்பட்ட 4900 ஆண்டு பழைமையான புரொமேத்தியஸ் என்ற மரம் வெட்டப்பட்டது.
- 1990 - இலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் திராய்க்கேணி என்னும் இடத்தில் பெண்கள், முதியவர்கள் உட்பட 47 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1991 - உலகளாவிய வலை (WWW) தொடர்பான தனது ஆவணங்களை டிம் பேர்னேர்ஸ்-லீ வெளியிட்டார்.
- 1996 - செவ்வாயில் இருந்து தோன்றியதாகக் கருதப்படும் ஏ.எல்.எச் 84001 என்ற விண்கல் ஆரம்பகால உயிரினங்கள் பற்றிய தகவலைக் கொண்டிருப்பதாக நாசா அறிவித்தது.

**பிறப்பு**

- 1881 - அலெக்சாண்டர் பிளெமிங், நோபல் பரிசு பெற்ற அறிவியலாளர் (இ. 1955)

**இறப்பு**

- 1978 - திருத்தந்தை ஆறாம் பவுல் (பி. 1897)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க நாய்



அமெரிக்காவில் நாய்களுக்கான விசேட பயிற்சி முகாம் ஒன்று கடந்தமாதம் நடைபெற்றது. இந்த பயிற்சி முகாமில் கலந்து கொண்ட நாய்கள் அமெரிக்கக் கொடியையும் சூரியக் கண்ணாடி களையும் அணிந்திருந்தன.
இதில் கலந்துகொண்ட நாய் ஒன்றின் கவர்ச்சிகரமான தோற்றத்தை இங்கு காணலாம்.

## சீனாவில் சுற்றுலாப் பயணிகளின் வீதம் வீழ்ச்சி

கடந்த 2012ஆம் ஆண்டின் முதல் அரை இறுதிக்குள் சீனாவிற்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் இந்த வருடம் 14 சத விகிதம் குறைந்துள்ளதாக சீன அரசு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முக்கிய காரணமாகக் கருதப்படுவது காற்றில் உள்ள மாசு குறைபாடே என்று அத்தகவல்கள் தெரிவிக்கின்றன. 2.14 மில்லியன் பயணிகள் சீனாவிற்கு வந்ததாகக் கூறும் இந்தத் தகவல்மையம், கடந்த 2008ஆம் ஆண்டிலிருந்து சீனாவிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஆறு மாதங்களாகக் குறைவது இதுவே முதன் முறையாகும் என்றும் தெரிவித்துள்ளது .

நலிவடைந்துள்ள உலகப் பொருளாதாரமும், சீனாவில் காணப் படும் காற்றின் மாசுபாடுமே இதற்கு முக்கிய காரணங்களாகும் என்று சுற்றுலா வளர்ச்சித் துறையின் பீஜிங் சபைத் தலைவர் லு யோங் பத்திரிகை செய்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் இங்கு ஏற்பட்ட கடும் புகையில், காற்றில் உள்ள துகள்களின் அளவு 40 மடங்கு அதிகரித்து உலக சுகாதாரக் கழகத்தின் கவனத்தை ஈர்த்தது குறிப்பிடத்தக்கது.

## 'சுடர்' விட்டெரியும் தீயிலே.....



இந்தியாவின் சங்கரன்கோவில் அருகே மாவலியூத்திலுள்ள அக்னி மாலையம்மன் கோயில் ஆடித்திருவிழா அண்மையில் இடம்பெற்றது. இங்கு இடம்பெற்ற தீமிதிக்கும் திருவிழாவில் 10 தொன் விறகு கொண்டு வளர்க்கப்பட்ட தீயில் இறங்கி ஏராளமானோர் நேர்த்திக் கடன் செலுத்தினர். இங்கே தீ சுடர்ஒளியாய் பிரகாசிக்க அதன் மீது நடந்துவருகிறார் பக்தை ஒருவர்.

## "பாகிஸ்தானில் இந்துக்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது, இந்தியாவே எமக்கு பாதுகாப்பான நாடு" என்கின்றனர்

### கும்பமேளாவில் கலந்துகொள்ள வந்த பக்தர்கள்

அலகாபாத்தில் நடந்த கும்பமேளாவில் கலந்து கொள்ள வந்த ஏராளமான பாகிஸ்தான் இந்துக்கள், மீண்டும் நாடு திரும்ப மறுத்துவிட்டனர். அங்கு தங்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாகவும், இந்தியாவையே பாதுகாப்பான நாடாக கருதுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். மேலும், பாகிஸ்தானில் அவதிப்படும் இந்துக்களை, இந்தியாவில் அனுமதிக்க வேண்டும் என்றும், அவர்களின் வாழ்வாதாரத்திற்கு இந்திய அரசு உதவவேண்டும் என்றும் பாக்., இந்துக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனிடையே, ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில், ஏராளமான பாக்., இந்துக்கள் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர். அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் இல்லாதபோதும், மீண்டும் நாடு திரும்ப மறுத்துவிட்டனர்.

இவ்வகையில், பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்த, 33 இந்து குடும்பங்களுக்கு, அமெரிக்காவை சேர்ந்த இந்து அமைப்பினர், உதவிக் கரம் நீட்டியுள்ளனர். 'அமெரிக்க இந்து மகா சபா" என்ற பெயரில் இயங்கும் இந்த அமைப்பின் சார்பில், ஆறு கூடாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அவர்களுக்கு தேவையான உணவு மற்றும் சில அடிப்படை தேவைகளுக்காகவும் உதவித் தொகை வழங்கியுள்ளது. ஜோத்பூரில் உள்ள விஷ்வ இந்து பரிஷத் மற்றும் பஜ்ரங் தள் அமைப்பின் சார்பிலும், பாகிஸ்தான் இந்துக்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்க இந்து அமைப்பினர், விஷ்வ இந்து அமைப்பின் மூலம், பாக்., இந்துக்களுக்கு தங்கள் உதவித் தொகையை அனுப்பி வைத்துள்ளனர். இதுதவிர, பாக்., இந்துக்களுக்கு தேவையான, தண்ணீர் சுத்திகரிப்பு சாதனங்கள், சமையல் பாத்திரங்கள், மருந்துப் பொருட்கள் மற்றும் முக்கிய அடிப்படைத் தேவைகளை அமெரிக்க இந்து மகா சபை அமைப்பினர், வழங்கியுள்ளனர்.

அ.தி.மு.க கூட்டத்தில்

## ம.தி.மு.க வால் புலிகளின் இறுவெட்டுகள் விற்பனை

அதிமுக கூட்டத்தில் மதிமுக, விடுதலைப் புலிகளின் இறுவெட்டுகள் விற்பனை செய்யப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

சேலம் புறநகர் மாவட்ட அதிமுக சார்பில் தமிழக அரசின் 2 ஆண்டு கால சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் ஆத்தூரில் கடந்த 30ஆம் திகதி நடைபெற்றது. மறுநாள் ஆத்தூர் இலக்கியப் பேரவை பட்டிமன்ற நிகழ்ச்சி நகராட்சி அண்ணா கலையரங்கில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் மதிமுகவில் இருந்து அதிமுகவுக்கு சென்ற நாஞ்சில் சம்பத் உரை நிகழ்த்தினார். பொதுக்கூட்டம் மற்றும் பட்டிமன்றம் நடந்த இடங்களில் ஓடியோ மற்றும் வீடியோ இறுவெட்டுகள் விற்பனை செய்யப்பட்டன. நாஞ்சில் சம்பத் மதிமுகவில் இருந்தபோது பேசிய உரைகள் , மதிமுக கட்சி கொடியுடன் புகைப்படங்கள், விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் பற்றி விடுதலைப் புலி வீர வரலாறு, கரும்புலிகள் வீர வரலாறு, இந்திய அமைதிப் படையின் கொடுமைகள் என்று பல வகைப்பட்ட இறுவெட்டுகள் விற்கப்பட்டன. இப்படி அதிமுக கூட்டத்தில் மதிமுக, விடுதலைப் புலிகள் பற்றிய இறுவெட்டுகள் விற்கப்பட்டது அக்கட்சியினரை அதிர்ச்சி அடைய வைத்தது.

### நேர்மை, நாணயம், ஒழுக்கம் சற்றும் குறையாமல் மனித நேயம் மிக்க

## போராளியாகவே இறுதிவரை இருப்பேன்

நான் என் வாழ் நாள் முழுவதும் போராடிக் கொண்டே இருக்கிறேன். தொடர்ந்தும் நேர்மை, நாணயம், ஒழுக்கம் சற்றும் குறையாமல் மனிதநேயமிக்க போராளியாகவே இறுதிவரை இருப்பேன் என்று கூறியுள்ளார் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ.

மதிமுக சார்பில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி சென்னை மண்ணடியில் உள்ள அன்னை ஆயிஷா மஹாலில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வைகோ உரையாற்றுகையில்,

இஸ்லாம் மார்க்கம் சமூக நல்லிணக்கத்தையும், சகோதரத்துவத்தையும் நிலைநாட்டுகிறது. 'எதற்கும் அஞ்சாதே



தொடர்ந்து போராடு' என்று இஸ்லாம் சொல்கிறது. 'அதுபோல நான் என் வாழ் நாள் முழுவதும் போராடிக் கொண்டே இருக்கிறேன். தொடர்ந்து நேர்மை, நாணயம், ஒழுக்கம் சற்றும் குறையாமல் மனிதநேயம் மிக்க போராளியாகவே இறுதி வரை இருப்பேன்.

தற்போது மனிதர்களிடையே மனிதநேயம் பட்டுப்போய் இருக்கிறது. அதற்கு நம்மை சுற்றிக்கொண்டிருக்கும் மது எனும் கொடிய நெருப்புதான் காரணம். நினைத்துக்கூட பார்க்க முடியாத அளவில் கற்பழிப்புகள், கொலைகள் அன்றாடம் நடந்து கொண்டிருக்கின்றன. அனைத்து குற்றங்களுக்கும் பின்னணி யில் மது எனும் அரக் கன் இருக்கிறது. மிருகத்தைவிட கொடுமையானது மது. அதை ஒழிப பதற்காக தமிழ்நாடு முழுவதும் நடைபயணம் மேற்கொண்டு வருகிறேன். பொது வாழ்வில் இருப்பவர்கள் தூய்மையாகவும், நேர்மையாகவும் இருக்கவேண்டும். தன்னலம் உடையவர்களாக இருக்கக்கூடாது.

அரசியல் சூழ்நிலையில் சில நேரங்களில் எங்களுடைய நிலைப்பாடுகளில் மாற்றம் இருந்தாலும், எங்களுடைய அடிப்படை கருத்தில் இருந்து பின்வாங்கியது கிடையாது என்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிவேரிய பகுதியில் துப்பாக்கி சூடு நடத்த உத்தரவிட்டவர் யார்?

## மங்கள எம்.பி. கேள்வி



(கொழும்பு)

**வெலிவேரிய பகுதியில் இடம் பெற்ற கலவரத்தின்போது இராணுவத்தினரின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழுந்தவர்களின் சரியான எண்ணிக்கையை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக வெளியிட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வெலிவேரிய கலவரத்தில் மூவர் மட்டுமே உயிரிழந்துள்ளதாக அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ள போதிலும் பத்திரிகையில் வெளியாகியுள்ள அறிக்கைகளின் படி, மொத்தம் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

வெலிவேரிய பிரதேசத்திலிருந்து கிடைக்கும் தகவல்கள் கூட இதனையே உறுதிப்படுத்துக்கின்றன. குடிப்பதற்கு நீர் கேட்ட மக்கள் மீது இரக்கமற்ற வகையில் இராணுவத்தை அனுப்பி துப்பாக்கிச் சூடு நடத்தியது மட்டுமல்லாது, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையையும் மற்றும் சம்பவத்தின் உண்மை நிலையையும் நாட்டு மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் மறைக்க அரசாங்கம் முயற்சிக்கிறது.

எனவே, நாட்டுமக்களையும் உலக மக்களையும் மேலும் மேலும் முட்டாள்களாக்காது, வெலிவேரிய சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை அரசு உத்தியோகபூர்வமாக வெளியிட வேண்டும்.

அத்துடன் பொது சமூகத்துடன் தொடர்புபட்ட ஒரு பிரச்சினைக்கு பொலிஸாரை பயன்படுத்தாது, மிலேச்சத்தனமான பயங்கரவாதிகளுக்கு எதிராக இராணுவத்தை அனுப்புவது போன்று இராணுவ படையை அனுப்பி நிராயுத பாணிகளாக இருந்த அப்பாவி மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த கட்டளையிட்டவர் யார் என அரசாங்கம் இந்த உலகத்திற்கு வெளிப்படுத்த வேண்டும்.

இந்த சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ள ரத்துபஸ்வல மக்கள் மட்டுமல்ல முழு உலகமுமே காத்திருக்கின்றது என அவ் அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பத்தாயிரம் கோழைகளைவிட 100 தைரியசாலிகள் போதும்

## நாட்டை மாற்ற என்கிறார் சரத்

(கொழும்பு)

பத்தாயிரம் கோழைகளை விடவும் நூறு தைரியசாலிகளினால் நாட்டை மாற்றியமைக்க முடியும் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இன்று அரசியலில் ஈடுபடும் பலர் பாலியல் வல்லுறவு, கொலை, கொள்ளை போன்ற குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களாவர். பழைய அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயற்பட வேண்டின் மக்களுக்கு சேவையாற்ற முடியாது.

மக்களுக்கு சேவையாற்றுவதை விடவும், இவர்கள் தங்களது நலன்களை உறுதிப்படுத்திக் கொள்வதிலேயே ஆர்வம் காட்டிவருகின்றனர். இன்று பல வீடுகளில் மக்கள் மூன்று வேளையும் சாப்பிடுவதில்லை, மிகவும் சிரமப்பட்டு இரண்டு வேளை மட்டுமே உணவை உட்கொள்கின்றனர்.

கோழைகளே சட்டத்தை கையில் எடுத்து மக்களை அச்சுறுத்துவார்கள். நாம் சட்டத்தை மதிக்கின்றோம். எந்த சந்தர்ப்பத்திலும் குற்றச் செயல்களுக்கு இடமளிக்க மாட்டோம் என ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சோ தெரிவித்துள்ளார். (அ-2)

# இலங்கை விவகாரங்களில் சீனா தலையீடு செய்யாது

## அமைச்சர் ராஜித

(கொழும்பு)

இலங்கையில் உள்விவகாரங்களில் சீனா தலையீடு செய்யாது என மீன்பிடி வள அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் வூ ஜியான் கோவை சந்தித்த போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சீனா எந்த சந்தர்ப்பத்திலும் சிறிய நாடுகளை அபிவிருத்தி செய்வதில் ஒத்துழைப்பு வழங்கவே முனைப்பு காட்டி வருகிறது. தெற்காசிய பிராந்திய வலய நாடுகளுடன் சீனா பேணி வரும் நட்புறவு வரவேற்கத் தக்கது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீன மீன்பிடித் தொழில்நுட்பங்கள் இலங்கையிலும் பயனப்படுத்திக் கொள்ளப்படும்.

எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-2)



சாவகச்சேரி கலைமகள் முன்பள்ளி விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நகரசபை உறுப்பினர் த.சுதர்சன் மங்கல விளக்கு ஏற்றுவதையும் நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை முன்பள்ளியின் கொடியை ஏற்றி வைப்பதையும் சிறார்கள் அணிநடை நிகழ்விற்கு ஆயத்த நிலையில் நிற்பதையும் படங்களில் காணலாம்...

# மக்களின் சரியான தெரிவுகளே அபிவிருத்திகளை உறுதிப்படுத்தும்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு

(உதயநகர்)

மக்களின் சரியான அரசியல் முடிவுகளும் தெரிவுகளுமே அபிவிருத்திச் செயற்பாடுகளை தளர்வின்றி முன்னெடுக்க வழிவகுக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று உதயநகர் கிழக்குப் பகுதியில் பிரதேச அபிவிருத்தி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் போது உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர், பிரதேச அபிவிருத்தியிலும் மக்களின் வாழ்வியலிலும் குறிப்பிடத்தக்க மேம்பாடு எட்டப்பட்டுள்ளது. இருப்பினும் மக்களின் தேவைகள் அனைத்தும் முழுமையாக நிறைவுசெய்யப்படவில்லை. ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள் இளம் தலைமுறையினருக்கு வேலைவாய்ப்புக்களையும் தொழில்சார் பயிற்சிகளையும் வழங்கியுள்ளபோதும், மேலும் பல ஆயிரக்கணக்கான உழைக்கும் வர்க்கத்தினர் வேலைவாய்ப்புக்களை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். எனவே, அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும். இளம் தலைமுறையினருக்கு தொடர்ந்தும் வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படவேண்டும். மக்களின் தொழிற்றுறைகளும் வருமான மார்க்கங்களும் மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். எனவே, மக்களின் சரியான அரசியல் முடிவுக ளும் அது சார்ந்த தெரிவுகளுமே இச் செயற்பாடுகளைத் தளர்வின்றி முன்னெடுக்க வழிவகுக்கும். இதனிடையே முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி செயற்பாடுகளில் தளர்வு நிலை ஏற் படுத்தப்பட்டுமாயின், அது பாதிப் புக்களை சுமந்த எமது மக்களின் வாழ்க்கைத்தரத்திலும் பிரதேச மேம் பாட்டிலும் மீண்டுமொரு பாதிப்பை ஏற்படுத்தும்

எனவே, பாதிப்புக்களில் இருந்து மீண்டெழ வேண்டும் என்ற சிந்தனையுடன் உழைத்துவரும் எமது மக்கள் தமது இலக்குகளை எட்டக் கூடிய சிந்தனையுடன் செயற்பட்டு வருபவர்களின் கரங்களைப் பலப் படுத்த வேண்டும் என்றார். (அ-2)

# மரணத்தை ஏற்படுத்திய நபருக்கு 16,500 ரூபா அபராதம்

## வழக்கும் ஒத்திவைப்பு

பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் உழவு இயந்திரத்தால் மோதி ஒருவரின் உயிரைபறித்த நபரொருவருக்கு 16ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்துமாறும் மரணமானவரின் குடும்பத்திற்கு நட்ட ஈட்டை எதிர்வரும் தவணையன்று தீர்மானிப்பதாகவும் நேற்று திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் சம்பவதினம் உழவு இயந்திரத்தின் சாரதியாகப் பணியாற்றிய சந்தேக நபர், மணல் ஏற்றுமிடத்தில் உழவு இயந்திரத்துக்குப் பின்புறமாக நின்றுலொறியில் மணல் ஏற்றிக் கொண்டிருந்த கந்தன் வரதன் என்ற இளம் குடும்பஸ்தரை உழவு இயந் திரத்தால் மோதி விபத்துக்குள்ளாக்கி மரணத்தை ஏற்படுத்திய வழக்கு நேற்யைதினம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் இடம்பெற்றது. வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் அந் நபருக்கு கெதிராக குற்றச் சாட்டுக்கள் முன்வைக் கப்பட்டன.

அவற்றில் விபத்தை ஏற்படுத்தி மரணத்தை ஏற்படுத்தியமை, விபத்தைத் தடுக்கத் தவறியமை, எச்சரிக்கையின்றி வாகனத்தைச் செலுத்தியமை, சாரதி அனுமதிப்பத்திரம் இன்மை, காப்புறுதிப்பத்திரமின்மை என 5குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

முதலாவது குற்றச்சாட்டு விசாரணையில் மரணமான குடும்பஸ்தரின் உறவினர்கள் மன்றுக்கு சமுகம் அளிக்காமையால் குற்றவாளியை மறு தவணைக்கு ஆஜராகுமாறு நீதவான் உத்தரவிட்டார். ஏனைய 4 குற்றச் சாட்டுகளுக்கும் 16 ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தர விட்டதுடன் ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார். (அ-9-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ கல்குவாரியில் டைனமைட் வெடித்ததில் நான்கு வீடுகள் சேதம்



(குருமன்காடு)

வவுனியா ஆசிகுளம் கிராம அலுவலர் பிரிவின் யேசுபுரத்தில் உள்ள இராணுவ கல்குவாரியில் கல்லுடைப்பதற்காக சக்தி வாய்ந்த 30இற்கு மேற்பட்ட டைனமைட் குண்டுகள் தொடர்ச்சியாக வெடிக்க வைக்கப்பட்டமையால் சிதறிய கற்கள் மக்கள் குடிமனைகளுக்குள் வீழ்ந்து நான்கு வீடுகள் சேதமடைந்துள்ளன.

இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இதன் காரணமாக நான்கு வீடுகளின் கண்ணாடி ஜன்னல்கள் மற்றும் கூரைப்பகுதிகள் என்பன உடைந்து சேதமடைந்துள்ளன. விடுமுறை தினமாகையால் சிறுவர்கள் வீட்டு முற்றங்களில் விளையாடிக் கொண்டிருந்தபோதும் தெய்வாதீனமாக அவர்களுக்கு பாதிப்பு ஏற்படவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இச் சம்பவம் காரணமாக அப்பகுதி மக்கள் வெளியில் நடமாடுவதற்கு அஞ்சுகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்திற்கு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் கதிர்காமு பரமேஸ்வரன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இது தொடர்பாக இராணுவ அதிகாரியை அழைத்து விசாரணை செய்யவுள்ளதாகவும் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார்.

(ம-250)

# கொள்ளை குற்றச்சாட்டு; சந்தேக நபருக்கு விளக்கமறியல்



கொக்குத்தொடுவாய் பகுதியில் கடந்த 26 ஆம் திகதி இரவு ஒரு மணியளவில் வீடு ஒன்றினுட்புகுந்து ஒரு இலட்சத்து 67 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான தங்க நகைகள், பணம் ஆகியவற்றை கொள்ளையடித்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட நபர் ஒருவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்குறித்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய நபரை முல்லைத்தீவு பொலிஸார் நீதிமன்றில் ஆஜர்படுத்தியவேளை வழக்கை விசாரித்த முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா குறித்த நபரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

மேலும் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் இந் நபர் தொடர்புபட்டுள்ளதாகவும் அதனால் சாட்சிகளுக்கு இடையூறு செய்வார் எனவும் அவ்வழக்குகளின முழுமையான விசாரணை முடியவில்லை எனவும் பொலிஸார் மன்றுக்கு தெரிவித்திருந்தனர். அத்துடன் இந்நபர் கைது செய்யப்பட்ட பின் அப்பிரதேசத்தில் கொள்ளைச் சம்பவங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும் மேலும் இக் கொள்ளைச் சம்பவங்களுக்கு உடந்தையாக உள்ள சிலரைத் தாம் கைது செய்யவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-ம)

## மின்சாரம் இன்மையால் அல்லலுறும்

# சிவிக் சென்ரர் கிராம மக்கள்

**கிளிநொச்சி மாவட்ட வட்டக்கச்சி பகுதியில் உள்ள சிவிக் சென்ரர் கிராமத்திற்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை என பல தடைவைகள் உரிய தரப்பினரிடம் முறைப்பாடு செய்தும் எதுவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**



போரினால் அனைத்தையும் இழந்து நிர்க்கதியாக்கப்பட்ட நிலையில் கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இம் மக்களுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

இக் கிராமத்தில் 250 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் இப்பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படாமையால் மின்சாரத்தினூடாக மேற்கொள்ளப்படும் வேலைகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் உள்ளன.

குறிப்பாக பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்கள் அதற்கு தம்மை ஆயத்தம் செய்வதற்காக பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

அத்துடன் மின்சாரத்தினூடாக தமது வாழ்வாதார தொழிலை மேற்கொள்வோர் அதனை மேற்கொள்ள முடியாது அல்லலுறுகின்றனர்.

சிவிக் சென்ரர் கிராமத்திற்கு அருகில் உள்ள வட்டக்கச்சி பாடசாலை மற்றும் வட்டக்கச்சி வைத்தியசாலை ஆகியவற்றிற்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளபோதும் இக் கிராமத்திற்கு மட்டும் மின்சாரம் வழங்கப்படாமைக்கான காரணம் யாது? என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கிராமங்கள் அனைத்தும் அபிவிருத்தி செய்யப்பட்டு வரும் நிலையில் எமது கிராமத்தில் மட்டும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என அப்பகுதி மக்கள் மேலும் கவலை தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இரணைமடுக்குளத்தை அண்மித்ததாகவுள்ள கட்சன் வீதிப் பகுதிக்கும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

எனவே, துறைசார்ந்த அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்து மேற்குறித்த கிராமங்களுக்கு விரைவில் மின்சாரம் வழங்கி உதவ வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-254)




## வீதியை புனரமைக்க கோரிக்கை

பன்னங்கண்டியில் இருந்து பரந்தன் முதலாம் கட்டை செல்லும் மூன்றாம் வாய்க்கால் வீதி புனரமைக்கப்படாமையால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே, மேற்குறித்த வீதியை உரிய தரப்பினர் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவ வேண்டுமென பயணிகள் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம)

## த.தே.கூ. வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வு

(குருமன்காடு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், மாகாண சபைக்கான வவுனியா மாவட்ட வேட்பாளர்களான ஜி.ரி.லிங்கநாதன், எஸ்.மோகன், எஸ்.தியாகராஜா, இ.இந்திரராஜா, எம்.பி.நடராசா, வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் ஆகியோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பீன் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வின் போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெரும்பான்மையுடன் ஆட்சியமைப்பதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. (ம-250)

## மரங்களைக் கடத்திய நபர்களுக்கு தண்டம்


தேராவில், ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு பகுதிகளில் உள்ள காடுகளுக்குட்புகுந்து சட்டவிரோதமாக 3 இலட்சம் பெறுமதியான பாலை, முதிரை மரங்களை வெட்டி கடத்த முற்பட்ட நான்கு பேருக்கு ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் மரக்குற்றிகளை அரசுடைமையாக்கி மரக்கூட்டுத்தாபனத்திற்கு பாரப்படுத்துமாறும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்குறித்த குற்றச் சாட்டுடன் தொடர்புடைய நான்கு நபர்களையும் கைது செய்து பொலிஸார் மன்றில் ஆஜர்படுத்தினர்.



வழக்கை விசாரித்த முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா மேற்குறித்த தீர்ப்பை வழங்கினார்.

முல்லைத்தீவு பகுதிகளில் அதிகளவில் சட்டவிரோதமான முறையில் மரக்குற்றிகள் வெட்டப்பட்டு கடத்தப்படுவதாக தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைத்து வருவதாக வனவள அதிகாரிகளும் பொலிஸாரும் மன்றில் தெரிவித்தனர். (அ-ம)



ஆ.முல்லை திவ்யனின் மூன்றாவது கவிதை தொகுதியான அம்மா காத்திருக்கக்கூடும் எனும் நூலின் வெளியீட்டு விழா அண்மையில் முல்லைத்தீவு மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வெறும் அழகி மட்டுமல்ல; அதற்கு மேலாக என்னை விட அழகானோர் பலர் நிச்சயம் உள்ளனர்.

*- இந்திய அழகி : லாரா தத்தா*

**வலம்புரி**

**T.P : 021 567 1530**

**website : www.valampurii.lk**

# நீ போகின்றபோது அழகு நீயோ வருகின்றபோது அழகு

மூத்தவளுக்கும் இளையவளுக்கும் இடையே போட்டி ஏற்பட்டுவிட்டது. இருவரில் யார் அழகி என்பதே போட்டி.

இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக ஸ்ரீமத் நாராயணனை இருவரும் அணுகு கிறார்கள்.

மூத்தவள் தரித்திரம் சார்ந்தவள். இளைய வள் இலட்சுமி கரத்தவள். இருவரும் தங்களில் அழகி யர் என்று நாராயணனிடம் கேட்க, நாராயணனோ இருவரையும் சிறிது தூரம் நடந்து சென்று திரும்பிவருமாறு கூறுகிறார்.

இருவரும் அந்தக் கட்டளையை ஏற்று நடந்து சென்று திரும்பிவருகிறார்கள். இப்போது யார் அழகி என்று தீர்ப்புச் சொல்லவேண்டும்.

நாராயணப் பெருமான் புத்திசாலித்தனமாக மூத்தவளைப்பார்த்து நீ போகின்றபோது அழகாய் இருக்கிறாய் என்றார். இளையவளைப் பார்த்து நீ வருகின்ற போது வடிவாய் இருக்கிறாய் என்றார். இதைக் கேட்டதும் இருவருக்கும் ஆனந்தம்.

இருவரும் அழகானவர்களாயினும் ஒருவர் போவது அழகு. மற்றவர் வருவது அழகு. இதற்குள் இருக்கின்ற தத்துவம் ஆழமானது. தரித்திரத்தாள் போனால் அது நல்லதல்லவா! அதேபோல் சீதேவி வந்தாள் நல்லது தானே!

போவதும் வருவதுமாகிய அழகு நிலையில் மாற்றம் நடந்துவிட்டால் எல்லாமும் நாசமாகி விடும்.

அதாவது மூத்தவள் வருவது அழகு என்றும் இளையவள் போவது அழகென்றும் தீர்ப்பளித்து விட்டால் எல்லாமுமே சங்காராபரணம்தான்.

எனவே வரவேண்டியவர் யார்? போகவேண்டியவர் யார் என்பதைத் தீர்மானிக்கும் அறிவையும் ஆற்றலையும் மக்கள் கொண்டிருக்க வேண்டும். ஏனோதானோ என்ற நிலைப்பாட்டில் எவரும் செயற்படலாகாது.

இப்போது கூட வடக்குமாகாண சபைக்கான தேர்தல் நடைபெறப்போகிறது. பல கட்சிகளும் சுயேட்சைகளும் களமிறங்கி போட்டி போடுகின்றன.

இவ்வாறு போட்டி போடுகின்றவர்கள் பல்வேறு உறுதி மொழிகளை முன்வைப்பார்கள்.

அவர்கள் உறுதி மொழிகளை முன்வைப்பது தேர்தல் பிரசார யுத்தி. அதில் நாம் எந்தக் குறையும் கூறலாகாது.

அவர்கள் முன்வைக்கின்ற உறுதிமொழிகள் நிறைவேற்றப்படக்கூடியவையா? உறுதி மொழியை முன்வைப்பவர்கள் செயல்திறன் வாய்ந்தவர்களா? என்பதையெல்லாம் தீர ஆராய்ந்து மெய்ப்பொருளைக் காண்பது மிகவும் அவசியமாகும்.

யாரும் வேட்பாளர்களாகப் போட்டியிடலாம். அது ஜனநாயகத்தின் பண்பு. அதேநேரம் இவர்களுக்குத்தான் வாக்களியுங்கள் என்று ஊடகங்கள் கூறுமாயின் அது ஜனநாயகத்திற்கு விரோதமான செயல்.

உண்மையில் மக்கள் அறிவானவர்கள். யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை அவர்களால் தீர்மானிக்க முடியும் - அவர்களே தீர்மானிக்கவும் வேண்டும். நாம் சொல்வதெல்லாம் போகின்ற அழகையும் வருகின்ற அழகையும் சிந்தித்து செயல்படுங்கள் என்பதுதான்.

# நடமாடும் மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிராந்திய சேவைகள் திணைக் களம், பசுபிக் பிராந்தியத்திற்கான அமெரிக்க விமானப்படை, இலங்கை விமானப்படை, கடற்படை, தரைப்படை, பங்களாதேஷ், மாலைதீவு ஆகிய படைகளுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை நடத்தும் நடமாடும் மருத்தவ முகாம் நாளை புதன்கிழமையும் தொடர்ந்து வியாழன், வெள்ளியாகிய இரு நாட்களும் அச்செழு மகா வித்தியாலத்தில் நடைபெறவுள்ளது.

இம்மருத்துவ முகாமில் கண் சிகிச்சை, பற்சிகிச்சை, தோற்கிசிச்சை, காது, மூக்கு, தொண்டை சிகிச்சை, பொது வைத்திய சோதனைகள் என்பன இலவசமாக வழங்கப்படவுள்ளன.

நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய இம்மருத்துவ முகாமில் வெளிநாட்டு வைத்தியர்கள் அவர்களுடன் இணைந்து தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், யாழ்.பல்கலைக்கழக மருத்துவ மாணவர்கள், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளைத் தொண்டர்கள் ஆகியோர் கலந்து கொண்டுமருத்துவ உதவிகளை வழங்கவுள்ளனர்.

எனவே குறித்த பகுதி மக்களும், நோயாளர்களும் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை அறிவித்துள்ளது. (செ-5)

# மஹோற்சவகால சிறப்பு சொற்பொழிவு

யாழ்.மாவட்ட அறநெறிப் பாடசாலை ஒன்றியமும் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோவில் நிர்வாகமும் இணைந்து நடத்தும் மஹோற்சவகால சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை முதல் 19ஆம் திகதி திங்கட்கிழமை வரை இடம்பெறவுள்ளது.

இதன்படி எதிர்வரும் 14ஆம் திகதி புதன்கிழமை முதல் 18ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் சிறப்புச் சொற்பொழிவுகளை முறையே அபிராமி என்னும் அருமருந்து என்ற தலைப்பில் சைவப்புலவர் கந்தசத்தியதாசனும் தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே எனும் தலைப்பில் சைவப்புலவர் கமலநாதனும் மீனாட்சி திருக்கல்யாணம் என்னும் பொருளில் சைவப்புலவர் கைலைநாதனும் கலை நாயகி என்னும் பொருளில் சைவப்புலவர் நித்தியதசீதரனும் நற்றுணையாவது நமச்சிவாயவே எனும் பொருளில் சைவப்புலவர் கந்தசத்தியதாசனும் வழங்கவுள்ளனர். எதிர்வரும் 19ஆம் திகதி தேர் அஞ்சலை (நேரடி வர்ணணை) நித்திய தசீதரன், கமலநாதன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (அ-5)

# சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

## இந்துவாக வாழ்வோம்

நல்லைக் கந்தப்பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்கள்

05.08.2013க்கான வினாவும் விடையும்:-

வினா:- வெற்றி அடைவதற்கான இரகசியம் யாது?

விடை: வெற்றிபெறவேண்டுமெனில் எங்கள் செயல்கள் அனைத்தும் இலக்கை நோக்கியதாக அமைய வேண்டும். இதற்கு எங்கள் எண்ணங்கள் அனைத்தும் இலக்கை நோக்கியதாக இருக்க வேண்டும் (மன ஒருமைப்பாடு). எண்ணங்கள் இலக்கினை நோக்கியதாக இருப்பதற்கு ஆலய வழிபாடு அவசியம். ஆகவே ஆலய வழிபாடே வெற்றியின் இரகசியம்.

06.08.2013: வினா:- ஒவ்வொரு இந்து வீட்டிலும் பசுவைப் பேணி வளர்க்க வேண்டிய காரணம் யாது?

விடை நாளை...

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடைகளை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி (01.09.2013) மாலை 4 மணிக்கும் 8 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் கையளிக்கும் போது துணுக்குகளில் வரும் கேள்விகளுக்கு சரியான பதிலைச் சொல்லும் அனைவருக்கும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். 18 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும் பங்கு பற்றலாம்.

சின்மயா மிஷன்
யாழ்ப்பாணம்

இல.9, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஓய்வுபெற்ற பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பொ.சிவப்பிரகாசம் எழுதிய தென்னிந்தியத் திருத்தலங்கள் பதினாறு நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொழும்புத்துறை ஸ்ரீ வதிரிபீட விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

இந்நூல் வெளியீட்டுக்கான ஆசியுரையை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் வழங்கவுள்ளார்.

நூலுக்கான ஆய்வுரையை யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய அதிபர் ம.ஞானசம்பந்தனும் சிறப்புரையை யா/திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலய அதிபர் ந.விஜயசுந்தரமும் வாழ்த்துரையை பிரம்மஸ்ரீ ச.இராஜேஸ்சர்மாவும் வழங்கவுள்ளனர். நூலின் முதற்பிரதியை சச்சிதானந்தம் சுரேஷ் பெற்றுக்கொள்ளவுள்ளார். (அ-5)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## ஒழுக்கத்தின் இலக்கணம்



❖ கடவுள் ஒவ்வொரு உயிரிலும் குடிகொண்டிருக்கிறார். இதைத் தவிர வேறு ஒரு கடவுள் உலகில் இல்லை.

❖ ரசாயனத்தைக் கற்பவன் இயற்கை என்னும் புத்தகத்தைப் படித்தறிவது போல, ஆன்மிகத்தைக் கற்பதற்கு படிக்க வேண்டிய நூல் மனித மனம்.

❖ எல்லையில்லாத சக்தி சுருள் சுருளாக இந்தச் சிறிய மனித உடலுக்குள் சுருட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சக்தியை உணர முயல்வது தான் ஆன்மிகம்.

❖ சமயம் சார்ந்த தத்துவ உண்மைகளை மூளையில் ஏற்றி கொண்டு குழப்பிக் கொள்ள வேண்டாம். உறுதி பிறழாத ஒழுக்கமே ஆன்மிகத்தின் அடிப்படை.

❖ சுயநலம் ஒழுக்கக்கேடு. சுயநலமின்மையே நல்லொழுக்கம். இது தான் ஒழுக்கத்திற்கு கொடுக்கக்கூடிய ஒரே இலக்கணம்.

❖ மனதிற்கோ, உடலுக்கோ பலவீனத்தை உண்டாக்கும் எதையும் கால்விரலாலும் தீண்டக்கூடாது. பலமே வாழ்வு. பலவீனமே மரணம்.

❖ கடவுளுக்குச் சமமான ஆற்றல் சாத்தானுக்கும் உண்டு. ஆனால், கடவுளுக்குச் சுயநலம் கிடையாது.

# ஆதிபராசக்தியின் ஆடிப்பூரத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

அல்வாய் மேல் மருவத்தூர் ஆதி பராசக்தி பீடத்தின் ஆடிப்பூரத் திருவிழா எதிர்வரும் 8ஆம் திகதி வியாழக்கிழமையும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளன.

இதன்படி எதிர்வரும் 8 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு சக்தி கொடியேற்றுதல், யாக ஆரம்பப்பூசை என்பன நடைபெறவுள்ளதோடு மறுநாள் வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு சிறப்பு அபிஷேகமும் தொடர்ந்து பாதபூசையும் யாகபூசையும் இடம்பெறும். அன்றையதினம் மதியம் யாகபூசை, கஞ்சி படைப்பு அன்னதானம் என்பன நடைபெறவுள்ளன. (அ-5)

# ஆடிப்பூரத் திருவிழா

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய ஆடிப்பூரத் திருவிழா எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன்போது அம்பாளின் திருமஞ்சன நீராடலும் அதனைத் தொடர்ந்து ருதுசாந்தி உற்சவமும் நடைபெற்று அம்பாளின் வீதியுலாவும் இடம்பெறவுள்ளது. (அ-5)

# 7ஆவது குருபீடாதிபதியின் குருபூசை தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் சிவகுருநாதர் குருபீட வேதாந்த மடத்தின் 7 ஆவது குருபீடாதிபதி ஸ்ரீமத் சோமாஸ்கந்த வேள் சுவாமிகளின் குருபூசை நிகழ்வு இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வேதாந்த மடத்தின் 8 ஆவது குரு பீடாதிபதி ஸ்ரீமத் வேதவித்யா சாகர சுவாமிகளின் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் தாவடியூர் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தரின் பண்ணிசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து சுவாமிகளின் சமாதிக்கு அபிஷேக ஆராதனைகளும் நடைபெறவுள்ளது. (அ-செ,5)

# கட்சி அலுவலகங்கள் திறக்கப்படுகின்றன

காரைநகர் சின்னாலடிப் பகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகம் திறப்பதற்கான அனைத்து வேலைகளும் நிறைவடைந்துள்ளன.

எதிர்வரும் வடமாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு அதற்கான பிரசாரங்களை மேற்கொள்ளவே இவ்வலுவலகம் திறக்கப்படவுள்ளது.

அத்தோடு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐ.தே.கட்சி ஆகியவற்றின் அலுவலகங்களும் திறப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ-9,246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயசூரியன் வெற்றிக் கிண்ணம் ஞானம்ஸ் அணி வசமானது



(கரவெட்டி)

வடமராட்சி உதயசூரியன் வெற்றிக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் இறுதியாட்டத்தில் வதிரி சிறி முருகன் அணியை 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்று கரவெட்டி ஞானம்ஸ் அணி சம்பியனாகியது.

உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தினால்நடத்தப்பட்ட வடமராட்சிக்குட்பட்ட 26 அணிகள் பங்கு பற்றிய அணிக்கு 10 ஓவர் 11 பேர் கொண்ட கிரிக்கெட் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உதய சூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய வதிரி சிறி முருகன் அணி 10 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 35 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சசிகரன் 9,ஹரிகரன் 7 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் சுதர்சன் 3, சேந்திரன், குணதீபன் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் அணி 7 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் சேந்திரன் 16, சுகந்தன் 8, துஷ்யந்தன் 7 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் உமைசுதன் 2, டெஸ்மன் ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இறுதியில் வதிரி சிறி முருகன் அணியை 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்று கரவெட்டி ஞானம்ஸ் அணி சம்பியனாகியது.

இப்போட்டியில் ஆட்டநாயகனாக ஞானம்ஸ் அணியின் சேந்திரனும் இத் தொடரில் சிறந்த துடுப்பாட்ட வீரராக அண்ணாசிலையடி அணியின் டிலக்ஷனும் அதிரடி வீரராக மைக்கல் அணியின் ரகுவரனும் சிறந்த கட்டமைப்பு அணியாக தும்பளை நாவலர் அணியும் தெரிவு செய்யப்பட்டன. (அ-9-24)

## ஜோதிலிங்க இரதபவனி

ஆடி அமாவாசை
காசி விஸ்வநாதர்-வடமராட்சி
காலை-மாலை
பருத்தித்துறை சிவன் கோயில்
இளைஞர் நிகழ்வு ஶ்ரீசத்யசாயி சேவா சமித்தி
1.காலை 9.30-11.00
2.மாலை 5.00-6.30
இரவு
நெல்லண்டை பத்ரகாளியம்மன் கோயில்
ஶ்ரீ சோமநாதர்-வலிகாமம்
காலை-இரவு
கீரிமலை நகுலேஸ்வரம்
இராமேஸ்வரம்- கிளிநொச்சி/ தென்னமராட்சி
காலை-மாலை
இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயம்
மாலை 3.00-4.30 இளைஞர் நிகழ்வு
மாலை 4.00 இரதபவனி அங்குரார்ப்பணம்
இரவு
திருவையாறு பிள்ளையார் கோயில்

# மீனவர் பிரச்சினை தொடர்பில் கடிதம் எழுதுவதில் பயனேதுமில்லை

## தி.மு.க.தலைவர் கருணாநிதி தெரிவிப்பு



(சென்னை)

**மாநில அரசு நமது மீனவர்கள் கைது செய்யப்படும் ஒவ்வொருமுறையும் பிரதமருக்கு கடிதம் எழுதுவதும் மத்தியரசு அதற்கு உடனடியாக இலங்கைத் தூதுவருக்கோ இலங்கை அரசுக்கோ கடிதம் எழுதுவதும் பின்பு காரியம் முடிந்துவிட்டதாக கருதி வாளாதிருப்பதும் சரியான செயலல்ல என தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இராமேஸ்வரம் மீனவர்கள் 20பேர் இலங்கைக் கடற்படையினரால் மீண்டும் சிறைபிடிக்கப்பட்டிருப்பதாக செய்தி வந்துள்ளது. எப்போதாகிலும் ஆறுமாதங்களுக்கு ஒருமுறை நடைபெற்று வந்த சம்பவம் தற்போது இரண்டொரு நாட்களுக்கிடையிலேயே அரங்கேறும் கொடுமையாக மாறிவிட்டது.

கடந்த இரண்டு மாதத்தில் மட்டும் இராமேஸ்வரம் மீனவர்கள் பத்துமுறை இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர். இரண்டு நாட்களுக்கு முன்பு இலங்கைக்கும் நாகைக்கும் இடையே சர்வதேச கடல் எல்லையில் மீன்பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 65 பேர் இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டனர்.

அதன்பின்னர் கோடியக்கரை அருகில் மீன்பிடித்துக்கொண்டிருந்த 74 மீனவர்களை பத்துக்கும் மேற்பட்ட படகுகளுடன் அவர்கள் சிறைபிடித்து திருகோணமலை கடற்படைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

ஏற்கனவே கைதாகி அனுராதபுரம் சிறையில் 21 மீனவர்கள் அடைக்கப்பட்டுள்ளனர். எனவே தமிழக மீனவர்களைத் தொடரும் இந்தத் துயரம் குறித்து மத்திய அரசும் மாநில அரசும் வெறும் கடிதப் பரிமாற்றத்தை மட்டும் செய்து கொண்டிராது பயனுள்ள முறையில் நேரடி நடவடிக்கை எடுக்கக்கூடிய அளவுக்கு விரைவில் முடிவெடுத்து செயற்படவேண்டும்.

இந்தப் பிரச்சினை வெளிநாட்டுப் பிரச்சினை என்பதால் தமிழகத்திலே உள்ள அரசியல் கட்சிகள் மத்திய, மாநில அரசுகளிடம் முறையிடவும். இலங்கைக் கடற்படையினரின் மனிதாபிதானமற்ற போக்கைக் கண்டிக்கவும்தான் முடிகிறதே தவிர வேறு எதுவும் செய்ய இயலாத நிலையில் இருக்கிறோம்.

எனவே மாநில அரசு ஒவ்வொரு முறை நமது மீனவர்கள் கைது செய்யப்படும் போதும் பிரதமருக்குக் கடிதம் எழுதுவதும் மத்திய அரசு உடனடியாக இலங்கைத்தூதுவருக்கோ இல ங்கை அரசுக்கோ கடிதம் எழுதுவதும் அத் துடன் காரியம் முடிந்து விட்டதாகக் கருதுவ தும் முறையல்ல.

மத்திய அமைச்சரிடம் முறையிட்ட மீனவர்கள் தாங்கள் கடந்த இரண்டு மாதங்களாக இந்தியக் கடற்பகுதியிலேயே மீன்பிடித்து வந்ததாகவும் அப்பகுதிகளில் மீன்வளம் குறைந்து விட்டதால் பெரும் நட்டம் ஏற்பட்டு குடும்பம் நடத்தமுடியாத நிலை ஏற்பட்டிருந்ததாகவும் இதனால் மீன்கள் அதிகம் இருக்கும் பகுதி நோக்கிச் சென்றபோது இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலுக்குள்ளாக வேண்டியுள்ளது என்றும் குறிப்பிட்டனர். அத்துடன் இலங்கைப் பகுதியில் குறிப்பிட்ட மாதங்களில் மீன்பிடிக்க உரிமை பெற்றுத் தரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

இந்தக்கோரிக்கைகளை முற்றிலும் அலட்சியப்படுத்திவிடாது மத்திய, மாநில அரசுகள் அக்கறையோடு ஆழ்ந்து பரிசீலித்து எந்த முறையில் மீனவர்களின் துயரத்தைக் களையலாம் என்பதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன் என அவர் அதில் கூறியுள்ளார். (அ-2)

# சிறைக்கைதிகளை விடுமுறையில் அனுப்புவதற்கு சுற்றுநிருபம்

(தும்பளை)

அனுமதிப்பத்திர அடிப்படையில் நாட்டிலுள்ள சிறைச்சாலைக் கைதிகளை விடுமுறையில் வீட்டுக்கு அனுப்புவதற்கான அறிக்கையொன்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,சிறைச்சாலைகளிலுள்ள கைதிகள் அவர் களின் அனுமதிப் பத்திரங்களினடிப்படையில் ஒருவாரம் அல்லது 10 மற்றும் 14 தினங்கள் விடுமுறையில் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப் படவுள்ளனர்.

இதற்கென சமூக நலன்புரி அலுவலர்கள் கைதிகளின் வீடு மற்றும் சூழல் என்பன தொடர்பில் தகவல்களைத் திரட்டி பிரதேச செயலகங்களுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

இதன்பின்னர் பிரதேச செயலகங்கள் கைதிகள் தொடர்பான அனைத்து விபரங்களையும் உள்ளடக்கிய விண்ணப்பத்தை சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ-9-19)




வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு முள்ளியானில் தேவா இலவசக் கல்வி நிறுவனத்தின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கல்வி நிறுவனத்தின் பெயர்ப்பலகையைத் திரை நீக்கம் செய்வதையும் நிகழ்வில் பங்கேற்றிருந்த மாணவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருநாள் போட்டியில் சங்கா முன்னேற்றம்




ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தலில் இலங்கை அணியின் குமார் சங்கக்கார மூனறாவது இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

தென்னாபிரிக்காவிற்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் மிகச்சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியதையடுத்தே குமார் சங்கக்கார மூன்றாவது இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

தென்னாபிரிக்காவிற்கெதிரான 5 போட்டிகளில் துடுப்பெடுத்தாடிய குமார் சங்கக்கார 93 என்ற சராசரியில், 107.51 என்ற அடித்தாடும் வேகத்தில் 372 ஓட்டங்களைக் குவித்து, அத்தொடரில் தொடர் நாயகனாகத் தெரிவாகியிருந்தார்.

இத்தொடர் ஆரம்பிக்கும் போது 776 புள்ளிகளுடன் 5ஆவது இடத்தில் காணப்பட்ட குமார் சங்கக்கார, தனது கிரிக்கெட் வாழ்வில் பெற்ற அதிக புள்ளிகளான 829 புள்ளிகளைப் பெற்று 3ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் முதலிடத்தில் காணப்பட்ட சுனில் நரைனோடு இணைந்து ரவீந்திர ஜடேஜாவும் முதலிடத்தைப் பெற்றுள்ளார். இலங்கையின் ரங்கன ஹேரத் 11ஆவது இடத்திலிருந்து 4ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

சகலதுறை வீரர்களுக்கான தரப்படுத்த லில் இலங்கையின் திலகரட்ண டில்ஷான் 4ஆவது இடத்திலும், அஞ்சலோ மத்தியூஸ் 6ஆவது இடத்திலும் காணப்படுகின்றனர். முதலிடத்தில் ஷகிப் அல் ஹசன் காணப்படுகிறார்.

## பாலகிருஷ்ணன் வெற்றிக் கிண்ணம் அரை இறுதிக்கு யாழ்.சென்றல் தெரிவு

பாலகிருஷ்ணன் வெற்றிக் கிண்ணத்துக்காக மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக் கழகம் முதன்முறையாக நடத்தும் இருபது - 20 துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் நான்காவது காலிறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் யாழ்.சென்றல் அணி, சென்றலைட்ஸ் அணியை 27 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்றல் அணி 20 ஓவர்களில் 7 இலக்குகளை இழநது 153 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக அன்ரூ 63, யசின்தன் 29, றொகான் 15 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணி சார்பாக சாள்ஸ், கோபி ஆகியோர் தலா 2 இலக்குகளையும், சௌமிதரன், வதூசனன் ஆகியோர்ஒரு இலக்கையும்கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 18.4 ஓவர்களில்சகல இலக்குகளையும் இழந்து 126 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக ஜேம்ஸ் 41, யூலியன் 37 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் சென்றல் அணி சார்பாக றஜீவ்குமார் 4, றொகான் 3, சுவாதீஸ், யசின்தன், சலிஸ்ரன் ஆகியோர் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற சென்றல் அணி, அரையிறுதிப் போட்டியில் யாழ்.ஜெனியன்ஸ் அணியைச் சந்திக்கும்.

இப்போட்டியின் மூலம் யாழ். நகரில்சிறந்த கழக அணித்தெரிவுக்கு யாழ்.சென்றல் அணி 4.5 புள்ளிகளையும், சென்றலைட்ஸ் அணி 1.9 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## வருண பகவான் குறுக்கிட | அவுஸ். சமநிலையானது

வருணபகவானின் தலையீட்டால் 3 ஆவது ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சமனிலையில் முடிபடைநதுள்ளது.

இங்கிலாந்து சென்றுள்ள அவுஸ்திரே லிய அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதலிரண்டு போட்டியில் வென்ற இங்கிலாந்து அணி 2:0 என்று முன்னிலையில் உள்ளது.

மூன்றாவது போட்டி மான்செஸ்டரில் நடநதது. அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 527 ஓட்டங்கள் எடுத்து டிக்ளேர் செய்தது. மூன்றாவது நாள் ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 7 விக்கெட்டுக்கு 294 ஓடடங்கள் எடுத்திருந்தது.

நேற்றுமுன்தினம்.நான்காவது நாள் ஆட்டம் நடந்தது. ஸ்டூவர்ட் பிராட் (32), பிரையர் (30) துணிச்சலாக போராட இங்கிலாந்து அணி பாலோ-ஆனை தவிர்த்தது. முதல் இன்னிங்சில் 368 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டு களையும் இழநதது. அவுஸ்திரேலியா சார்பில சிடில் 4 விக்கெட்டும் ஸ்டார்க் 3 விக்கெட்டும் வீழ்த்தினர்.

பின்னர்இரண்டாவதுஇன்னிங்சை தொடங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு ரோஜர்ஸ்12 ஓட்டங்களும் வோர்னர 41 ஓட்டங்களும் எடுத்தனர்.

கவாஜா24ஓட்டங்களும்வோட்சன 18 ஓட்டங்களும் ஸ்டீவன் ஸ்மித் 19 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். பின் வந்த அணித்தலைவர் மைக்கல் கிளார்க் பொறுப் புணர்ந்து விளையாடினார்.

தேநீர் இடைவேளைக்குப்பின் அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்சில் 7 விக்கெட்டுக்கு 172 ஓட்டங்கள் எடுத்து 331 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந்தது.

கிளார்க் 30 ஓட்டங்களும் ஸ்டார்க் 11 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். அப்போது போதிய வெளிச்சமின்மை காரணமாக போட்டியை நிறுத்த நடுவர்கள் எராஸ்மஸ், டோனி ஹில் முடிவு செய்தனர்.

இதற்கு அவுஸ்திரேலிய அணித் தலை வர் மைக்கல் கிளார்க் கடும் எதிர்ப்பு தெரிவித்தார். மின் ஒளியில் போட்டியை தொடரலாம் என்று வலியுறுத்தினார். இந்நிலையில் சுழற்பந்து வீச்சாளர்களை மட்டும் பயன்படுத்த முடியுமா என்று இங்கிலாந்து அணித்தலைவர் குக்கிடம நடுவர்கள் கேட்டனர். இதனை ஏற்ககுக் மறுத்து விட்டார்.

வேகப்பந்துவீச்சாளரை பயன்படுத்தினால் துடுப்பாட்ட வீரர்களுக்கு பாதுகாப்பு இருக்காது என்று கருதிய நடுவர்கள் போட்டியை நிறுத்துவதாக அறிவித்தனர். தொடர்ந்து மழை பெய்யவே நான்காவது நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

தொடர்ந்து நேற்றைய ஐந்தாம் நாள் ஆட்டத்தில் ஆரம்பத்திலேயே ஆஸி அணி தனது ஆட்டத்தை இடை நிறுத்திக் கொண்டது.

332 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தனது இரண்டாவது இனிங்ஸ் தொடங்கிய இங்கிலாந்து அணி 20.3 ஓவர்களில் 3 விக்கெட்டிழப்புக்கு 37 ஓட்டத்தினை பெற்றிருந்த போது மழை குறுக்கிட்டதால் ஆட்டம் நிறுத்தப்பட்டது தொடர்ந்து மழை பெய்ததால் ஆட்டம் சமநிலை என அறிவிக்கப்பட்டது.

போட்டியின் ஆட்ட நாயகனாக ஆஸி அணியின் தலைவர் கிளார்க் தெரிவானார்.

## இன்ஸ்பெக்டர் ...

திருந்த 80 பேரை விடுதலைப் புலிகள் கொன்று விட்டதாக பொலிஸாரின் தடுப்புக் காவலின் கீழுள்ள இவர், இவர்கள் கொலை செய்யப்பட்டதன் பின்னர், அவர்களின் உடல்கள் எரிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தக் கொலைகளை உறுதிப்படுத்திய கபில் அம்மான் தலைமையில் இயங்கிய மேலும் மூன்று விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் தடுப்புக் காவலில் இருப்பதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

2006ஆம் ஆண்டு மே மாதம் இவ்வாறு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 30 பேர் கண்கள் கட்டப்பட்டு ஒட்டுசுட்டான் காட்டுக்குள் கொண்டு செல்லப்பட்டு கொல்லப்பட்டதாக கூறியுள்ள அவர், 2006ஆம் ஆண்டு யூலை மாதம் மேலும் 50 பேர் இவ்வாறு கொல்லப்பட்டதுடன், அனைவரின் சடலங்களும் எரிக்கபபட்டதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் குறிப்பிட்ட சந்தேகநபர் தெரிவித்த தகவலின் படி, 2006ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வள்ளிபுனம் காட்டில் வைத்து இன்ஸபெக்டர் ஜெயரட்ணம் கொல்லப்பட்டுள்ள அதேவேளை, விசுவமடு தொட்டியடி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இராணுவ கப்டன் 2009ஆம் ஆண்டில கொல் லப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-11)

## கூட்டணியிலிருந்து...

மத்திய மற்றும் வடமேல மாகாண சபைத் தேர்தல்களில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுகின்றது. இந்த முடிவில் மாற்றத்தை ஏற்படுத்தி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிடுமாறு அரசாங்கம் முஸ்லிம் காங்கிரஸிக்கு பல்வேறு அழுத்தங்களைப் பிரயோகித்திருந்தது.


குறிப்பாக, வட மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் இடையில் பலத்த போட்டி நிலவக்கூடும் என்பதால், வடக்கில் மாத்திரமாவது இணைந்து போட்டியிடுமாறு முஸ்லிம் காங்கிரஸிக்கு அரசாங்கம் கோரிக்கை விடுத்திருந்தது.

ஆனால், அரசாங்கத்தின் கோரிககைகளை நிராகரித்த முஸ்லிம் காங்கிரஸ், தேர்தலில் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்து வேட்பு மனுக்களையும் தாக்கல் செய்து விட்டது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையிலேயே அரசாங்கத்தின் உயர்மட்டப் பிரமுகர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரை அழைத்து மேற்கண்டவாறு காட்டமாகக் கூறியுள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகித்துக் கொண்டு அரசாங்கத்துக்கு சங்கடம் ஏற்படுத்தும் வகையில் முஸ்லிம் காங்கிரஸ் அண்மைக் காலமாக செயற்பட்டு வருகின்றது. இது ஒரு ஆரோக்கியமான செயற் பாடல்ல என்று சுட்டிக்காட்டிய குறித்த உயர்மட்ட புள்ளி, அரசாங்கத்தின் கொள்கைகளை ஏற்று இருப்பதென்றால் இருங்கள், இல்லையேல் நீங்கள் நாளையே அரசாங்கத்தை விட்டு வெளியேறி விடுங்கள். அதனால் எந்தப் பிரச்சினையும் எமக்குக் கிடையாது. அரசாங்கம் ஒருபோதும் ஆட்டமும் காணாது என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் வட மாகாண சபைத் தேர்தலில் அரசாங்கம்தான் வெற்றி பெறும். நேர்மையான, நீதியான வெற்றியை நாங்கள் அங்கு ஈட்டுவோம் என்றும் அந்த உயர்மட்ட முக்கிய புள்ளி, முஸ்லிம் காங்கிரஸின் தலைவரிடம் மிக அழுத்தமாகக் கூறியுள்ளதாக அறியமுடிகின்றது. (செ-11)



சண்டே ரைம்ஸ் மற்றும் பாட்டா நிறுவனம் நடத்திய 2013-ம் ஆண்டுக்கான வட மாகாணத்தைச் சேர்ந்த சிறந்த கிரிக்கெட் அணித் தெரிவில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த ஆட்சியில் ஹிட்லரின் பிரதிபலிப்பு

## வடக்கு மோதலின் போது நாம் மௌனம் காத்தது தவறு- பாதுக்க

(கொழும்பு)

ஹிட்லர் ஆட்சியின் பிரதிபலிப்பே இன்றைய மஹிந்த சிந்தனை ஆட்சியில் நிலவுகின்றது. அதனையே வெலிவேரிய சம்பவம் மிகவும் தெளிவாக பிரதிபலிக்கின்றதென மேல் மாகாண சபை உறுப்பினர் நிரோஷன் பாதுக்க தெரிவித்தார்.

இராஜகிரியவில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் மோதல்கள், படுகொலைகள் மற்றும் சித்திரவதைகள் இடம்பெறும் போது நாம் மௌனமாக இருந்தோம்.

சிலாபம் மற்றும் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கொலைகள் இடம்பெற்றபோதும் நாம் சிங்கள பௌத்தர்கள் என அமைதியாக இருந்தோம்.

யாழ். பல்கலைக் கழக மாணவர்களுக்கு எதிராக வன்முறைகள் இடம்பெறும் போது அதற்கும் மௌனமாக இருந்தோம்.

முஸ்லிம்களுக்கு எதிராக அநீதிகள் இடம்பெறும் போது அது முஸ்லிம்களுக்கு என்றோம்.

எக்னெலிகொட மற்றும் லசந்த விக்கிரமதுங்க ஆகியோருக்கு எதிராக இடம்பெற்ற போது அவர்கள் பத்திரிகையாளர்கள் அரசுக்கு எதிராக எழுதியமையால் அவ்வாறு இடம்பெற்றது என்றோம்.

இந்தவகையில் வெலிவேரிய மக்கள் குடிநீர் கேட்டு வீதியில் இறங்கி அரசிடம் தீர்வு கேட்டதற்கு இராணுவத்தை பாவித்து அரசாங்கம் அம் மக்களை சுட்டுக் கொன்றுள்ளது.

மாவிலாறு வெற்றி குறித்து வீரவசனம் பேசிய சம்பிக்க ரணவக்க, உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ச ஆகியோர் எங்கே போய் விட்டனர்.

இராணுவத்திற்காக போதி பூஜை மற்றும் பிரித் ஓதி சமய வழிபாடுகளில் ஈடுபட்ட மக்களுக்கே அந்த இராணுவம் எதிராக செயற்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

# மகிந்த அரசு கொடூரமானது!

## வெலிவேரிய கலவரத்திற்கு கயந்த கண்டனம்

(கொழும்பு)

இரக்கம் எனக் கூறி, வீண் பேச்சுக்களை பேசி வரும் அரசாங்கம் மிகவும் கொடூரமான அரசாங்கம் என்பது தெரிய வந்துள்ளது என்று ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடை பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

வெலிவேரியவில் ஏற்பட்ட சம்பவத்தின் போது, வயதானவர்களா அல்லது கர்ப்பிணி பெண்களா என்பதைக்கூட அறியாது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

ஓய்வூதிய போராட்டத்தில் கட்டுநாயக்கவில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது றொஷான் சானக்க என்ற இளைஞர் கொலை செய்யப்பட்டார். இரக்கமுள்ள அரசாங்கம், துப்பாக்கி வேட்டுக்களாலும் நீர்த்தாரை தாக்குதல்களாலுமே மக்களுக்கு பதிலளித்து வருகிறது.

ரத்துபஸ்வல மக்கள் குடிநீரை கேட்டு வீதியில் இறங்கி போராடினர். அந்த சந்தர்ப்பத்தில் மக்கள் கொலை செய்யப்பட்ட பின்னர், அதில் மூன்றாம், தரப்பு நான்காம் தரப்பு சம்பந்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் கதைகளை கூறுகிறது.

இதன் மூலம் அரசாங்கத்தின் இயலாமையும் மிலேச்சத்தனமும் தெரிகிறது.

நாட்டின் பிரச்சினைகள் தொடரபில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுமே பதிலளித்து வருகின்றனர். இது சம்பந்தப்பட்ட துறைகளுக்கு நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் இயலாமையை காட்டுகிறது.

இதற்கு சிறந்த உதாரணம், பிரதேசசபை ஒன்று தீர்க்க வேண்டிய பிரச்சினையில் இராணுவம் தலையிட்டதாகும்.

அத்துடன் இந்த சம்பவம் தொடர்பில் அரசாங்கம் எதிர்காலத்தில் கட்டாயமாக ஒரு குழுவை நியமிக்கும். இந்த குழுக்கள் தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சிக்கோ, ரத்துபஸ்வல மக்களுக்கோ எந்த நம்பிக்கையுமில்லை.

இந்த விடயம் சம்பந்தமாக மக்கள் தேர்தலில் உரிய பதிலை வழங்க வேண்டும். முக்கியமாக இந்த அரசாங்கத்தின் நாசிஸ வாதத்தை தடுக்க மக்கள் முன்னோக்கி வர வேண்டும் என்றார். (செ-11)

## வெலிவேரிய...

அறிக்கை ஒன்றின் மூலம் இந்த மறுப்பை பொது பல சேனா வெளியிட்டுள்ளது.

தமக்கு அரசாங்கத்தையோ, பாதுகாப்பு அமைச்சையோ, படையினரையோ பாதிக்கச் செய்யும் செயல்களில் ஈடுபடும் திட்டம் இல்லை என்றும் அந்த அமைப்புக் கூறியுள்ளது.

வெலிவேரியவுக்கு தாமே படையினரை அனுப்பியதாக பொது பலசேனாவின் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் வெளியிட்டதாக கூறப்படும் செய்தி நேற்று ஊடகங்களில் வெளியாகியிருந்தது.

இதனை மறுத்துள்ள பொதுபலசேனா, இந்த செய்தி அரசாங்கத்தையும் பாதுகாப்பு அமைச்சு மற்றும் படையினரை உள்ளூர் மற்றும் சர்வதேசத்தில் பாதிக்கும் வகையில் வெளியிடப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளது. (செ-11)


### ரிக்கற் இலவசம், சாப்பாடு இருப்பிடம் இலவசம்
### 2 இலட்சம் சம்பளம்
### டென்மார்க்கில் படிக்க உழைக்க இன்னும் சில தினங்கள் மாத்திரம் இந்த வாய்ப்பு

சட்ட ஆலோசனைக்கு :

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 021 2219016, 0215689090



(C-4233)



### VACANCY
### 021-4993166

சர்வதேச முன்னணி நிறுவனத்தின் புதிய கிளைகள் 4 இற்கு O/L தோற்றிய, வயது 18 இற்கு மேற்பட்ட இலங்கையர்கள் 30 பேர் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

பயிற்சி, தங்குமிடம் இலவசம்.

பயிற்சியின் போது 12,000/=

பின் 35,000/=

**0779298842, 0779994807**

(C-4232)


## காணி, பொலிஸ்...

மீண்டும் அரசியல் வடிவில் கொண்டு வர அரசாங்கம் ஒரு போதும் இடமளிக்காது.

அதே போன்று ஜனாதிபதியும் அதற்கு ஒரு போதும் இடமளிக்கமாட்டார். மத்திய மற்றும் வட மேல் மாகாணங்களில் எமக்கு எவ்வித சவாலும் இல்லை. நாங்கள் வெற்றிப் பாதையிலேயே சென்று கொண்டுள்ளோம். எதிர்க்கட்சி என்று ஒன்று இன்றில்லை. பரவலாக மாகாண சபைத் தேர்தல்களில்தான் வாக்குகள் மிகவும் குறைவாக பாவிப்பது. எனவே இம்முறை வாக்களிப்பவர்களின் எண்ணிக்கையை 65-70 சத வீதமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

கடந்த வாரம் அலரி மாளிகையில் ஊடகப் பிரதானிகளைச் சந்தித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இலங்கையில் மாகாணசபை முறைமை அறிமுகப்படுத் தப்பட்ட காலத்திலிருந்தே காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட வில்லை.

இந் நிலையில தற்போது மட்டும் காணி மற்றும் பொலிஸ அதிகாரங்கள் குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டியதில்லை. என்னிடம் இருந்து குறித்த அதிகாரங்களை எடுத்துக்கொள்ள அனுமதிக்க முடியாது என்று சுட்டிக் குறிப்பிட்டிருந்தார் . (செ-11)


### தவறிவிட்டது

**720580950V** இலக்கமுடைய எனது அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், வரிச்சான்றிதழ், **CAT ATM CARD** என்பன அடங்கிய பிரயாணப் பொதி 04/08/2013 அன்று பருத்தித்துறைக்கும் உடுப்பிட்டிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தகவல் தரவும்.

சி.சிறிவிமலகாந்தன்

நெ. ம. ம. வி. வீதி, நெல்லியடி, கரவெட்டி

தொ. இல : 0750 437 570

(C-4234)


# 'பூநகரியில் புகழ்மாலை'

## இறுவட்டுகள் வெளியீடு இனிதே நிறைவேறியது





**பூநகரியில் சரவணப் பொய்கையின் நடராஜா திருஞான பவன், நடராஜா சதானந்த பவன்** சகோதரர்களின் படைப்பில் உருவாகி பிரபல தென்னிந்திய இசையமைப்பாளர் **அக்னி கணேஸ்** இசையமைக்க பிரபல தென்னிந்திய பாடகர்களால் பாடப்பட்ட 'பூநகரியின் புகழ்மாலை' இறுவட்டு **கிளி/பூநகரி மகா வித்தியாலய கலை, கலாசார பேரவையினால்** 01.08.2013 இல் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் அவர்கள் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக பிரபல தென்னிந்திய இசையமைப்பாளர் அக்னி கணேஸ் அவர்கள் கலந்துகொண்டார். முதற் பிரதியை முந்நாள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு.தி.இராசநாயகம் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் கிளி/பூநகரி மகா வித்தியாலய பாடசாலைச் சமூகம், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், சமூக சேவை அமைப்புகள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வின் ஞாபகார்த்தமாக கி/பூநகரி மகாவித்தியாலயத்தில் மரம் நாட்டும் நிகழ்வும் இடம்பெற்றது.

(3550) **தொடர்புகளுக்கு:** Saravanaapoikai@gmail.com, 001905-4706969


### வேலைவாய்ப்பு

சாதாரண தரம் (O/L) படித்து முடித்த இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு DYNAMIC MARKETING COMPANY தன் புதிய கிளைகளுக்கு 30 பேர் கொண்ட குழுவினருக்கு பயிற்சி கொடுத்து வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தர முன்வந்துள்ளது. தேர்வு செய்யப்படுபவர்களுக்கு... சந்தைப்படுத்தல், மொழித்திறன், கணனி, அலுவலக உட்கட்டமைப்பு, முகாமைத்துவம் போன்ற துறைகளில் முழுநேர 6 மாத காலப் பயிற்சி வழங்கப்படும். பயிற்சிக் காலத்தில் ஊக்குவிப்புத் தொகையாக ரூ. 3000/=ம் உணவு, தங்குமிடம் அனைத்தும் இலவசமாக வழங்கப்படுவதோடு மாதாந்தம் ரூ. 12,000க்கு குறையாத வருமானமொன்றைப் பகுதிநேரமாக கிடைப்பதற்கும் ஒழுங்குகள் செய்து தரப்படும்

- ★ 24 வயதுக்கு கீழ்ப்பட்டவராயிருத்தல் வேண்டும்.
- ★ வன்னிப் பகுதியிலிருந்து வருபவர்களுக்கு முன்னுரிமை.

அழைக்கவேண்டிய இலக்கம் **0775715920, 0750695649**

(1552)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org